The "BHARATI" Reg. No. M. 2456.

ஜூன் 1930.




மாலை 2. மணி 6.

ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

198529

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd. பிராஞ்ச், போடிநாயக்கனூர்

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்,

17. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

18. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லெக்ஷிமிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.


---


# விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |

¼-பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வதற்கும் கவர் பக்க விளம்பர விகிதத்திற்கும் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "பாரதி."



படங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாலிகை.

மாலை 2. மணி 6.

## பொருள் அடக்கம்.


தொடர் எண். பக்கம்.

1. திருக்கியில் கல்வி—திரு. வி. எ. பெருமாள் அவர்கள் 401
2. மதிப்புரை—(மனோகரனார்) ... ... 407
3. திங்களின் களங்கம்—திரு. T. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் M. A. ... 411
4. எனது குருநாதரின் கடிதம்—(மனோகரனார்) ... 416
5. காதலும் உற்பத்தியும்—திரு. சோமசுந்தரம் அவர்கள் ... 421
6. காந்தீயம்—திரு. கே. கோவிந்தராஜன் அவர்கள் ... 426
7. ஆலவின் அமுத மொழிகள்—திரு. A. சுருளியாண்டி அவர்கள் ... 431
8. அன்னையின் அழைப்பு—(ஆண்டி) ... ... 435
9. பாண்டித் துரைத் தேவர்—திரு. நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ... 451
10. புத்தபிரானது ஓர் சம்பாஷணை—ஆசிரியர், "பாரதி." ... 456
11. வாலிபர் இயக்கம்—திரு. சி. பொ. செல்லையா அவர்கள் 459
12. சத்யாக்ரக வீரம்—ஆசிரியர் திரு. பி. ஸ்ரீ. ... 468
13. ஆசிரியர் குறிப்புகள் ... ... ... 473

1. பத்திரிகைகளின் பாடு, 2. அடக்குமுறை, 3. வெள்ளை ஒளி, 4. உப்புத் தீர்வை, 5. இந்தியப் பெண்களது விழிப்பு, 6. இங்கிலாந்தில் இரு பெரிய பத்திரிகைகள், 7. தேசியக் கைதிகள், 8. அநாமதேய அறிக்கைகள், 9. தேசபக்தி யற்றவரொன்று எள்ளனம் செய்யேல், 10. வேலையாட்களைத் துன்புறுத்தல், 11. தடியடி தண்டப் பிரயோகம், 12. சைமன் கமிஷன் அறிக்கை, 13. இலங்கையில் இந்திய மக்கள், 14. பண்டித மோதிலால் நேரு.

படம்.

பண்டித மோதிலால் நேரு.

# பாரதி

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.

| மாலை 2 | உத்தமபாளையம் 1930-௵ ஜூன்௴ | மணி 6 |
|---|---|---|


## துருக்கியில் கல்வி அபிவிருத்தி.

ஸ்ரீமான் ஸி. எ. பெருமாள் அவர்கள்.

துருக்கி தேசம் முஸ்தபா கமால் பாஷாவின் புதிய அரசியல் முறையில் விசேஷ அபிவிருத்தி அடைந்து வருகிறது. பொது மக்களுக்கு நலன் பெருகும் பெருங் காரியங்களெல்லாம் அங்கு இலகுவில் ஈடேறி வருகின்றன. கமால் பாஷாவின் அரசியல் முறையும் அவரது உயரிய கருத்துக்களும் உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்து வருகின்றன. நாகரீகத்தில் தலை சிறந்து விளங்கும் உலக மக்களோடு துருக்கியர்களும் சம நிலை வகித்து வாழவும் உண்மையான முற்போக்கு

அடையவுமே கமால் பாஷா கருத்துக்கொண்டு வருகிறார். எனவே அவரது அரசியல் திறனும் வீரச் செயலும் இன்று எங்கணும் பேசப்படுகிறது.

## கமால் பாஷாவின் அரிய ஊழியம்

முஸ்தபா கமால் பாஷா தலைவர் பதவி யேற்று ஆட்சி புரிய ஆரம்பித்த காலத்தில் துருக்கி தேசம் சமூகக் குழப்பங்களுக்கும் சமய சச்சரவுகளுக்கும் உள்ளாகி யிருந்தது. உலக மகா யுத்தத்தின் போது கமால் பாஷா செய்து வந்த அரிய ஊழியங்களே அந் நாட்டு மக்கள் அவர்பால் விசேஷப் பற்றுளங் கொள்வதற்குப் போதிய காரணமாகும். அப்பால் அவர் ஜனநாயகப் பதவி வகித்து நாட்டின் சீர்திருத்தப் போங்குகளில் கவனம் செலுத்தவே பொது மக்கள் அவரது சிறந்த நோக்கத்தைப் பெரிதும் பாராட்டுவா ராயினர். இதில் அவரது முதல் நோக்கம் கல்வித் துறையைச் சீர்திருத்துவதே யாகும். இத் துறையில் அவர் செய்து முடித்து வரும் அரிய ஊழியங்கள் உலக நாடுகளை அதிசயிக்கச் செய்து வருகின்றன. துருக்கி பாஷையை லத்தீன் எழுத்துக்களில் மாற்றி யமைக்க அவர் எடுத்து வந்திருக்கும் சிரமும் ஊழியமும் மகா அற்புத மானது. துருக்கி பாஷை லத்தீன் எழுத்துக்களில் ஆக்கப்படல் வேண்டுமென்பது அந் நாட்டில் புதிதாக ஏற்பட்ட ஓர் கருத்து அன்று. வெகு காலத்திற்கு முன்னாலேயே அந் நாட்டு இலக்கியப் பேராசிரியர்கள் இதனை நன்குணர்ந்து விவாதித்து வந்தனர். ஆனால் அக் காலத்திய அரசாங்கம் அதனை மாற்றி யமைப்பதற்குப் போதிய சிரமமோ அன்றி ஆதரவோ அளிக்க முன் வரவில்லை. துருக்கி பாஷையின் ஆதி எழுத்துக்கள் உண்மையில் அழகு பொருந்தியவை யென்றும் வடிவமைந்தவை யென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அதனை ஒருவன் நன்கு பயிலுவதற்கு அநேக வருடங்கள் பிடிக்குமாம். சரியானபடி எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் ஒரு மனிதன் பழக வேண்டுமாயின் குறைந்தது 15 வருடங்கள் ஆகுமென்று கூறப்படுகிறது. எனவே குறைந்த காலத்தில் எளிதில் பயிலுவதற்கும் உயரிய கலைகளை மிகத் துரிதமாக நுகர்வதற்கும் ஏற்றதாக வுள்ள லத்தீன் எழுத்துக்களை அதில் இப்பொழுது புகுத்த அரசாங்கம் தீவிர

198529



முயற்சி எடுத்து வருகிறது. இப் புதிய மாற்றம் குறைவற ஏற்படுமாயின் துருக்கியில் 45 வயதிற் குட்பட்ட ஆண்களிலும் பெண்களிலும் கல்வி கற்க இயலாத ஒருவரையேனும் இரண்டு மாதங்களில் பார்க்க முடியாதென துருக்கி தேசம் எதிர் பார்க்கிறது.

## பாஷையின் கடினம்

துருக்கி பாஷை பெரும்பான்மை அரபி, பெர்ஷி, பழந் துருக்கி ஆகிய பாஷைகளின் கலப்பால் வழங்கி வரப்படுகிறது. அரபி பாஷையைப் போன்று துருக்கி பாஷையிலும் உயிரெழுத்துக்கள் அதிகமாக உபயோகப்படுத்தப்படுவ தில்லை. வார்த்தைகளில் மூன்று நான்கு மெய் எழுத்துக்கள் கலந்து வருவதால் அவ் வார்த்தைகள் தெரிந்தாலன்றி வாசிக்கும்போது அவைகளை அறிந்துகொள்வது மிகக் கஷ்டமாகத் தோன்றுமாம். தவிர எழுதும்போது அச்சாகினும் கையெழுத்தாகினும் ஒரே எழுத்து வார்த்தையின் முதலில் வரும்போது ஓர் வடிவத்திலும் இடையில் தோன்றும்போது மற்றோர் வடிவிலும் கடையில் வரும்போது வேறொரு வடிவிலுமாக மூன்று வித உருவங்களில் மாறுபடுவதால் அதைக் கவனித்து எழுதுவதற்கு மிகுந்த கஷ்டங்கள் ஏற்படுகிறதாம். ஆதலால்தான் அவ் வெழுத்துக்களை அறவே மாற்றவேண்டிய அவசியம் நேர்ந்ததெனச் சொல்லப்படுகிறது.

## லத்தீன் எழுத்துக்கள்

தற்போது வழங்கப்படும் புதிய துருக்கி பாஷையானது பூராவும் லத்தீன் எழுத்துக்களிலேயே திகழ்கின்றது. அரபி, பெர்ஷி ஆகிய பாஷைகளினால் நேர்ந்திருந்த இலக்கண விதிகள் யாவும் விலக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது வார்த்தைகள் எவ்விதம் உச்சரிக்கப்படுகின்றதோ அதற்குத் தகுந்தவாறே எழுதப்படுகிறது. இப் புதிய முறைப்படி ஒன்றோ அல்லது இரண்டோ மாதங்களில் மிக இலகுவில் எளிதில் விரைவாக யாரும் அதனை எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள நிலைமையில் உச்சரிப்பும் எழுத்தும் மிக இனிமையான விதத்திலும் குறைந்த அளவிலும் இலகுபடுத்தப் பட்டிருப்பது உலகிலேயே இவ்வொரு பாஷையாகத்தான் இருக்க முடியுமென்று அந் நாட்டார்கள் கூறி வருகிறார்கள். துருக்கி

பாஷையில் லத்தீன் எழுத்துக்களை மிக எளிதில் புகுத்தி யிருப்பினும் துருக்கி அரசாங்கம் அதனை நாடெங்கும் பரவச் செய்வதற்கும் மக்கள் அதனை மிக ஊக்கமுடன் எளிதில் கற்றுக் கொள்வதற்கும் எடுத்து வரும் சிரமம் போற்றுந் தகையது. ஜெர்மனி தேசம் தனது ஜெர்மன் பாஷையில் லத்தீன் எழுத்துக்களை நுழைத்திருப்பினும் அந்நாட்டில் அது இலகுவில் பரவி வந்திருப்பதாகத் தெரியவில்லை. துருக்கியிலோ பிரசார விஷயமாக ஆலோசித்துவர நியமிக்கப்பட்டிருக்கும் புதிய குழு அப் பாஷையின் சீர்திருத்தத்தில் மிகுந்த ஊக்கமெடுத்து வேலை செய்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர்களுக்குக் கட்டளை

புதிய துருக்கி—பாஷை என்று சொல்லப்படும் தற்கால பாஷை நடையறியாத ஆசிரியர்கள் அங்கு ஒருவரேனும் இப்பொழுது காணப்படுவதில்லை. கல்வி மந்திரி, இவ் வருடத்திற்குள் கலாசாலை ஆசிரியர்கள் யாவரும் கட்டாயமாகப் புதிய துருக்கியைக் கற்றுவிட வேண்டுமென்றும் புதிய முறையிலேயே இனி மாணவர்களுக்குப் போதனைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் ஆசிரியர்கள் புதிய பாஷைப் பரீக்ஷையில் தேற வேண்டுவது அவசியமென்றும் கட்டளை யிட்டுள்ளார். ஆகவே அவர்கள் அதனைப் படித்து முடிப்பதற்குப் போதிய சாவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கல்விச்சாலைகள் ஏற்கெனவே திறக்கப்பட வேண்டும் செப்டம்பர் மாதத்திற்குப் பதிலாக அக்டோபர் மாதத்தில் திறக்கப்படுமென அறிவுறுத்தப்பட்டு, அங்ஙனமே கலாசாலைகள் யாவும் சென்ற வருடம் திறக்கப்படலாயின. ஆசிரியர்கள் உண்மையில் இப் புதிய முறையில் தேர்ச்சி யடைந்திருக்கிறார்களா வென அறியும் பொருட்டு அரசாங்கத்தாரால் மூன்று பரீக்ஷைகள் வைத்து நடத்தப்படுகின்றன. இவைகளில் ஒன்றிலேனும் அவர்கள் தேறியிரா விட்டால் அவர்களைப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்க அனுமதிக்கப் படுவதில்லை. அரசாங்கத்தின் இக் கட்டாய முறையில் ஆசிரியர்கள் யாவரும் இப்புதிய பாஷையில் பாண்டித்தியம் அடைந்து பரீட்சையில் வெற்றிபெற்று வருகிறார்கள். புதிய இம்முறை மிகவும் எளிதாகக் காணப்படுவதால் அரசாங்கத்திலுள்ள உயரிய உத்தியோகஸ்



தர்களும் இதனைக் கட்டாயமாகக் கற்றுவிட வேண்டுமென வற்புறுத்தப்பட்டு வருகிறார்கள். பரீக்ஷையில் திரும்பத் திரும்பத் தவறுவார்களாகில் இவர்கள் தங்கள் பதவிகளை இழக்க வேண்டுமெனவும் அரசாங்கம் கட்டளையிட்டு வருகிறது.

## இராப் பள்ளிக்கூடங்கள்.

மக்கள் யாவரும் சீக்கிரமாகக் கல்வி பயிலும் பொருட்டு நாடெங்கும் இலவசப் பள்ளிக்கூடங்கள் திறக்கப் பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் மக்களை இப் பள்ளிகளில் படிக்குமாறு கட்டாயப் படுத்தப்படவில்லை. ஆனால் மக்கள் தாமாகவே இதில் சேர்ந்து அதிகமான உற்சாகம் காட்டி வந்தனர். அப்பால் 1929-ம் வருடம் ஜனவரி மாத முதல் அரசாங்கம் 16 வயது முதல் 45 வயது வரையுள்ள எல்லா ஆண் பெண் இரு பாலர்களையும் கட்டாயப் படுத்திக் கல்வி கற்குமாறு செய்தனர். கலாசாலைகளில் பதிவாகிப் பயின்று வரும் மாணவர்கள் இராப் பள்ளிக்கூடங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் தங்கள் கலாசாலைகளிலேயே புதிய பாஷையைக் கற்றுக் கொள்ளவேண்டும். பெண்களில் பெரும்பாலோரும் பணம் சம்பாதிக்கக் கூடியவர்களாயிருப்பதால் அவர்கள் இராப் பள்ளிக்கூடங்களிலேயே கல்வி கற்றுவர விரும்பி வருகிறார்கள். ஜனவரி முதல் பெண்களுக்கென வாரம் இரண்டு நாள் பகலிலும் கல்விச்சாலைகள் திறக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் தங்கள் வீடுகளிலிருந்து புதிய கல்வியைக் கற்றுக் கொள்வோமென வாக்குக் கொடுக்கிறவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் போகவேண்டுமெனப் பலவந்தப் படுத்தப் படுவதில்லை. என்றாலும் இவர்கள் அரசாங்கப் பரீக்ஷையில் சேர்ந்து தேற வேண்டுவது அவசியமெனக் கூறப்பட்டிருக்கிறது.

## தீவிரப் பிரசாரம்.

மூன்று மாதங்களுக்கு முன்னால் துருக்கிப் பத்திரிகைகள் யாவும் ஒருபக்கம் லத்தீன் எழுத்துக்களிலும் மறு பக்கம் அதே சமாச்சாரங்களைப் பழைய துருக்கி எழுத்துக்களிலும் வெளியிடும்படி அரசாங்கத்தார் அறிவுறுத்தி வந்தனர். இதனால் மக்கள் அதனைப் பழகுவதற்கு மிக இலகுவாய் இருந்ததாம். இப்பொழுது துருக்கியில் பத்திரிகை

கள் எல்லாம் லத்தீன் எழுத்துக்களிலேயே பிரசுரிக்கப் படுகின்றன.

அரசாங்கத்தினர், நாடெங்கும் இக்கல்வி மிகத் துரிதமாகப் பரவுவதற்காகப் பொதுவிடங்களிலும் பத்திரிகைகளிலும் பெரும்விளம்பரப் பத்திரங்களும், விளம்பரச் சித்திரங்களும் வெளியிட்டு வருகின்றனர். நகரங்களிலும் சிற்றூர்களிலும் இராக் காலங்களில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இராக் காவலாளர்களுடன் வீடுகள்தோறும் புகுந்து கல்விகற்கும் மக்களைக் கவனித்து வருகிறார்கள். நகரங்களிலுள்ள இராக் காவலாளர்கள் 16 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்கள் முதல் 45 வயது சென்ற பெரியோர்கள் உட்பட யாவரும் கட்டாயம் கல்வி கற்க வேண்டு மென்றும் கல்லாதவர்கள் தண்டிக்கப் படுவார்களென்றும் தெருக்களில் தம்பட்டம் அடித்து வருகிறார்கள். சிறுவர்கள் இவ்வொலி கேட்டதும் வயது சென்ற தங்கள் பெற்றோர்களும் பள்ளிக்கூடம் போக வேண்டுமென அறிந்து ஆரவாரித்து மகிழ்கின்றனர். ஆகவே கூடிய சீக்கிரத்தில் துருக்கி 100-க்கு 95 பேர்கள் எழுத வாசிக்கத் தெரிந்த மக்களைப் பெற்றுவிடுமென நம்பப்படுகிறது. 45 வயதிற்கு மேற்பட்ட வயோதிகர்களைக் கல்வி கற்குமாறு சட்டாயப் படுத்தப் படாமலிருந்தும் அவர்களிலும் வயது முதிர்ந்த பாட்டன்மார்களும், பாட்டிமார்களும் கூட கல்விச்சாலை போய் வருகிறார்கள். இப்புதிய அரசாங்கக் கட்டளைப்படி இராக் காலங்களில் மக்கள் பள்ளிக்கூடங்களுக்குக் கூட்டங் கூட்டமாய்ச் செல்வது தெருவெங்கும் மக்களது அளவிறந்த உற்சாகத்தையும் ஊக்கத்தையும் காட்டுகின்றது. இத்தகைய புதிய உணர்ச்சியில் மக்கள் யாவரும் ஒரு வித வித்தியாசமுமின்றி ஏழைகளென்றும் செல்வர்களென்றும் கூலிக்காரர்களென்றும் உயரிய உத்தியோகஸ்தர்களென்றும் நினையாது ஒருவரோடொருவர் சேர்ந்திருந்து படிப்பது மிக ஆச்சரியமாகவும் அற்புதமாகவும் விளங்குகின்றதெனச் சொல்லப்படுகிறது. சிறுவர் சிறுமியர்களிடை கூன் விழுந்த கிழவர்களும் பஞ்சடைந்த கிழவிகளும் ஆவலுடன் படித்து வரும் காக்ஷி உலகமெங்குமே பார்க்கக் கூடாததாயிருக்கிறதாம். இப் புதிய முறையால் துருக்கியின் ஜனநாயக ஆட்சி உண்மையான ஜனநாயக சமத்துவத்தை உலக மக்களுக்கு எடுத்தூட்டி வருகிறதெனக் கூறப்படுகிறது.

---



# மதிப்புரை.

(மனோகரனார்.)

பத்திரிகாசிரியர்கள், தங்கள் அபிப்பிராயத்திற்கென அனுப்பப்படும் புத்தகங்கள், பத்திரிகைகள் (மற்றும் பல பொருள்கள்), முதலியவற்றை ஆராய்ந்து பார்த்து அவற்றிலுள்ள குணதோஷங்களைக் கூறுவதற்கே மதிப்புரை யெனப்படும். கற்றுணர்ந்த பண்டிதர்கள் தங்கள் கருத்துக்கு வரும் நூல்களின் மீது அபிப்பிராயம் கூறும் வழக்கம் பண்டுமுதல் இருந்து வருகிறது. அவ்வாறு கூறிய உரைகளே சாற்றுக்கவிகளும் சிறப்புப் பாயிரங்களுமாம். முற்காலத்தில் நூலாசிரியர்கள் தாங்கள் எழுதிய நூல்களைப் பல பண்டிதர்களிடத்திற் காட்டி அவர்களுடைய சாற்றுக் கவிகளைப் பெற்றும், பண்டிதர்கள் பலபேர் கூடிய அவைக்களத்தில் தம் நூல்களைப் படித்துக்காட்டி அரங்கேற்றி எனவே அச் சபையோரின் முழுச் சம்மதியைப் பெற்றும் தமது நூல்களை நாட்டில் வெளியாக்குவது வழக்கம். தமிழ் நாட்டில் கம்பர் தாம் இபற்றிய இராமாயண காவியத்தை அரங்கேற்றுவதற்கு அடைந்த அவஸ்தைகளைப்பற்றிய வரலாறுகள் தமிழர் அறிந்தவையே யாம். அவ்வாறு ஒரு நூல் பண்டிதர்களின் ஆராய்ச்சிக்கு வைக்கப்பட்டதால் அந்நூலிலுள்ள குணங்களும் தோஷங்களும் வெளியாயின; அவற்றைக் கண்ட அந் நூலாசிரியர் தமது நூலிலுள்ள (நூலில் பதிந்த) குணங்களைப் பெருக்கியும் குறைகளை நீக்கியும் நூலைப் புதிப்பித்து உலகத்திற் களித்தனர். இக்காலத்தில் பல துறைகளிலும் புதிய மாறுதல்கள் தோன்றியதன்படியே இத்துறையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இதுகாலை நாட்டில் மலிந்துள்ள நூலாசிரியர்களில் பலர் தமது நூல்களின்மீது அறிஞர் அபிப்பிராயங்கள் தேவை என்பதைக் கருதுவதே கிடையாது. பிழையின்றி இரண்டு வாக்கியங்கள் எழுத அறியாதவர்களும் கையிற் பணமிருந்தால் ஏதோ தமக்குத் தோன்றியபடி ஒரு புத்தக மெழுதி அச்சிட்டுப் பிர

சரித்துத் தாமும் நூலாசிரியர்களெனப் பெயர் வகித்துக் கொள்ளு
கின்றனர். மேலும் இத்தகையோரின் நூல்கள் படாடோபமாகப்
பெயர்கள் அமைக்கப் பெற்றுப் பிரசித்தமாக விளம்பரம் செய்யப்
படுகின்றன. இதனால் நாட்டில் காணப்படும் நூல்களில் எவை
நல்லவை யென்பதும், எவை தீயவை யென்பதும் அறிய முடிவ
தில்லை. படாடோபமானப் பெயர்களைக் கண்டு மயங்கி அப்
புத்தகங்களை வரவழைத்துப் பார்த்து ஏமாற்ற மடைந்த வாசகர்கள்
பலர். இவ்வித குறைகள் நமது தமிழ் நாட்டில் அதிகம் என்
பதிற் றடையில்லை. தமிழ் நாட்டில் சிற்சில நூலாசிரியர்
களே தமது நூல்களைப்பற்றிய அறிஞர்களின் அபிப்பிராயங்
களைச் சேகரித்து வெளியிடுகின்றனர். தமிழ்ப் பத்திரிகைகளில்
அவ்வப்பொழுது பற்பல புத்தகங்களைப்பற்றி மதிப்புரைகள்
வெளி வருவதைப் பத்திரிகைகளைப் படிப்போர் அறிவார்கள்.
அவ்வாறு மதிப்புரைக்கென, பத்திரிகைகளுக்குப் புத்தகங்களை
யனுப்புபவர்களில் பெரும்பாலார் மதிப்புரையிடும் வழியில் பத்திரி
கைகள் தமது புத்தகங்களைப்பற்றி ஒரு விளம்பரம் வெளிவரட்டு
மென்பதைக்கருதியே தம் புத்தகங்களைப் பத்திரிகைகளுக்கு
அனுப்புகின்றனர். அதற்கேற்றபடியே பத்திரிகாசிரியர்களிற்
பெரும்பாலார் தம்மிடம் மதிப்புரைக்கு வரும் நூல்களைச் சரிவரப்
படித்துப் பார்க்காமலும் அவற்றைப்பற்றி "அழகா யிருக்கின்றது,
இனிமையாக விருக்கிறது, இதன் நூலாசிரியர் பெருங் கீர்த்தி
வாய்ந்தவர்" என்பது போன்ற இரண்டொரு விளம்பர வரிகளை
மதிப்புரை யென்ற பெயரால் எழுதிப் பத்திரிகையில் வெளியிடு
கின்றனர். ஆராய்ச்சி அறிவு படைத்த பத்திரிகாசிரியரிலும் சிலர்
மதிப்புரையிடும் புத்தகங்களிலுள்ள குணங்களைத் தவிர குற்றங்
களை மதிப்புரையில் எடுத்துக் கூறலாகா தென்னுங் கொள்கையைக்
கைக் கொள்ளுகின்றனர். இக் குறைகளுக் கிலக்காகாமல் தக்க
வாறு நூல்களை ஆராய்ந்து குண தோஷங்கள் இரண்டையும் மதிப்
புரையிடும் பத்திரிகாசிரியர்களைத் தமிழ் நாட்டில் விரல் விட்டு
எண்ணிவிடலாம். வேறு மொழிப் பத்திரிகைகள் சிலவற்றில்
மதிப்புரையிடும் ஆசிரியர்கள் வெகு திறமையாக நூல்களை ஆராய்
ந்து மதிப்புரைகளை எழுதுவதோடு, அந் நூல்கள் கிடைக்குமிடம்



முதலிய விபரங்களை அம் மதிப்புரையின் கீழ்க் குறிப்பிடாமல்
விடுகின்றனர். அவ்வித பத்திரிகைகளுக்கு அபிப்பிராயத்திற்
கனுப்பப்படும் நூல்கள் அனைத்தும் விளம்பரத்திற்காகவன்றி,
உண்மையில் மதிப்புரை யொன்றுக்கே அனுப்பி வைக்கப் படுகின்
றன. அம் முறையை நந் தமிழ் நாட்டில் எப் பத்திரிகையாவது
கைக் கொள்ளுமானால் அது முதல் அப் பத்திரிகாலயத்திற்கு
மதிப்புரைக்கு வரும் நூல்கள் குறைந்துபோவதைக் காணலாம்,
எனவே தமிழகத்தில் மதிப்புரைக்கு எவ்வளவு மதிப்பிருக்கிற
தென்பதைக் கவனிக்க வேண்டும். ஆனால் மதிப்புரையோடு
விளம்பரத்திற்கும் ஒரு அவகாசம் கொடுப்பதைக் குற்றமெனக்
கூற வரவில்லை. பத்திரிகாசிரியர்கள் செவ்வனே புத்தகங்களை
ஆராய்ந்து குண தோஷங்கள் இரண்டையும் மதிப்புரையிட வேண்டு
மென்பதையே வலியுறுத்துகிறோம். தமிழகத்தில் பணக்காரர்களா
கவும், உத்தியோகஸ்தர்களாகவும், ஜனத் தலைவர்களாகவும், பிர
சித்தவான்களாகவும், செல்வாக்குடையவர்களாகவு மிருப்பவர்கள்
எழுதும் நூல்கள் எவ்வளவு குறைகள் மலிந்தவையா யிருப்பினும்
தாமே ஆராய்ந்து மதிப்புரையிட வேண்டுமென முயன்று இடர்ப்
படுகின்றனர். ஆகவே தமக்கனுபவ மில்லாத துறைபற்றிய
நூல்களை அத்துறையில் அனுபவமுடைய அறிஞரைக் கொண்டு
ஆராய்ந்து மதிப்புரை எழுதச் செய்து பத்திரிகையில் பிரசுரித்
தலே நேர்மையாகும். மேல் நாடுகளில் பிரசித்தமான பத்திரிகை
கள் கைக்கொண்டுள்ள முறை யதுவேயாகும். மேலும் அந்நாட்
டுப் பத்திரிகைகள் குறித்த ஒரு புத்தகத்தின் மீது ஆராய்ந்து
மதிப்புரை எழுதிக் கொடுப்பதற்குத் தேர்ந்த அறிவாளிகளுக்குப்
பெரும் பணங்கொடுத்து அவ் வேலையைச் செய்கின்றன வென
றால், மதிப்புரைக்கு அந்நாடுகளிலுள்ள மதிப்பு நன்கு புல
னாகலாம். எனவே தமிழகத்தார் இத்தகைய குறைகளைக்
கவனித்து நடத்தல் அவசியமாகும். தமிழ் நாட்டில் அரசியல்,
சமூகக் கட்சி பேதங்களின் காரணமாக நூலாசிரியர்களைத் தாக்கி
அவற்றை மதிப்புரையிடும் பத்திரிகாசிரியர்கள், அவ்வளவு பெரிய
மனிதர் மீது குறை கூறுவதா வென்று பின்னடைந்து உண்மைக்கு

மாருகப் புத்தகத்தைப் பலவாறு புகழ்ந்து மதிப்புரை கூறுகின்றனர். இவ்வாறு செய்வதால் அந்நூலாசிரியர் தம்மையறியாது எழுதிய பல பிழைகளை யறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுமற் போவதோடு, புகழுரையில் மயங்கி மென்மேலும் பல முறை அதே குற்றங்களை இனி எழுதும் நூல்களிலும் புரிய வேண்டியவராகிறார்; அப்படியே மதிப்புரைகளை நம்பி அவற்றை வாங்கிப் படித்த வாசகர்களும் ஏமாறுகின்றனர். இவ்விதம் இருவழிகளிலும் பத்திரிகாசிரியர் தீங்கிழைத்தவராகிறார். "நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்ற தமிழ் மறை மொழியைக் கவனித்தல் வேண்டும். ஆனால் பத்திரிகாசிரியர் மதிப்புரையில் தமது நூலைப்பற்றிக் குறை கூறினாரேயென்று நூலாசிரியர்கள் வருத்த மடைதலுங் கூடாது. அவ்வாறு கூறிய குறைகள் உண்மையானவையா என்பதை நன்காராய்ந்து பார்த்து மறுமுறை அக்குறைகளை நீக்கிக்கொண்டு முன்னேற முயலுதலே அழகு. தமிழ் நாட்டில் சில பத்திரிகைக்காரர்கள் தாங்கள் (தங்கள் கம்பெனியில்) விற்பனை செய்யும் புத்தகங்களைப்பற்றி வரிசையாக மதிப்புரையென்ற பெயரால் புகழுரைகள் (விளம்பரத்திற்காக) எழுதித் தமது பத்திரிகைகளில் பிரசுரித்து வருகின்றனர். அவ்வித மதிப்புரைகளுக்கு என்ன மதிப்பேற்படும்? சில பத்திரிகாசிரியர்கள் அபிப்பிராயத்திற்கு வரும் நூல்கள் பல துறைகளைப் பற்றியனவா யிருப்பினும் அவை யனைத்தையும் தாமே ஆராய்ந்து மதிப்புரையிட வேண்டுமென முயன்று இடர்ப்படுகின்றனர். ஆகவே தமக்கனுபவ மில்லாத துறைபற்றிய நூல்களை அத்துறையில் அனுபவமுடைய அறிஞரைக் கொண்டு ஆராய்ந்து மதிப்புரை எழுதச் செய்து பத்திரிகையில் பிரசுரித்தலே நேர்மையாகும். மேல் நாடுகளில் பிரசித்தமான பத்திரிகைகள் கைக்கொண்டுள்ள முறை யதுவேயாகும். மேலும் அந்நாட்டுப் பத்திரிகைகள் குறித்த ஒரு புத்தகத்தின் மீது ஆராய்ந்து மதிப்புரை எழுதிக் கொடுப்பதற்குத் தேர்ந்த அறிவாளிகளுக்குப் பெரும் பணம் கொடுத்து அவ் வேலையைச் செய்கின்றன வென்றால், மதிப்புரைக்கு அந்நாடுகளிலுள்ள மதிப்பு நன்கு புலனாகலாம். எனவே தமிழகத்தார் இத்தகைய குறைகளைக் கவனித்து நடத்தல் அவசியமாகும். தமிழ் நாட்டில் அரசியல், சமூகக் கட்சி பேதங்களின் காரணமாக நூலாசிரியர்களைத் தாக்கி எழுதும் மதிப்புரைகளும் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. இக் குறையும் நீங்கவேண்டும். ஆதலால் "பாரதி"யின் மதிப்புரைக்காக வரும் நூல்களைக் கூடியவரையில் உண்மையாக ஆராய்ந்து, நூலாசிரியர் எவர்? அவருடைய கௌரவமென்ன? அவர் எக்கட்சியைச் சேர்ந்தவர்? என்ற பேதங்களைப் பாராட்டாமல் காய்தல் உவத்தல் இன்றி நடு நிலைமை கொண்டு நூல்களின் யோக்கியதைக்கேற்ப நன் மதிப்புரைகளை எழுதிவரக் கருதியே "ஆராய்ச்சி மேடை" என்ற தலைப்பகத்தை இதற்கென ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. இனி "பாரதி" அவ்வப்போது எழுதி வரும் மதிப்புரைகளைப்பற்றி மதிப்புரையிடும் உரிமையை வாசகர்களுக்கு விட்டு விடுகிறோம்.



# திங்களின் களங்கம்.

திருவாளர். T. ராமலிங்கம் பிள்ளை அவர்கள், M. A.

திங்கள் அல்லது சந்திரனைப் போன்று மக்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் பிறிதோர் பொருள் மண்ணிலோ விண்ணிலோ இருப்பதாகத் தோன்றவில்லை. ஆகையால், மறுவைப் போன்று சந்திரனில் காணப்படும் களங்கமும் கவிகளின் வர்ணனைகளுக்கும் மனோ தர்மத்திற்கும் விஷயமாயிருக்கிறது. களங்கமென்று கூறப்படும் கரிய தடத்தை ஒரு முயலென்றும் ஒரு மானென்றும் சங்கற்பித்ததின் பலனாக, சசாங்கனென்றும் மிருகாங்கனென்றும் சந்திரனுக்குப் பெயர்கள் ஏற்பட்டன. கடலிலுள்ள சேறு படிந்ததோ, பூமியின் நிழல் பட்டதோ, இரவிலுள்ள இருட்டு முழுவதையும் சந்திரன் குடித்

துத் தொந்தியிலாக்கியிருப்பது கண்ணாடி போன்ற கோளத்தின் வழியாகக் காணப்படுவதோ களங்கத்திற்குக் காரணமாயிற்றென்று ஒரு கவி கூறுகிறார். சந்திரமதியின் முகத்தை அமைப்பதற்காகச் சந்திரனுடைய சத்தைச் சூழ்ந்தெடுத்ததனாலேற்பட்ட பொந்து தான் களங்கமென்று ஸ்ரீ ஹர்ஷகவி நைடத காப்பியத்தில் கூறியுள்ளார். இவ்வாறு பலரும் பலவாறு மனோதர்மம் போல் கூறிப் போந்துள்ளனர்.

கவிகளும் நூலாசிரியர்களும் என்ன கூறியிருந்தாலும் இதன் உண்மை யாதென்று அறியக் கிடக்கின்றது. சூரியன், சந்திரன், பூமி ஆகியவை மானிட உற்பத்திக்கு முன்னரே தோன்றியவையாயிருந்த போதிலும், அவற்றைப் பற்றிய பூர்ணமான அறிவு நமக்கு இன்னும் கிடைத்திருக்கிறதென்று கூற இயலாது. ஆயினும், நமது முன்னோர்களை விட நமக்கு அவற்றைப் பற்றி அதிகமான அறிவு கிடைத்திருக்கிறதென்று கூறாமலிருக்கவும் முடியாது. இம் மூன்று கோளங்களும் அந்தமில்லாத ஆகாயத்தில் இடம் பெற்றிருக்கின்றன. மிகப் பெரிதான சூரிய கோளத்தைச் சுற்றி பூமியும், பூமியைச் சுற்றிச் சந்திரனும் இயங்குகின்றன. பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர ஒரு வருடமும், சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றிவர 27-நாட்களும் சொச்சமும் வேண்டிவருகின்றன. சந்திரன் பூமியினுடைய ஒரு கிளைக் கிரஹம் அல்லது பக்கக் கிரஹம் மட்டுமேயாம்; அதாவது, பூமியின் கவர்ச்சியை எதிர்த்துச் சுயேச்சையாய் இயங்க முடியாமல் ஒரு சேவகனைப் போல் சந்திரன் பூமியைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. பூலோக வாசிகளுக்கு இராப்பகல் வகுத்தலையொட்டிச் சந்திரனிலிருந்தும் சூரியனிலிருந்தும் வெளிச்சம் கிடைக்கிறது. சந்திரனிலிருந்து நமக்குக் கிடைக்கும் பிரகாசம் அந்தக் கோளத்துக்குச் சொந்தமானதன்று. சுயம் பிரகாச குணம் சந்திரனுக்கு இருந்தால், படிப்படியாய் பாகங்கள் மங்கிப்போய் சந்திரன் முற்றிலும் காணாமற் போவதற்கிடமில்லை. சூரிய வெளிச்சம் சந்திர பிம்பத்தில் எவ்வளவு மாத்திரம் படுகிறதோ அவ்வளவு மாத்திரம் பிரகாசமுள்ளதாக நமக்குக் காணப்படுகிறது. அது எதைப் போன்றென்



றால், இரவில் அறைக்குள் விளக்கேற்றினால், அத் தீபவொளி படும் சுவரும் பிறவும் பிரகாசமாய்க் காண்பது போலாகும். சூரிய வெளிச்சம் சந்திரன் மீது பட்டு பூமியில் பிரதிபலிப்பது போல் பூமியில் படும் சூரிய வெளிச்சம் பிரதிபலிக்குமா என்ற நியாயமான ஒரு கேள்விக்கு இடமுண்டு. அவ்வினாவுக்கு, பூமியில் படும் சூரிய பிரகாசம் சந்திரனில் பிரதிபலிக்குமென்று விடையிறுக்க வேண்டியிருக்கிறது. அதை நாம் சில வேளைகளில் தெளிவாய்க் காணலாம். சந்திர பிம்பத்தில் ஒரு பாகம் ஒளிபொருந்திய கலையாகவும் மீதியுள்ள பாகம் மங்கி வெளிறி காந்தியில்லாமலும் சில வேளைகளில் நாம் காண்கிறோமல்லவா? ஒளி பொருந்திய கலைகள் சூரியப் பிரபையின் பிரதிபலனத்தினால் தான் பிரகாசிக்கின்றன. மங்கலாகக் காணப்படும் பாகம் கண்ணுக்குப் புலப்படாமலிருந்திருக்கக்கூடியதும், ஆனால் பூமியிலிருந்து கிடைக்கும் பிரகாசம் நிமித்தம் அவ்வாறு காணப்படுவதுமாகும்.

சந்திரனைவிடச் சிறிய கிரஹங்கள் அநேகமில்லை. ஆனால் ஒளிவீசும் காரியத்தில் அது சூரியனைத் தவிர மற்றெல்லாக் கிரஹங்கட்கும் மேலானதாயிருக்கிறது. இதற்குக் காரணம் சந்திரனுக்கு பூமியோடுள்ள அண்மையேயாகும். பூமியிலிருந்து சந்திரனுக்கு உத்தேசம் 240,000 மைல் தூரமே உளது. சூரியனுடையவோ தூரத்தை ஆலோசித்தால் இது எவ்வளவோ அற்பமாகும். சந்திரன் அடுத்திருப்பதால் குழல் கண்ணாடி மூலமாக அறிய நமக்கு இயலுகிறதில்லை. தூரதர்சினி என்னும் கருவியின் உதவியில்லாமலே ஒரு விஷயம் நாம் அறியக் கிடக்கின்றது. அஃதென்னவெனில் சந்திரனுடைய ஒரு புறத்தைத் தவிர மறு புறத்தை நாம் இதுவரை கண்டிருக்கவில்லை யென்பதே. கோள வடிவமாக பூமியைச் சுற்றிவரும் சந்திரனுடைய மறு பாகம் நமக்குக் காண இயலாததன் காரணம் இன்னதென்பதைச் சிறிது விவரித்தல் வேண்டும். ஒரு பம்பரம் கறங்கும் பொழுது அது தானாகவே கறங்குவதுமல்லாமல் நிலத்தில் ஒரே இடத்தில் நிற்காமல் வட்டமாகப் பிரதக்ஷிணம் ஆனதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அது போலவே யாகும் பூமி சூரியனைச் சுற்றி வருவது. பம்பரத்தின்

கோலைப்போல கோள வடிவமான பூமியின் நடுவில் நெடுநீழத்திலுள்ள வரைக்கு அக்ஷம் என்று சொல்லப்படுகிறது. அக்ஷத்தின் மீது தன்படியே பூமி சுற்றுவதனால் இரவும் பகலும் உண்டாகின்றன. பூபாகம் சூரியனுக்கு நேர் முகமாகும் பொழுது பகலும் அந்தப் பாகம் தீர்ந்து மறையும் பொழுது இரவும் ஆகின்றன. இவ்வாறு தன் படியே கறங்கிக் கொண்டு பூமி சூரியனைச் சுற்றி வருவதனால் இருதுக்களுண்டாகவும் ஒரு வருடம் பூர்த்தியாகவும் செய்கிறது. சந்திரனுடைய விருத்தாந்தம் எப்படி என்று பார்ப்போம். சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறதென்று ஏற்கனவே கூறியுள்ளோம். அவ்வாறு சுற்றி வரும் போது அது தானாகக் கறங்குகிறதா? தினந்தோறும் சந்திரன் பம்பரத்தைப் போன்று தானாகவே கறங்குவதானால் அதன் எல்லாப் பாகங்களும் திரிந்து திரிந்து நமக்கு எதிர் முகமாக வரலாம். அப்படி நாம் காணவில்லை. இதற்கு மாறாக, எவ்வளவோ காலமாக நாம் சந்திரனைப் பார்த்து வருகிறோமாயினும் சந்திரனுடைய களங்கமுள்ள பாகத்தைத் தவிர மற்ற பாகத்தை நமக்குக் காணமுடியவில்லை. அந்தப் பக்கத்தில் ஏற்றத் தாழ்வுகளால் உண்டாகும் வேற்றுமைகளைத் தவிர்த்துப் பிறிதோர் வேற்றுமையும் காணவில்லை. அதனால் அனுமானிக்க வேண்டியதாவது, ஒரு பக்கமே பூமிக்கு நேர் முகமாகச் சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறதென்பதை ஓர் அரச மரத்தை வலம் வருபவன் அதையே நோக்கிக் கொண்டு வலம் வருவதைப் பூர்த்தியாக்கினால் எப்படியோ அதுபோலவே சந்திரன் பூமியைச் சுற்றிவருகிறது. ஆகவே, தன்னைத்தான் ஒரு முறை சுற்றி வருவதற்குள்ள சமயமே பூமியைச் சுற்றி வரச் சந்திரனுக்கு வேண்டி வருகிறது. அதாவது, சந்திரனுடைய இயக்கம் பூர்த்தியாவது பரிக்கிரமணம் பூர்த்தியாகும் பொழுதே.

இனி, சந்திரனுடைய களங்கத்தைப்பற்றி ஆராய்வோம். குழல் கண்ணாடியின் உதவியால் தொலையிலிருக்கும் சந்திரனை அண்மையில் வருவித்தது போல வயப்படுத்திப் பரிசோதிக்கக் கூடும். அவ்வாறு பரிசோதிக்கும் போது சந்திரனுடைய உண்மையான உருவத்தை அறிந்துகொள்ளலாம். நுண்ணிய பரிசோத



னையில் மட்டமில்லாமல் மேடும் பள்ளமுமாய்க் காணப்படும் சந்திரன் வெறும் மானிடக் கண்களுக்கு வெண்ணிறமா யிலங்குவது கேவலம் மாயை யென்று யார்தான் உணரமாட்டார்கள்? ஆராதர்சினியின் சக்தி திங்களின் அழகைக் கொள்ளையிடுகிறது. நமக்குக் காணக்கூடிய பக்கத்தில் சந்திர பிம்பம் கீறல்களால் நிறைந்திருக்கிறது. எரிமலைகள் எரிந்து தணிந்த பிறகு காணப்படுவது போன்ற படுகுழிகள் சந்திர பிம்பத்தில் பரவி யிருக்கின்றன. அத்தகைய குழிகளின் சுவர்கள் மேலே உயர்ந்து நிற்கின்றன. பர்வதங்களின் தண்டைப் போல நீண்டு உயர்ந்த பிரதேசங்களும் மிக ஆழமான குழிகளும் மனோகரமென்று கருதப்படும் திங்களின் முகத்தில் தெளிவாய்த் தோன்றுகின்றன. சூரியனுடைய ஒளிகள் சாய்வாகச் சந்திர மண்டலத்தில் விழும் பொழுது ஏற்படும் நிழலின் நீளத்தால் மேற்கூறிய உயர்ந்த பிரதேசங்களின் உயரத்தை வான சாஸ்திர வல்லுனர்கள் கணக்கிட்டுப் பார்க்கிறார்கள். திங்களில் காணப்படும் அங்கமயமான பாகம் விசாலமும் நீளமுமுடைய குழிகளும் பள்ளங்களும் மேடுகளுமல்லாமல் வேறொன்றுமல்ல. சந்திரனிலுள்ள 'மான்' ஆங்கிலத்திலும் தமிழிலும் வெறும் மாயை மட்டுமேயாகும். சந்திர மண்டலத்தில் மனிதர்களிருந்தால் அவர்கள் பூமியில் வசிப்பவர்களிலிருந்து மிகவும் வேறுபட்டவர்களா யிருத்தல் வேண்டும். அவர்களுக்கு மூக்கும் சுவாச கோசங்களும் காணமாட்டா. ஏனெனில் மூச்சு வாங்கவும் விடவும் இன்றியமையாத வாயு அல்லது காற்று சந்திர மண்டலத்தில் முற்றிலும் கிடையாது. அக் காரணம் பற்றியே அவர்கள் ஊமைகளாயுமிருப்பார்கள். வாயுவில்லாவிடில் ஓசை இயங்காதன்றோ? அவர்கள் வீடுகளோ ஆலயங்களோ பணி செய்தால் ஊழி காலம்வரை அவற்றிற்கு யாதொரு கேடும் நேரிடமாட்டாது. ஏனெனில் மாரியினாலாவது வெள்ளப் பெருக்கினாலாவது அவர்களுடைய கட்டிடங்களுக்குக் கேடுண்டாகமாட்டாது. சந்திர மண்டலத்தில் தண்ணீர் கிடையாது. அங்கே வாசனை மலர்களிருந்தால் அவற்றின் நறு மணத்தை நுகர வழி யில்லை. முதலாவது மனிதர்க்கு மூக்கு இருப்பது அரிது; இரண்டாவது வாயுவில்லையேல் வாசனை பரவமாட்டாது.

# எனது குருநாதரின் கடிதம்.

## II

(மனோகரனார்)

*பாரதச் செல்வர்களே! பாரதச் செல்விகளே!!*

எழுங்கள்! முன்னேறிச் செல்லுங்கள். கல்வி வாதத்தை விட்டொழியுங்கள். காரிய வாதத்தைக் கைப்பற்றுங்கள். உங்கள் பண்டைப் பெருமைகளைப் பன்னிப் பன்னிப் பேசிக் காலந் தாழ்த்தியது போதும். வேத காலத்தில் உங்கள் முன்னோர்கள் எவ்வளவு உயர்ந்திருந்தா லென்ன? புராண காலத்தில் உங்கள் மூதாதைகள் எவ்வளவு பெருமை பெற்றிருந்து மென்ன? சரித்திர காலத்தில் உங்கள் முன் தோன்றல்கள் எத்துணை வீர வாழ்க்கை நடத்தி யிருந்து மென்ன? அப் பழம் பெருமைகளைத் தேடி ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருப்பதால் பயனில்லை. உன் தாதை தனியரசு நடாத்தி யிருக்கலாம். நீ இன்று பிச்சைக்காரன் தானே? தந்தைக்கு நடந்த சிறப்புகள் தனயனுக்கு நடைபெறுமா? பதவியைப் பொறுத்தன்றோ சிறப்பும் பிறவும் அமைகின்றன? இன்று உங்கள் நாடு இருக்கும் நிலை யென்ன? உங்கள் (இந்திய) சமூகம் இருக்கும் அழகென்ன? உங்கள் வாழ்க்கை யிருக்கும் முறை யென்ன? உங்கள் அறிவு இருக்கும் நேர்மை யென்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள். எங்கும் வறுமை, பகைமை, தீமை, மடைமை

---

மொத்தமாகப் பார்க்குமளவில், நாகரீக ஜனங்களின் புகழ்ச்சிக்குப் பாத்திரமாகிய சந்திரனுடைய உண்மை நிலை மனக் கற்பனைகளிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கிறது. "தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளுமை" யாயினும், உண்மை நிலை நேர்மாறாக விருக்குமென்பதற்குச் சந்திரன் ஓர் நல்ல உதாரணமா யிருக்கிறது. எரிமலைகளினுடைய குழிகளின் விஸ்தீரணங்களையோ பள்ளத்தாக்குகளையோ கண்ணுற்ற கவிகளின் மனப் போக்கு எம்மட்டும் ஏமாந்து போயிருக்கிறதென்று பாருங்கள்.

---



முதலியன காணப்படவில்லையா? உங்களிடத்தில் உடல் வலி யிருக்கிறதா? அறிவுத் திறன் இருக்கிறதா? "இந்தியர் கோழைகள்" என்று பிற நாட்டார் எள்ளி நகையாடுவதைக் கவனித்தீர்களா? முப்பது கோடி இந்திய மக்களில் ஒரு ராயும், ஒரு போஸும், ஒரு ராமனும், ஒரு டாகூரும், ஒரு அரவிந்தரும், ஒரு மகாத்மாவும், ஒரு சரோஜனியும், இருந்தால் போதுமா? கலியுக பீமன் ராமமூர்த்தி ஒருவர் பலசாலி யெனப் பெயரெடுத்தால் போதுமா? உங்கள் சிலம்பக் கூடங்களெங்கே? உங்கள் ஆத்மீக யோக சாதனங்க ளெங்கே? உங்கள் பிராணாயமங்க ளெங்கே? உங்கள் குருகுலாச்சிரமங்க ளெங்கே? உங்கள் பிரமாச்சரிய வீர வாழ்க்கை யெங்கே? உங்கள் தியாக மெங்கே? உங்கள் அற வாழ்க்கை யெங்கே? அவை யனைத்தும் எங்கே போய் மறைந்தன?

நாட்டில் காணப்படும் அடிமைக் கல்விச் சாலைகள் இன்னும் எத்தனை அதிகப்படினும் உங்கள் அறிவு வளர்ச்சிக்கு அவை பயன்படு மெனக் கருதுகிறீர்களா? குறுகிய நோக்கமும், பிடிவாதமும் படைத்த சாதி சமய சாத்திரக் கல்விகளை நாட்டில் பரப்புவதால் உங்கள் அறிவு உயர்வடையுமென நினைக்கிறீர்களா? சாதிகளின் பெயரால் ஒருவர்க்கொருவர் வேறுபடுத்திக் கொண்டு பிரிந்து நிற்பதால் நீங்கள் பயன் பெறப் போகிறீர்களா? சமயத்தின் பெயரால் சமயக் குறிகளுக்கும், சாமி (தெய்வ) உரிமைகளுக்கும் வேற்றுமைப் பாராட்டி வீண் வழக்குகள் புரிவதால் உயர்வடையப் போகிறீர்களா? உங்கள் வைதீகப் பித்தத்தால் இன்னும் எத்தனை நாட்களுக்கு உங்கள் சமூகத்தில் எண்ணற்ற பாலிய விதவைகளை உண்டாக்கப் போகிறீர்கள்? பெண்களை அடிமை விலங்குகளாகத் தாழ்த்தி அவ் வழியே இந்திய சமூகத்தில் பாதிப் பேரை பலவீனப் படுத்தி வைத்துவிட்டு நீங்கள் உயர்வடையப் போகிறீர்களா? கடவுளின் பெயரால் நீங்கள் எத்தனை இழிச் செயல்களைப் புரியத் துணிகிறீர்கள்! கடவுளுக்கென பிராணிகளை பலி கொடுக்கிறீர்கள்! யாகங்களின் பெயரால் மிருகங்களைக் கொல்லுகிறீர்கள்! கோயில்களின் பெயரால் விபசாரிகளை யுண்டாக்குகிறீர்கள்! பிரார்த்தனைகள் செலுத்தும் வழியே கடவுளுக்கு லஞ்சங் கொடுத்து உங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள முயலும் உங்கள் அறியாமையை

என்னென்பது! கர்மத்தின் (ஊழ்வினை) மீது பாரத்தைப் போட்டு மேன்மை யெய்தக் கருதும் உங்கள் சோம்பேறித் தனத்தை என்னென்பது! கீதையின் உபதேசத்தைப் பெற்ற அர்ச்சுனன் தன் கடமையைச் செய்யாமல் வாளா யிருந்தானா? பிரம்ம சூத்திரங்களை எழுதிய வியாசர் மூலையில் உட்கார்ந்து மௌனத்தி லிருந்தாரா? சர்வ சங்க பரித்தியாகம் புரிந்த புத்தர் மக்கள் கூட்டத்தை விடுத்துத் தனித்து வாழ்ந்தாரா? வைணவத்தை நாட்டிய ஆழ்வார்கள் சிவத்தை வேறெனக் கூறவில்லையே. சிவத்தைப் பேணிய நாயன்மார்கள் விஷ்ணுவை வேறென விளம்பவில்லையே. அத்வைத சமயாச்சாரிய ராகிய சங்கரரும் சமய வேற்றுமைகளைக் கூறவில்லையே. இராமாநுஜரை விட மற்றொரு சமூக ஊழியர் தேவையா? இராமாநுஜ தர்சனத்தைப் பின் பற்றிய உங்களிடத்தில் சமூக சமத்துவ மிருக்கிறதா? கோயில்களைக் கண்டு கொண்டாடுகிறீர்கள். புத்தகங்களைப் பார்த்துப் பெருமைப் படுகிறீர்கள். சாசனங்களைக் கண்டு சந்தோஷப்படுகிறீர்கள். தற்கால வாழ்க்கையை நடத்த வகை யறியாது விழிக்கிறீர்கள்! உண்ண உணவில்லை! கட்டத் துணி யில்லை! வாழ இடமில்லை! ஆண்டி மடம் கட்டுகிறீர்கள்! (வாய்ப் பந்தல் போடுகிறீர்கள்.) இதை விட உங்கள் நிலை வேறென்ன?

அயல் நாடுகளை ஏறிட்டுப் பாருங்கள். ஐரோப்பா எவ்வித மிருக்கிறது? அமெரிக்கா எந்நிலையி லிருக்கிறது? ஜப்பான் இன்று அடைந்துள்ள பெருமை யென்ன? சைனா என்ன செய்து கொண்டிருக்கிறது? பிற நாடுகளுடன் பாரத நாட்டை ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் நாட்டில் பெரிய மலைக ளில்லையா? ஜீவ நதிகளில்லையா? இயற்கை வளங்க ளில்லையா? ஜனக் கூட்டங்க ளில்லையா? அவ்வள விருந்தும் நீங்கள் ஏன் வறுமைக் குள்ளாகி வருந்துகிறீர்கள்? உங்கள் கைத்தொழில்கள் எங்கே? உங்கள் வியாபாரங்க ளெங்கே? உங்கள் உயர் விவசாயங்கள் எங்கே? அவை யனைத்தும் அரசிய லெமன் அழித்து விட்டதெனவா கூறுகிறீர்கள். ஏன் அவ் வெமனுக்கு ஆளாகினீர்கள்? விடுதலைக்கு வழியிருக்கையில் விழித்துக்கொண்டு தூங்குவானேன்? அதோ சுதந்தரத் தேவி உலக பவனி வருகிறாள். அவ்வூர்கோலத்தில் சேர்ந்து கொள்ள விரைந்து நடவுங்கள். அதற்குக் காந்தி யடிகளார் வழி



காட்டிவிட்டார்.. பாதை செப்பனிடப்பட்டு விட்டது. உங்கள் ஒவ்வொருவரையும் சூழ்ந்து கொண்டிருக்கிற சாதி, சமயம், அடிமைப் புத்தி, அறியாமை, பயம், சுய நலம் என்ற தளைகளை அறுத் தெறிந்து சுதந்தரப் பாதைக்கு வந்து சேருங்கள். பாரதத் தேவியின் அரிய திருக்கோலத்தை விரைந்து காண்பீர்கள். உங்கள் அன்னை பாரதியைத் பணிந்து ஆசி பெறுவீர்கள். மூடக் கொள்கைகளை விட்டொழியுங்கள். அறி வாராய்ச்சியைக் கைப் பற்றுங்கள். உலக சமாதானத்தை உயர்வாகக் கருதுங்கள். காந்தி ராஜ்யம் சாந்தி ராஜ்யம் என்பதை விளக்குங்கள். சர்வ தேச மகா சங்கம் ஜினிவாவில் சாதிக்கிற தென்ன? கப்பற் படை மகா நாட்டில் காரிய மேற்பட்டதா? ஆயுத நிர்ணயப் பிரச்சினையில் அறிவு தோன்றியதா? உலக சமாதானப் பிரியர்கள் ஊக்கும் வழியென்ன? சண்டை ஆயுதங்களைக் கொண்டு சமாதான முண்டாக்குவதா! மாரண சாதனங்களைக் கொண்டு மக்களின் அமைதியைக் காப்பதா! சிறு பான்மையோரைப் பெரும் பான்மையோரும், எளியாரை வலியாரும் அடக்கி யாளும் உலகில், அத் தத்துவத்தையே கொண்ட ஒரு சிலர் சமாதானத்தை நிலை நாட்டுவதா! உலக சமாதானத்தைக் கோருபவர்கள் முதலில் உலக விடுதலைக்கு உழைக்க வேண்டாமா? பல தேசங்கள், பலம் வாய்ந்த சில தேசங்களுக்கு அடிமையா யிருக்கும் வரையில் உலக விடுதலையேது? உலக விடுதலை இன்றேல் உலக சமாதான மேது? ஆயுத மீட்டும் வரையில் அஹிம்சைக்கு வழியில்லை. அஹிம்சை யில்லா விடத்து அன்புக்கு இடமில்லை. மக்களை மக்கள் சமத்துவமாக மதிக்கும் மான்பில்லாத வரையில் மன வமைதி தோன்றாது; சாந்தம் இல்லை சமாதான மில்லை. உலகில் எங்கும் புரட்சி! எங்கும் கலகம்! எங்கும் அமைதி யின்மை! எங்கும் அடக்குமுறைத் தாண்டவம்! எங்கும் வலியாரது சூழ்ச்சி! எங்கும் பணக்காரர்களின் ஆட்சி! இக் குழப்பங்கள் அடங்கி உலகம் க்ஷேமமடைய வேண்டாமா? உலக சமாதானத்திற்கு—உலக விடுதலைக்கு வழி யெங்கே? அஃது பாரத நாட்டிலேயே யிருக்கிறது. அதுவும் உங்கள் கையிலேயே இருக்கிறது. உங்கள் தலைவர் அல்ல, அல்ல, உங்கள் ஒப்பற்ற ஊழியர்—தொண்டர் மகாத்மா அவர்கள் உங்கள் நாட்டுக்கே யன்றி உலக விடுதலைக்கே ஓர் ஒப்பற்ற சாதனமாக—வழியாக அஹிம்சா தர்மத்தை அரங்கேற்றி

யுள்ளார். ஒற்றுமையாமை யென்பது அஹிம்சையின் பிள்ளையே. இச் சாத்வீகப் போரின் வலியால் பாரத நாட்டின் விடுதலையையே சாதிக்கக் கருதி நிற்கிறார் காந்தி யடிகளார். இச் சாத்வீகப் போர் முறை இதுவரை சரித்திரம் காணாததே. எனினும் உலகில் புத்தி மான்கள் ஆங்காங்கே ஒரோர் காலத்தில் இதைக் கையாடியே வந்திருக் கின்றனர். எனினும் நம் அடிகளார் அதை எடுத்துக் காட்டாத வரையில் அதன் பெருமையை உலகம் அறிய முடியாம லிருந்தது.

உலக சமாதானப் பிரியர்கள் அனைவரும் உங்கள் சாத்வீகப் போரின்முடிவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்க ளென்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இம் முயற்சியில் தவறினால் உலகமே ஏமாற்ற முறும் என்பதை உற்றுக் கவனியுங்கள். நீங்கள் கற்ற கல்வியால் அஹிம்சையின் தத்துவத்தைப் பற்றித் தர்க்கம் புரிந்து காலத்தை வீணாக்காதீர்கள். "காலம் என்பது பணம்" என்ற பழமொழியைக் கவனியுங்கள். காலத்தினாற் செய்யாதது ஞாலத்தில் பயன் தராது. இந்தியாவின் விடுதலைப் போரில் ஆங்கி லேயர்களை வெறுக்க வேண்டுவதில்லை. உலகில் வேறெவரையும் நீங்கள் வெறுக்கவும் கூடாது. உங்கள் சாத்வீகப் போரின் லக்ஷியமே உலக மக்களின் உயர் நன்மையைப் பற்றியதன்றோ? நாடு, மொழி, சமயம், சாதி, நிறம் என்ற வேற்றுமைக ளின்றி உலக மக்கள் அனை வரும் சகோதரத்துவத்தைக் கொண்டாட வேண்டும். அதுவே மக்களின் தன்மை. அஃதல்லாதது மாக்களின் தன்மையே. இந்த லக்ஷியத்தைக் கொண்டு நடக்கும் உங்களுக்கு எவர் மீதும் வெறுப் புண்டாவதற் கில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் முறையை மாற்றி யமைக்க முயலுகிறீர்களன்றி அதை யழிக்க முயலவில்லை. சுதந்தரம் என்பதும், விடுதலை யென்பதும் என்ன? மக்களை உரு மாய்த்து நாம் பெறுவது சுதந்தர மாகாது. அஃது நிலையான விடுதலையு மல்ல. எனவே இதன் கருத்தைச் சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு உண்மை எளிதில் விளங்கும். இன்று காந்தியடிகளார் சிறைக் கோட்டம் புகுந்தார். அவரது அடிச் சுவட்டைப் பின் பற்றிய அருந் தொண்டர்கள் பலரும் சிறைவாசம் மேற்கொண்டனர். தங்கள் சொத்துச் சுதந்தர சௌக்கியங்களை யிழந்து அவர்கள் அடக்கு முறை க்கு ஆளாவதன் காரண மென்ன? தங்கள் சுய நலத்தை முன்னிட்டா?

பாரதப் புதல்வர்களே! பாரதப் புதல்விகளே! சற்றுக் கவனியுங் கள். உங்கள் முக்கியமான சகோதர சகோதரிகள் படும் பாடுகள் அனைத் தும் உங்கள் விடுதலைக்காக வல்லவா? இச் சமயத்தில் நீங்கள் வாளா யிருக்கலாமா? எழுங்கள். சாத்வீகப் போரின் முன்னணிக்குச் செல்லு ங்கள். தியாகம் செய்யாமல் உலகில் யார் பெருமை பெற்றார்கள்? உங் கள் தியாகத்தை-தேசாபிமானத்தைச் செயலில் காட்டுங்கள். தொண்டர் படையில் காலியான இடங்களை நிரப்புங்கள். உங்களுக்கு (அப்படி யல்ல)-உலகத்திற்கு வெற்றி யென்பதும், விடுதலை யென்பதும் நிச் சயம், நிச்சயம், நிச்சயம். ஓம் தத்ஸத் ஓம்.



# காதலும் உற்பத்தியும்.

திருவாளர். லெ. சோமசுந்தரம் அவர்கள்.



இன்று உலக மக்களான ஆண் பெண்கள் என்னும் இருபாலாரது உள்ளத்தையும் கவர்ந்து வசீகரிப் பது இவ்விருபாலாருக்கும் இடையே இயற்கை யாய் அமைந்துள்ள தொடர்பாகும். இயற்கை வாழ்வு நடாத்தும் ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் மேலே குறித்த தொடர்பினைப்பற் றிய உணர்ச்சி உண்டு என்பது மறுக்க வியலாததே. தம்மைப் போன்ற உயிர்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் இருபாலாருக்கும் பொதுவாக அமைந்திருத்தலால், அந் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் விருப் பமும் அவர்களிடம் ஓர் இயற்கை உணர்ச்சியாக அமைந்திருக்கிறது. இந் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தூண்டுமாறு இயற்கை ஓர்

இன்ப உணர்ச்சியை இதனோடு கலந்து தருகின்றது, இது வாழ்க்கையின் மூலாதாரமான இயல்புகளில் ஒன்றாகும். மக்கள் உணர்ச்சிகளில் அடிப்படை உணர்ச்சியாகவும் மக்களது ஆற்றல்களில் தலை சிறந்த ஆற்றலாகவும் காணப்படுவது சிருஷ்டி சக்தியின் காரணமாகிய இத் தொடர்பேயாகும்.

இவ் வுணர்ச்சியின் இலக்கு கலவியாகும். இதுவே உயிரைத் தோற்றுவிப்பது. ஆண் சக்தியும் பெண் சக்தியும் சேர்ந்து கருத் தரிப்பதற்குத் தோற்றுவாயாகின்றன. இவ்வாறு சேர்க்கும் கலவிக்கு ஒழுங்கான காதல் முதிர்ச்சி ஓர் இன்றியமையாத முற்குறியாகும்.

## இரு பெரும் சக்திகள்

பசிக்கு உணவு வேண்டுவது எல்லா உயிர்களிடத்தும் காணப்படும் ஓர் இயற்கைப் பெரும் சக்தியாகும். ஆணும் பெண்ணும் கலத்தல் வேண்டுமென்னும் விருப்பமும் இத்தகைய மகா சக்தியோடு ஒப்பிடத்தக்கது. எனவே பசியும் காதலும் உயிரைப் பாதுகாப்பதற்கும் உற்பத்தி செய்வதற்கும் இயற்கையாய் அளிக்கப் பெற்றுள்ள இரு பெரும் சக்திகளாகும். உயிரை வளர்ப்பதற்கு உணவு வேண்டும். உடம்பு தொழிற்படும்போது ஏற்படும் நஷ்டம் உணவினாலேயே ஈடு செய்யப் பெறும். இத்தகைய உணவில்லாவிட்டால் உயிர் ஓய்வுற்று ஒழிந்துபோம். உடல், (Cell) நுண்ணுயிர்களால் நிறைந்திருக்கிறது. இந் நுண்ணுயிர்களின் கூட்டுத் தொழிலையே உயிர்ச் சக்தி தன் முக்கிய ஆதாரமாகப் பெற்றிருக்கிறது. மனித உடம்பின் ஒவ்வொரு பகுதியும்—கருவியும் இந் நுண்ணுயிர்களால் நிறைந்திருப்பதோடு, இவை யெல்லாம் ஒன்றோடொன்று தொடர்பு பெற்று ஒன்றை யொன்று தழுவி உயிர்தரித்து வாழுகின்றன. இந் நுண்ணுயிர்களுக்குப் பின் நின்று தாங்கி நிற்பது மனமாகும்.

இத்தகைய நுண்ணுயிர்கள் அல்லது ஜீவ அணுக்கள் தக்க முறையில் போஷிக்கப்படல் வேண்டும். இந் நோக்கம் நிறைவேறுவதற்கு நாம் உட்கொள்ளும் உணவு ஜீரணமாகி இரத்தமாகி உடம்போடு இரண்டறக் கலத்தல் வேண்டும். இதனை இயற்கையின்படி செய்தற்கு உடற் பயிற்சி முதலிய சுக வழிகளைக் கனித்தல் வேண்டும். இம்



முக்கியமான வேலை நடைபெறுவதற்கு இன்றியமையாத கருவிகள் தனித் தனியாக அமைக்கப்பட்டுள்ளன. சரீரத்தின் ஜீவ அணுக்கள் உணவை விரும்பும்போது நமக்குப் பசி என்ற உணர்ச்சி உண்டாகிறது. இவ் வுணர்ச்சி உணவைப் பெறுவதற்குரிய கருவியாகிய இரைப்பையில் நிகழ்வதாக நாம் உணருகிறோம். ஜீரணம் நடைபெறும்போது இயற்கை நிலையில் உணர்வதில்லை. கருத்தரிப்பதும் இவ்வாறுதான் நிகழ்கின்றது. அன்னபானத்தின் முடிவான நோக்கம் உடம்பைப் போஷித்து வளர்ப்பதே. ஆனால், பசி தாகத்தைப் போக்கிக் கொள்ளுவதுதான் அதி சமீப நோக்கமாக விருக்கிறது. பசியும், தாகமும்; உணவையும், நீரையும் உட்கொண்டவுடன் தீர்ந்து விடுகின்றன. ஆனால், உணவு ஜீரணமாவதும் உடம்போடு கலந்து கொள்ளுவதுமாகிய நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்கு அதிக நேரம் பிடிக்கின்றன. இவ்வாறு நேரம் கழிந்த பின்னரே உடம்பின் ஜீவ அணுக்கள் போஷிக்கப்படுகின்றன.

## ஓர் இன்ப உணர்ச்சி

பசியைப் போக்கிக் கொள்வதில் ஓர் இன்ப உணர்ச்சி ஏற்படுகிறதென்பதை ஒருவரும் மறுத்தலியலாது. பசி ஒழுங்காகக் காலக்கிரமத்தில் வந்து கொண்டிருப்பது உடம்பின் ஆரோக்கியத்திற்கும் இயற்கையான நிலைமைக்கும் தக்கதோர் சான்றாகும். விரும்பத்தக்க உணவிற்கும் வெறுக்கத்தக்க பொருள்களுக்கும் வேற்றுமை காண்பதற்காகவே ஆதியில் இயற்கை சுவை காணும் உணர்ச்சியை நமக்கு அளித்தது. உடம்பைப் போஷிப்பதோடு ஓர் இன்பத்தையும் பெறும் நிலையில் உணவு தேடிக்கொள்ளும் பொருட்டு மனிதன் தான் விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தின் பெரும் பகுதியும் செலவு செய்கிறான். இந் நோக்கத்தோடு அவன் பேருழைப்பும் கொள்ளுகிறான். மனித வாழ்க்கையை நீடிக்கச் செய்வதற்கு சொற்ப உணவும் தண்ணீருமே போதுமானவையாகும். இவைகளால் உடம்பு போஷிக்கப்படும் என்பது திண்ணம். ஆனால், நாகரீக முறையில் ஆரோக்கிய வாழ்வு நடாத்தும் மனிதன் சாதாரணப் பொருள்களை உணவுப் பொருள்களாகக் கொண்டமைவதில்லை. நாகரீக மனிதன் பசிக்காக மாத்திரம் உணவு கொள்ளாமல் ருசிக்காகவும் உணவு கொள்ளுகிறான்.

பசியும் ருசியும் கலந்து திருப்தி அடையும் நிலையிலேதான் அவனுக்கு உணவினால் ஏற்படும் இன்பமும் திருப்தியும் கிடைக்கின்றன.

பசி இயற்கையாகவே தோன்றும் உணர்ச்சி எனினும், இன்னின்ன உணவுப் பொருள்கள் வேண்டும் என்னும் உணர்ச்சி முன் அநுபவத்தாலும் அறிவுப் பழக்கத்தாலும் ஏற்படுகிறது. உணவின் போஷக சக்தியை மாத்திரம் கவனித்துக் கொண்டு நாவிற்கு இன்சுவை யூட்டுவதை மனிதன் கவனியாமலிருந்தால், இத்தனை உருசியுள்ள உணவு வகைகளும், பான வகைகளும், சமையல் தொழில் முறைகளும் அபிவிருத்தி யடைந்திருக்கமாட்டா. உருசியினாலேயே மனிதன் அமித போஜனம் கொள்ளுகின்றான். ஆனால், பசி தீர்ப்பதில் ஏற்படும் உண்மையான இன்ப உணர்ச்சி அமித உணவினால் ஏற்படாதென்பது கவனிக்கத்தக்கது ஜீவ அணுக்கள் போஷணைக்குரிய உணவை மட்டும் விரும்புவது போலவே, காதலும் உயிரைத் தோற்றுவிக்க வேண்டுமென்னும் விருப்பத்தை உடையனவாகும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்படும் போக இச்சையை ஒரு வகையில் பசியோடு ஒப்பிட்டுரைப்பது பொருத்தமுடையதே. பசி உணவால் நீங்குவதுபோல் இவ்வுணர்ச்சியும் இருபாலாரின் சேர்க்கையால் இயற்கை முறையால் சாந்தி பெற்று உயிராகக் கிளைக்கின்றது.

## இயற்கை அளித்துள்ள கருவிகள்

இயற்கை இக் கடமையை நிறைவேற்றுவதற்கு விசேடமான உறுப்புக்களை அளித்திருக்கிறது. ஜீவ அணுக்களின் திரளாகிய உடம்பிற்குரிய இவ்வுறுப்புக்கள் இயற்கையின் விசேடமான கருவிகளாகும். ஜீரண உறுப்புக்கள் உடம்பைப் போஷிப்பது போல் ஜனனேந்திரியங்கள் உயிர்களைத் தோற்றுவிக்கின்றன மக்களுடம்பு ஓர் சிக்கலான இயந்திரமாகக் கருதத் தக்கதெனினும், அதன் பகுதிகளெல்லாம் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாய் அற்புதமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பும் தனக்குரிய சிறப்பான கடமையில் ஈடுபட்டிருந்தாலும் அது உடம்பின் பொது நலத்திற்காக மற்ற அங்கங்களோடு ஒற்றுமைக்கிறதென்பது நன்கு சிந்தை செய்யத்தக்கது. இரு பாலாருக்கும் உள்ள சரீர சம்பந்தமான



காம நுகர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு மக்களை மேம்படச் செய்யும் பல வேறு உணர்ச்சிகளும் தோன்றி வளர்கின்றன என்பது பேரறிஞர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும் இப்போது சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மக்களது பேருணர்ச்சிகளுக்கெல்லாம் இது ஒன்றே ஆணிவேர் என்று கூறவியலாதெனினும், இதன் பயனாக மக்கள் பல வகையான நல்லுணர்ச்சிகளையும் பெற்று முன்னேற்றமடைந்து வருகின்றனர் என்பது ஒருதலை. உதாரணமாக காதல் அல்லது அன்பிற்கு ஆதி காரணமாக அமைந்த உணர்ச்சி சரீர சம்பந்தமான காமமேயாகும். காமம் பரிசுத்தமாகி காதலாக முதிர்கின்றது. இதுவே இரக்கம் அல்லது அநுதாப உணர்ச்சியாகவும் விளைகின்றது; சங்கீதமாகத் தழைக்கின்றது; கலைகளாகக் கிளைக்கின்றது; சமய வாழ்வாக ஓங்குகின்றது. ஜனனேந்திரியங்களின் அமைப்பு முறை அதி நுட்பமானதாகவும் விசித்திரமானதாகவும் இருக்கிறது. இக் கருவிகளின் மூலமாகத் தொழிலாற்றும் சிற்றின்ப நுகர்ச்சியை, இவ்வொரு நோக்கோடு செய்யும் காமப் புணர்ச்சியைப் பல வேறு வழிகளில் மாற்றி அமைத்துக் கொள்ளுதலும்—இச் சக்தியை ஓர் புதிய சக்தியாக்கி பல வேறு உயர்ந்த செயல்களில் பயன்படுத்திக் கொள்ளுதலுங் கூடும்.

## இலட்சியங்கள்-உருவங்கள்-விருப்பங்கள்

ஒரு மிருகத்திற்குக் காம உணர்ச்சி வருகிறதென்று வைத்துக் கொள்வோம். அது தான் சேகரித்துள்ள ஸ்தூல சக்தியைச் செலவு செய்வதைத் தவிர வேறு நோக்கம் எதுவும் கொள்வதில்லை. கலவியின்பத்தால் ஜனனேந்திரியங்களும் அவற்றோடு தொடர்புள்ள நரம்புகளும் விசேட உணர்ச்சியையும் உற்சாகத்தையும் திருப்தியையும் பெறுகின்றன. மக்கள் விஷயத்தில் இதற்குக் காரணமான உள்ளுணர்ச்சிகளான, காதல்—காமம்—அன்பு முதலியன தமக்குரிய லட்சியங்களையும் விருப்பங்களையும் உருவங்களையும் உள்ளத்தில் தோற்றுவித்து வளரச் செய்கின்றன. இதனால் உடம்பு முழுமையும் ஓர் விசேட சக்தியால் ஆவேசிக்கப் பெறுகின்றது.

# காந்தீயம்.

திரு. கே கோவிந்தராஜன் அவர்கள்.

உலகின் பல பாகங்களிலும், பல வேறு காலங்களில், பலதிறப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிகள் பல தோன்றுகின்றன. அவற்றால் கோரிய காரியங்கள் எத்திறப்பட்டதே யாயினும் சாதிக்கே முடிக்கப்படுகிறது. காரிய சித்திக்கு கிளர்ச்சியின் வேகமே ஏற்றதாகுமென்பது அறிஞர் பெரு மக்களின் முடிவான துணிவாகும். ஒருவர் செய்ய வேண்டிய 'காரியம்' மிகச் சிறிதாயிருப்பினும், அதற்கு அவரின் மனோ கிளர்ச்சி மிகுதியும் தேவையாயிருப்பதும், அதனால் காரியாதிகள் நிகழ்த்தப் பெறுவதும், முடிவில் எத்திறப்பட்டதே யாயினும் சித்தியைப் பெறுவதும் மறக்கமுடியாத

---

## இரட்டை நோக்கம்

காதலென்னும் சக்தியால் உடம்பும் உள்ளமும் வசீகரிக்கப் பெற்றபின் காதலனும் காதலியும் தம்முள் கலந்துகொள்ள விரும்புகின்றார். இவ்வாறு நிகழும் சேர்க்கையால் ஜனனேந்திரியங்களும் அவற்றிற்குரிய நரம்புகளும் தொழிற்பட்டு அமைதி பெறுகின்றன. காமம் அல்லது காதல் பல வேறு காரணங்களால் முதிர்ச்சி பெறும்போது ஆண் மகன் சுறு சுறுப்பாக அதனை வெளியிடுவது இயற்கையாகவிருக்கிறது. இந் நிலையில் அவன்பால் காதல் கொண்ட பெண்மணியும் அவனை யொத்த தீவிர உணர்ச்சிகளைப் பெறுகின்றாள். பின்னரே இயற்கை நிலையில் இவர்களது கலப்பு நிறைவெய்துகின்றது. இத்தகைய கலப்பே கருத்தரிப்பதற்குரிய முன் நிகழ்ச்சியாகும். இவ்வாறு நிகழ்வதனாலேயே மக்கள் குலம் வளர்ந்தோங்கி வருகிறது.

---



உண்மையே யன்றோ! பலர் மூலம் நிகழ்த்தப்படும் பெருங் கிளர்ச்சியும் மனோ வேகத்தால் உதிப்பதே. இதுகாறும் நிகழ்த்தப்பட்டதும்—நிகழ்த்தப்படுவதுமாகிய கிளர்ச்சிகளைச் சொல்லளவில் பல வகையாகக் கூறினும் செயலளவில் இரு கூறாகவே கொள்ளலாம். அவை சாத்விகம் என்னும் அஹிம்ஸை (Non-violent), சாத்வீகம் இன்மை என்னும் ஹிம்ஸை (Violent), என்பனவே.

நவ நாகரிகத்திகழ்வு மிகுந்துள்ள இந் நூற்றாண்டில், இப் புனித இந்திய தேசத்தில் அடிமைச் சங்கிலியைத் தகர்த்தெறியும் உயர்ந்த நோக்கத்தில், உலக மக்களின் பெருங் கவனத்தையும், பெரும் சிறப்பையும் பெற்று அவதார புருடரெனத் திகழும் மகாத்மா காந்தியடிகளின் பெரு முயற்சியால் சிருஷ்டிக்கப்பட்ட கிளர்ச்சியே சாத்விகத்தை அடிப்படையாகக் கொண்ட "காந்தீயம்" என்பதாகும். அதையே ஒத்துழையாமை யெனவும் சாத்வீக எதிர்ப்பு எனவும் இன்னும் பலவாறாகவும் அழைக்கப் பெறுகிறது. காந்தீயத்தின் சிறப்பையும், அதன் தெய்வீக வலிமையையும்பற்றி அறிஞர் பலர் நூற்களாலும் கட்டுரைகளாலும் மேடைப் பேச்சுகளாலும் விளக்கியுதவி யிருக்கின்றனர்.

"காந்தீயம்" என்னும் பதத்தை உச்சரிக்கும் போதே மனதில் ஓர் காந்த சக்தி எழுவது அநுபவத்தாலறியும் உண்மையேயாகும். அத்தகைய புனிதக் கிளர்ச்சி இதற்கு முன் உலகின் எப் பாகத்திலும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இக் கிளர்ச்சியில் ஈடுபட்டுத் தொண்டாற்றிய பல்லாயிரக் கணக்கான இந்தியத் தாயின் இணையற்ற புதல்வர்கள் தங்களுக்கு ஏற்ற ஆயுதமாக 'மனோசக்தி'யையே கொண்டார்கள். "பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும், நற்றவ வானினும் நனிச் சிறந்தனவே" என்னும் பாரதியாரின் சீரிய கொள்கையைக் கருத்திற் கொண்ட சுதந்திரப் போர் வீரர்களாகிய இந்தியர்கள், சாத்வீக எதிர்ப்பு (Passive resistence) என்னும் தெய்வீகப் போரை வலிமை மிக்க ஆள்வோரிடம் சென்ற 1922-ம் வருடத்தில் தொடுத்தார்கள். அவர்கள் கோரி நின்ற சித்தி ஒருவாறு கிட்டாது மறைந்ததாயினும், உலக மக்களுக்கு அது ஓர் பெரும்—அரிய—தெய்வீக—சிறப்பு வாய்ந்த பாடத்தையே கற்பித்தது. இந்தியாவில் உற்பத்தியாகி பெருஞ் சுட

ரிட்டுப் பிரகாசித்து மறைந்த காந்தீயம்—சாத்வீக எதிர்ப்பு, பல வேறு தேசங்களில் தோன்றி அத் தேச மக்களுக்கு வெற்றியைத் தந்த உண்மை தேச சரித்திரத்தை காலத்தோடு அறிந்து வருவோர் தெரிந்ததே! பிற நாடுகளில் பயன் தந்த சாத்வீகப் போர் (காந்தீயம்), தான் தோன்றிய நாட்டில் பயன் தராது மறைந்ததின் காரணமென்னவெனும் ஐயம் தோன்றின், அதற்கு பாசியையும், சேற்றையும், துர்க்கந்தத்தையும் கொண்ட நீரையுடைய குளத்தில் நீராடி, அக் குளநீரே சிறந்ததென எண்ணி மகிழும் மக்களை நம் இந்திய தேசம் அதிகமாகப் பெற்றுள்ளதே யென்பதும் மிகையாகாது.

சத்தியமே நித்தியமான தாகையால் சத்தியத்தா லாக்கப் பெற்ற சாத்வீக ''காந்தீய''மும் நித்யத்வம் வாய்ந்ததே! தேசத் தொண்டர்கள் எனவும், தேசத் தலைவர்கள் எனவும் சொல்லிக் கொண்டு சுய நல வளர்ச்சியால் ஆகாத காரியங்கள் பலவற்றினைச் செய்து ஊறு விளைவித்தோர் மிகுந்ததுவே சத்திய—சாத்வீக—காந்தீயம் வீறு கொண்டெழுந்து நின்ற நிலையினின்று அடங்கி மறைந்ததற்குக் காரணமாயினும், சமயம் வாய்க்கும்போ தெல்லாம் உண்மையாளர்பால் அஃது தோன்றித் தோன்றித் திகழ்வது கண்கூடே!

காந்தீயத்தைக் கடைப்பிடித் தொழுகும் உரிமை உண்மையாளர்க்கே உடையது. அகத் தூய்மையோடு புறத் தூய்மையையும் பெற்றுள்ளோர்க்கே அது ஏற்றதுமாகும். தந் நலப் பற்றுடையோர்க்கு ''காந்தீயம்'' மிகப் புறம்பானதே! ''தந் நலமற்ற தியாகிகளுக்குப் புருஷார்த்தம் பெற இதர சாதனங்கள் தேவையே யில்லை'' என்னும் சுவாமி விவேகாநந்தரின் கொள்கையைப் பின்பற்றுவோர்க்கே ''காந்தீயம்'' அழகு தரும் அணியாகும். தந் நலங் கோரி உடன் பிறந்தார்க்கு ஊறு பல விளைவிக்கும், மக்களினத்தவராயினும் மாக்களினத்தினும் கீழ்ப்பட்ட மனோ நிலையைக் கொண்டோர்க்குக் ''காந்தீயம்'' தகிக்கும் கனலையொக்கும்.

அடிமைச் சங்கிலியால் பிணித்துக் கட்டப்பட்டு நைந்து அவதியுறும் நம் பாரதத் தாயின் சுதந்திர வாழ்விற்காகவே (விடுதலை) எல் ... வல்ல இறைவன் காந்தியையும் காந்தியின் மூலம் காந்தீ...



யும் உற்பத்தி செய்தார் போலும்! அடிமையில் அவதியுற்ற அயர்லாந்தும், எகிப்தும், ஜப்பானும் இன்று விடுதலை பெற்று இதர நாடுகளோடு சுதந்திர நாடுகளாய்த் திகழ்வது அந் நாட்டு மக்களின் அரிய பெரிய உழைப்பாலன்றோ! ஆனால், அத் தேச மக்கள் தாய் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் குருதியைத் தரையிற் சிந்தினர். ஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட அவர்களின் கிளர்ச்சி பயனையே தந்ததாயினும், நம் தேச மக்களுக்கு அத்தகைய கிளர்ச்சிகள் எவ் வகையாலும் பயனையே தராது. பண்டைக் காலந் தொண்டே ஆத்ம விசாரம், அஹிம்ஸா தர்மம், சத்திய நன்மைகள் முதலிய புனிதத் தன்மைகளை யடையும் நோக்கங் கொண்ட பெரியார்கள் அவதரித்து உலக மக்களுக்கே உதவி புரிந்து வந்துள்ள நம் புனித பாரத பூமியில் ஹிம்சையில் நோக்கங் கொண்ட மக்கள் எவ்விதந் தோன்றுவர்? சங்கரர், இராமாநுஜர், மத்வர், புத்தர் போன்ற நம் இந்திய மதத் தலைவர்களின் கொள்கைகளும், தயாநந்த சரஸ்வதி, இராஜா ராம் மோகன் ராய், குரு நானக், குரு கோவிந்தர் இராம கிருஷ்ண பரமஹம்ஸர், விவேகாநந்தர், மாடம் பிளாவட்ஸ்கி போன்ற பல இந்திய சீர்திருத்தக்காரர்களின் கொள்கைகளும் சாத்வீகத்தின் பாற்பட்டதன்றோ! தேச நிலையையும், கால நிலையையும் போதுமானவரை சீர்தூக்கி யறிந்தே உலகம் போற்றத்தக்க உத்தம இயக்கமாம் காந்தீயத்தை மகாத்மா காந்தி உற்பத்தி செய்து இந்திய மக்களுக்கு உதவினார் அதன் மூலமே இந்தியா விடுதலையடைய முயல்கின்றது. ஆனால், நமது பழம் பெரும் பாரத நாட்டில் காலக் கொடுமையால் உண்மை தியாகிகளைப் பார்க்கிலும் போலித் தியாகிகளே மிகுந்திருக்கின்றனர். எனவே விடுதலைப் போராட்டம்—முடிவு பெறாது நீளவும், வீரர்கள் வெட்கிக் குனிந்து நடக்கவும் ஏதுவாயிற்று. சுயநலப் பேய்களின் தாண்டவத்தால், அந்தோ! இன்று நம் நாட்டில் வேற்றுமை உணர்வு பாகுபாடுகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. மேடையில் நின்று ஆடம்பரமாய்ப் பேசும் வீண் நடிக குணமும், தந் நல தியாக வெறுப்பும், பயனைக் கருதி மற்றோரைப் பாழ்ப் படுகுழியில் தள்ளவும் முற்படும் தகாத எண்ணமும் நம் நாட்டு மக்கள் எவர்பாலும் அணுகாதிருந்தால் இன்று நம் இந்தியா இருக்கும் சிறப்பு வேறு! காந்தீய ... ம் கதிர் விட்டுப் பிரகாசிக்கும்.

"உண்மையான ஜயமடைவதற்கு, உண்மையான ஆனந்தமடைவதற்கு உள்ள பெரிய ரகசியமாவது: பிரதி பலனை விரும்பாத மனிதனே மிக மிக ஜயமுள்ளவனாயிருக்கிறான்."

என சுவாமி விவேகானந்தர் திருவாய் மலர்ந்தருளியதும் சுயநல பற்றற்ற ஊழியர்கள் தேவை யென்பதை உணர்த்தவே யன்றோ! நாம் பொதுவாக இந்திய மக்களையே மேலே குறித்து வந்துள்ளோமாயினும், சென்னை மாகாணத்திலுள்ளோர்க்கே இவை பெரிதும் பொருந்தும். சமீபத்தில் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து சென்ற சாது டி. எல். வாஸ்வானி, "சென்னைத் தலைவர்கள், பேச்சில் வீரர்களே யன்றி செயலில் மிகப் பிற்பட்டவர்களே யாவார்கள்', எனக் கூறினார். அவ்விதமே தென் நாட்டு சுற்றுப் பிரயாணத்தின் போது இளைஞர் இயக்கத்தைப் பெரிதும் கவனித்துச் சென்ற ஸ்ரீ எச். டி. ராஜா என்பவர், தமது (Young Liberator) "யௌவன சுதந்தர வீரன்" என்னும் பத்திரிகையில் சென்னை மாகாண இளைஞர்களின் ஊக்கத் தளர்வைப் பற்றி பெரிதும் வருந்திக் கட்டுரையொன்று எழுதியிருக்கிறார். மேலும் விவேகானந்த சுவாமிகள் ஜப்பானிலிருந்து எழுதிய கடித மொன்றில் சென்னைப் பிரமுகர்களைக் குறித்துள்ளதும் கவனிக்கற் பாலதே:

"சென்னையில் சுயநலமற்று, நேர் வழிபட்டு, உயிர் போகும் வரையில் அச்சமென்பதின்றி உழைத்து, ஏழைகளுக்குத் தொண்டு புரிந்தும் அவர்கள் பசியைத் தணித்து, இந்தியாவில் உங்கள் முன்னோரில் சிலர் செய்த கொடுமைகளால் அடைய நேரிட்ட இப் பரிதாப நிலையினின்றும் தேசத்தை மீட்கவும், அறிவால் லச்ச தீபம் ஏற்றவும் இப்பொழுது எத்தனை பேர் முன் வருவீர்கள்?

எனவே மிகுந்துள்ள குறைகள் நீங்கவும், நாட்டின் அடிமைச் சங்கிலி அறவும், எளிமை மக்கள்பா லிருந்து அகன்று இன்பம் எல்லோர்க்கும் சமவாய்ப்பில் கிட்டவும் செய்ய வல்லது காந்தீயமே! காந்தீயமே நமது புண்ணிய பாரத நாட்டிற்கும், பாரத மக்களுக்கும் கதிமோட்ச மளிக்கும் ஒவ்வொரு இந்தியப் புதல்வனும் காந்தியைப் போற்றி, காந்தீயத்தை ஏற்றிக் கதரை உடுத்துவதே அவன் தன் தாய் நாட்டிற்குச் செய்யும் தொண்டெனக் கொள்வானே யாயின் அதுவே தற்கால சுதந்தர வழியை நேர்மைப் படுத்தும் சீரிய முறையாகும்.

காந்தி வாழ்க! கதர் வாழ்க!! காந்தீயம் வாழ்க!!!

---



# ஆலனின் அமுத மொழிகள்.

## ஸ்ரீமான். A சுருளியாண்டி அவர்கள்.

1. மனிதன் எதனை நினைக்கின்றானோ அதன் வடிவை அடைகிறான்; அவனது நினைப்புக்களின் தொகுதியே அவனது ஒழுக்கம்.

2. செயல்கள் நினைப்பின் மலர்கள்; இன்ப துன்பங்கள் அதன் கனிகள்.

3 மனிதன் ஆவதும் அழிவதும் தன்னாலேதான்.

4. மனிதன் நினைப்பின் கர்த்தா; ஒழுக்கத்தைக் கருக் கட்டுகின்றவன்; தனது நிலையையும் சுற்றுச் சார்பினையும் விதியையும் உண்டாக்கி உருப்படுத்துகின்றவன்.

5. சீரப் பிரயாசைக்குப் பின்னடையாதவன் கருதிய கருமத்தைத் தவறாது செய்து முடிப்பான்,

6. நல்ல நினைப்புக்களும் நல்ல செயல்களும் ஒரு காலத்திலுங் கூட கெட்ட பலன்களைத் தரா; தீய நினைப்புக்களும் தீய செயல்களும் ஒரு காலத்திலுமே நல்ல பலன்களைத் தரா.

7. பிரபஞ்சத்தில் முதன்மையாக நிற்கும் சக்தி ஒழுங்கே யன்றிக் குழப்ப மன்று; வாழ்க்கையின் உயிர் நிலை நீதியே யன்றி அநீதி யன்று; உலகில் ஆன்மார்த்தத்தைச் சீர்படுத்தி நடத்தி வரும் சக்தி தருமமே யன்றி அதரும மன்று.

8. மனம் ஆண்டான்; சரீரம் அடிமை. முன்னாலோசனையோடேனும் அன்றித் தன்னியல்பிலேனும் மனம் கொள்ளுகின்ற நினைப்புக்களை ஒட்டியே சரீரம் நடக்கின்றது.

9. தனது நினைப்புக்களை மாற்றிக்கொள்ளாது உணவுகளை, மாற்றிக் கொள்வதால் பயனின்று; தனது நினைப்புக்களைச் சுத்தமாக் [illegible]வன் அசுத்த உணவை விரும்ப மாட்டான்.

10 சரீரத்தின் வியாதிகளை நீக்குதற்கு மன உற்சாகமுள்ள நினைப்புக்குச் சமமான வைத்தியன் இல்லை; கவலையைப் போக்குதற்கு நன் மனம் போன்ற நட்பு வேறொன்றில்லை.

11 நினைப்பைக் காரியத்துடன் சம்பந்தப் படுத்தினாலன்றி விவேகமான காரிய சித்தி யொன்றையும் அடைதல் இயலாது.

12. எவன் தனது வாழ்க்கையில் யாதொரு காரியத்தையும் லட்சியமாகக் கொள்ளாதிருக்கின்றானோ, அவன் பலஹீனத்தின் அறி குறிகளாகிய சில்லரைத் தொந்தரவுகளுக்கும், அச்சத்திற்கும், துன்பங் களுக்கும் எளிதில் இரையாவான்.

13 முயற்சியினாலும் அப்பியாசத்தினாலும் மாத்திரமே பலம் விருத்தியாகும்.

14. ஐயமும் அச்சமும் அறிவின் பெரிய விரோதிகள்; அவ ற்றை அழிக்காது அவற்றிற்கு இடங் கொடுத்துவிடின், தான் செல் லும் வழியில் அடிதோறும் அவை தன்னைத் தடுத்துக்கொண்டே யிருக்கும்; ஆயின், ஐயத்தையும் அச்சத்தையும் வென்றவனுக்குத் தோல்வி யென்பதே கிடையாது.

15. ஒருவன் தனது நினைப்புக்களை மேம்படுத்தினால் மட்டுமே உயர்வும், வெற்றியும், காரிய சித்தியும் அடைதல் கூடும்

16. கஷ்டப்பட்டாலன்றி, ஒருவனுக்குக் காரிய சித்தியேனும் அபிவிருத்தியேனும் உண்டாகாது.

17. ஆன்ம சித்திகள் பரிசுத்தமான நாட்டங்களின் பூரண பலன்கள்.

18. எவ்வகையான காரிய சித்தியும், முயற்சியின் முடிபும் நினைப்பின் மகுடமுமாகும்

19. நியாயமான நினைப்புக்களால் பெற்ற வெற்றிகளை எச்ச ரிக்கையோடு போற்றிக் காத்தல் வேண்டும்.

20. எவன் தன் ஹிருதயத்தில் ஓர் உயர்ந்த பாவனையாகிய காட்சியைப் பேணி வருகின்றானோ, அவன் அதனை ஓர் காலத்தில் அ[illegible]ந்தே தீருவான்.



21. அவாவுதலே அடைதலாம்; நாடுதலே நிறைவேற்றுதலாம். அழுத பிள்ளை பால் குடிக்குமன்றோ?

22. உங்கள் மனத்தில் உயர்ந்த காட்சிகளைக் காணுங்கள்; நீங்கள் கண்டதே காட்சி; பெற்றதே பேறு. இப்போது நீங்கள் காணும் காட்சியே இனி நீங்கள் பெறும் பேற்றிற்கு உறுதி. நீங்கள் கொண்டிருக்கும் மனோ பாவமே முடிவில் கைவல்யமாகும்.

23. உங்கள் நினைப்புக்களும், மனோ திருஷ்டியும், மனோ பாவமும் உயர்ந்தால் நீங்களும் உயர்வீர்கள்; அவை தாழ்ந்தால் நீங்க ளும் தாழ்வீர்கள். அவை எங்ஙனம் உள்ளனவோ அங்ஙனமே நீங்க ளும் ஆவீர்கள்.

24. முயற்சி எவ்வளவோ பலனும் அவ்வளவே; காலமென்றே னும் அதிர்ஷ்டமென்றேனும் ஒன்றில்லை.

25. மனோ சாந்தி ஞானத்தின் ஆபரணங்களில் ஒன்று; அது தன்னை அடக்கியாள்வதற்காகப் பொறுமையோடு நீண்டகாலம் செய்த முயற்சியின் பலன்.

26. தன்னடக்கமே வல்லமை; சரியான நினைப்பே ஆண்மை; அமைதியே ஆற்றல் உங்கள் ஹிருதயத்தைப் பார்த்து "கவலை கொள்ளாதே; சாந்தியாயிரு" என்று சொல்லுங்கள்.

27. தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்து வரும் ஓர் மனிதன், ஞானத்தையும், துக்க நிவர்த்தியையும், சுகப் பிராப்தியையும் அடையாமலிரான்.

28. மனம் வாழ்வை விதிக்கும் நியந்தா; நிலைமைகளைச் சிருஷ் டித்துத் திருத்தும் கர்த்தா; தனது சொந்த பலன்களை அனுபவிக்கும் போக்தா, பொய்யைச் சிருஷ்டிக்குந் திறனும், மெய்யைக் காணுந் திறனும் மனத்திற்குண்டு.

29. நினைப்பிலும், சொல்லிலும், செயலிலும் மேம்பட்டு வாழ் தலே உயர்தர வாழ்வு.

30. ஒழுக்கத்தை அனுஷ்டிப்பதாலேயே ஒழுக்கத்தை அறியக் கூடும்.

31. ஒழுக்க மார்க்கமே ஞானத்திற்கு நன்மார்க்கம்.

32. மனத்தை ஒழுங்கு படுத்துவதில் முதல் சாதனம் சரீரத்தின் சோம்பலை ஒழித்தல்; அடுத்த சாதனம் மீதூண் ஒழித்தலாகும்.

33. நிஷ்காமிய கருமம், அசையாத நடுவு நிலைமை, அளவற்ற பொறுமை ஆகிய மூன்று பெரிய மூலாதார ஒழுக்கங்களையும் ஒருவன் தனது வாழ்க்கையில் நாள்தோறும் அப்பியசித்தும் ஆண்டும் வருவானாகில் அவன் நிச்சயமாய் உயர்தர வாழ்வை யடைவான்.

34. எவ்விடத்தில் சரியான மனோ நிலைமைகள் இருக்கின்றனவோ, அவ்விடத்தில் மோக்ஷமும், அமைதியும் இருக்கின்றன.

35 சரியான அறிவு, தளராத நன்னடக்கையால் உண்டாகிறது.

36 ஒழுங்கீனமாக வாழ்கின்றவன் ஒரு போதும் துன்பத்தினின்றும், துக்கத்தினின்றும் தப்ப இயலாது.

37. "மெய்ப் பொருளை நேசிக்கிறவர்களே! உங்கள் மனத்தை ஒழுங்கு செய்யுங்கள். எச்சரிக்கையோடும், ஆலோசனையோடும் இருங்கள். உங்கள் முக்தி உங்கள் அருகில் உளது உங்கள் ஆயத்தமும், முயற்சியும் மட்டும் வேண்டுவன. நீங்கள் பத்துத் தடவை தவறினும் அதைரியப்படாதீர்கள்; நீங்கள் நூறு தடவை தவறினும் ஊக்கத்துடன் எழுந்து உங்கள் வழியைத் தொடருங்கள்; நீங்கள் ஆயிரந் தடவை தவறினும் தளர்ச்சி யடையாதீர்கள். சரியான மார்க்கத்தில் பிரவேசித்த பின்னர் அம் மார்க்கத்தினின்று சிறிது தவறினும் வெற்றியடைதல் நிச்சயம்."

38. "முதலில் யுத்தம்; முடிவில் வெற்றி. முதலில் வேலை; முடிவில் ஓய்வு முதலில் எளிமை; முடிவில் வலிமை தொடக்கத்தில் தாழ்ந்த வாழ்வு, யுத்தத்தின் சந்தடி, யுத்தத்தின் குழப்பம்; இறுதியில் உயர்தர வாழ்வு. மௌனம், சாந்தி."



# அன்னையின் அழைப்பு*

(ஓர் தேசீய நாடகம்.)

("ஆண்டி")

### பாத்திரங்கள்.

சுப்புசாஸ்திரி— 50 வயது.
சங்கரன்:— அவரது புதல்வன் 22 வயது. கோர்ட்டில் குமாஸ்தா வேலை. விவாஹமாகப்போகும் மணமகன்.
ரங்கநாதன்:— இரண்டாம் புதல்வன் 16 வயது.
அன்னபூர்ணை:— சாஸ்திரியார் மனைவி 45 வயது.
ஓர் சுமங்கலி:— 50 வயது.
புரோகிதர், தோழர்கள், சுற்றத்தார்.

நேரம்:— காலை 10 மணி.
இடம்:— ஓர் சிறிய வீட்டின் உட்பாகம்.

*ட்ரங்கு பெட்டி யொன்றைத் திறந்து சேலைகளைப் பரிசோதனை செய்துகொண்டு அன்னபூர்ணை நிற்கிறாள். சுப்புசாஸ்திரி ஒரு புறமும் ரங்கநாதன் மற்றோர் புறமுமாக ஓர் பழைய மேஜை யருகில் நின்றுகொண் டிருக்கின்றனர். வெளியில் ஓர் பெருத்த ஆகோஷமும், பல பேர்கள் சேர்ந்து பாடும் பாட்டுகளும் வெகு தூரத்திலிருந்து கேட்கின்றன.*

**சுப்புசா:—** அதென்ன எரச்சலுடா கேக்காது வெளிலெ?

**ரங்க:—** கேக்கொன்னும் கேக்கலியே, அப்பா—(உற்றுக் கேட்டு) ஆமாம். இப்போக் கேக்காது. பெரிய கோஷம்போலிருக்கு. (வாயிற் கதவருகிற் சென்று வெளியே நோக்கி) அவா எதுக்காக இப்படிக் கூப்பாடு போடறா? ஓர்த்தரேங் காணவுமில்லையே.

**சுப்புசா.—** குஸ்தீ கிஸ்தீ யென்னமேன் இருக்குமோ?

**ரங்க:—** குஸ்தி யொன்று மில்லையப்பா இன்னிக்கி. நோட்டீஸ் வல்லியே. அதிலேம் பத்து மணிக்கா குஸ்தீ?-இந்தச் சத்தம் தெக்குத் தெருவிலிருந்தன்னா வறது?

* அயர்லாந்து மஹா கவி ஸ்ரீ W. B. யீட்ஸ்இயற்றிய தேசீய நாடகமொன்றைத் தழுவி இந் நாடகமும் எழுதப்பட்டிருக்கின்றது.

அன்ன:— இல்லாட்டா தெருப்புள்ளைய ளெல்லாமாக் கூடிக் குண்டு கூத்துப் போடறதுபோ லிருக்கு, பந்தடிக் கூத்து. அது தாங் கத்தறது சவங்கள். அவியம் போடாத வெளையாட்டுண்டோ இந்தக் காலத்துப் புள்ளையளுக்கு? அது போயுட்டுப் போரதுன்னு- இஞ்செ இப்பிடி வந்து பார்க்கலியே நீங்கள் நம பாத்துக் கொழந்தை சங்கு வாங்கி வெச்சிருக்கிற கூறச் சேலே சப்பந்திச் சேலே எல்லாத்தியும்?

சுப்புசா:— (மேஜை யருகிலிருந்த நாற்காலி மேலுட்கார்ந்து) ஓ! ரொம்ப ஒசத்தியான சேலேபோ லிருக்கே யிது? நூறு நூத் தம்பது ரூபாவாலியும் வெலே யிருக்கும்போ லிருக்கே?

அன்ன:— எம்பத்தஞ்சு ரூவாதானும். நீங்களும் என்னெக் கல்யாணம் பண்ணறபோது எடுத்து வெச்சேனே கூறச் சேலே! தேர் திருணு அடியந்தராவசியங் களுக்குத்தான் உடுத்திக்கறதுக் கில்லே. வெறும் நாளேக்குக்கூட உடுத்திக்க ஒதவுமா அதிப்போ? பாத்துப் பாத்து எடுத்தேனே எடச்சி சேலேயை நாம பொண் பொறந்து வாழ்ந்த சந்தம் போலெ!

சுப்புசா:— நாந்தாஞ் சொல்லேனேடீ, நமக்கொரு புள்ளக் கொழந்தையும் தக்கி, ஒரு பெரிய குடும்பத்திலேன் சம்பந்தம் கெடச்சு, இம்புட்டுப் பெரிய கூறைப்பு மெடுப்பன் இன்னுப்புட்டு நாம்பதான் எப்பவேன் நெனச்சிருந்தோமா?

ரங்க:— கொளத்தங்கரை வழியா ஆரோ ஒருத்தி-சுமல்கிலி- முக்காடேம் போட்டுக்குண்டு வெய்யில்லெ ஓடி வரு இஞ்செ. நம பாத்துக்குத்தாம் போலிருக்கு.

அன்ன:— நம பாத்துச் சங்குக் கல்லியாணத்தெப்பத்தி ஆராவது அசல்த் தெருவுக்காறி எங்கிட்டெ வந்து கேட்டுட்டுப் போக வரு போலிருக்கு— நோக்காருன்னு தெரியறதோடா அவளே?

ரங்க:— அது நம்பூர்க்காரியே யல்ல அம்பா! அசலூர்போ லிருக்கு. நம பாத்துக்கும் வரலேயவள். கோண ராமுவும் அவாத்துப் புள்ளையளும் வாசல்லெ நெல்லொணத்திக் குண்டிருக்கிற சந்து வழியாப் போயுட்டாள் அவள். (வாசற் கதவை அடைத்துத் தாளிட்டுவிட்டு, அன்னபூர்ணவை நோக்கி) அம்மா, அன்னிக்கி ராத்திரி பயித்தாறச் சேஷி சொன்னது நெனவிருக்கோ நோக்கு? எப்பவேன் ஊர்ச் சண்டையோ அடிபிடியோ வறபோது ஊரைச் சுத்தி நடமாடற ஒரு பேயெப்பத்தி?

அன்ன:— நன்னுருக்குத்தாம்பொ! சேஷியும் செறிக்கியும்! அந்த நாசபத்துப் போவாளென் நெனச்சுட்டியே அப்பா இன்னிக் குப்பாத்து! இன்னம் மூனு நாளேக்கிச் சோறு கடையாது!— அந்தக் கதவையேஞ் சாத்தினுடா? கல்யாணத்தன்னிக்கு வாசக் கதவெச் சாத்துவாளோ?—தறவுடா ஆதை, அதை ஒங்கண்ணு வரட்டும் அவன் வற சத்தங் கேக்கறது வெளீலெ. (ரங்கன் கதவைத் திறக்கிறுன்.)



சுப்புசா:— சங்கரன் வறபோது அவனோட மாமனுருட்டிருந்து வரதக்ஷிணை ரூபாய் பாக்கியையும் வாங்கிக்குண்டு வரச் சொல்லீர்ந்தேன். குடுத்தாளோ என்னவோ தெரியலே. நாம்பள் பேசி முடிச்ச ஒடனேயே பணத்தைக் கையோட வாங்காட்டா பிற்பாடு வீண் பொல்லாப்பா வந்து சேருமது. பொண்ணைத்துக் காருளானதுக்குலெ ஒரு வேளே வாக்கு மாறினலும் மாறிடுவாள். அன்னிக்கி நிச்சயதாம்பூல மாகறதுக்குள்ளாலெ என்னே என்ன சஷ்டப்படுத்திப்புட்ட! வக்கீல் வாஜாலகனல்லவோ?

## (மணக்கோலம் பூண்ட சங்கரன் பிரவேசம்)

அன்ன:— அப்பா, சங்கு என்ன தாமுஸமுடா அங்கே இம் புட்டு நேரம்? மணி பத்தாறதே—மூர்த்தத்துக்கு லக்கினம் வந்திடுமே—மாடிமேலே வந்து ஒங்கத்திம்பார், சாமியத்தான், மேலாத்து ராமன், கிருஷ்ணன், சின்னக் கோவாலன், ஈச்சப்பா, சங்கப்பா, ஒங்க முன்சீப்பு எல்லாருங் காத்துண்டிருக்காளே?

சங்கரன்:— அதற்கென்ன? என்னுடன் கச்சேரியில் குமஸ்தாக்களாயிருக்கிற ஒன்றிரண்டு பிராம்மணரல்லாத சினேகிதர்களும் சிரஸ்ததாரும் வந்திருந்தார்கள் கல்யாணப் பந்தலில். அவர்களுடன் கொஞ்சம் பேசி உபசாரம் செய்துவிட்டு, வாத்தியாரையும் உடனே முகூர்த்தத்திற் கழைக்க வரும்படி ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன், வருகிற வழியில் கிட்டு ஜோஸ்யரையும் கண்டு முஹூர்த்தத்திற்கு வரும்படி யழைத்தேன்.

அன்ன:— ஐயையோ! அவராம்படையாளேச் கூப்படாதுக்கு விட்டுப் போச்சே! கல்யாண திருதிலெ என்னெல்லாந்தான் நெனவிருக்க வேண்டிருக்கு!—போட்டும் போ! அவரையாவது கண்டு நமக்காரம் பண்ணினயே நீ.—என்ன சொன்னுரவர்?

சங்கரன்:— நாங்களிருவருமே சரியான ஜோடி யென்றும் இவ்வூரில் வேறு எந்த ஜோடியையும் என்னையும் தங்கத்தையும்விட அதிக சந்தோஷத்துடன் அவர் சேர்த்து வைத்ததில்லே யென்றும், இனிமேலும் வைப்பாரோ என்று சந்தேகப்படுவதாகவும் தெரிவித்தார்.

சுப்புசா:— அதிருக்கட்டுமுடா, அந்த ரூவாயெ வாங்கிக் கிண்டு வந்தியா ஒங்க மாமனாருட்டிருந்து?

சங்கரன்:— ஆம், இதோ இருக்கிறது. (தன் கையிலிருந்த பணப் பையை மேஜை மீது வைக்கிறான்.)

சுப்புசா:— (பணப் பையை எடுத்து நோட்டுகளை எண்ணிப் பார்க்கிறார்.)

அன்ன:— (ட்ரங்குக் கதவைச் சாத்திவிட்டுப் புடவைகளை ஓர் வெள்ளித் தாம்பாளத்தில் வைக்கிறாள்.)

சுப்புசா:— தொகை சரிதான். இதெ வாங்க்றதுக்குள்ளாக எம்புட்டு வருத்தப்பட்டுப் போச்சு இங்கறாய் சங்கரா? நோக்குத் தெரியாது. டேயப்பா! ஒங்க மாமனார் தாணுவய்யர் வக்கீலோல்லியோ?—இதிலெ கொஞ்சந் தொகையை மொள்ள அமுக்கிப்புடலாமின்னுட்டு பாத்தார். பொண் பிறுப்தியாகறவரேலியுமாவது இதுலே பாதிப் பணம் எங்கிட்டிருக்கட்டுமேன் இன்னு கேட்டார். நான் விடுவேனோ? இவரிலேலங் காஞ்சானல்லவோ? அவர் தடுக்குக் கடிலெ நொழஞ்சா நாங் கோலத்துக்கடிலெ நொழஞ்சிடுவேனே! முடியவே முடியாது. சொல்லி அத்துப் பேசிப்புட்டேன் நான். பொண் ப்ராப்தியாகட்டும் ஆகாமப் போட்டும், அவளை யெம் புள்ளையாண்டான் தாலி கெட்டறதுக்கூன்னுப்புட்டு ஒத்தக்கட்டிலேறணுமோ ரூபா யாயிரமும் கையிலெ வரணு முன்னு சொல்லிப் புட்டேன் நேத்திக்கி. அப்புறம் அவாப்படையாளும் சொன்னா போலிருக்கு; அவ மாமியார், அசலாத்து இன்ஸ்பேட்டர், எல்லாரும் வந்து அவனெ நிர்ப்பந்தப் படுத்தினதுக் கப்றமுன்னா அவன் வணங்கினான்.

அன்ன:— பணத்தை அளையாரத்துக்கூன்னா ஒங்களுக்குஞ் சந்தோஷந்தாம் போலிருக்கு!—சும்மாவா பணமின்னாப் பொணமும் வாயெ தறக்குமின்னு போட்டா அவையார் வசனம்?

சுப்புசா:— கேக்கணுமாடி யதுக்கு? தெருவிலெ எறஞ்சு கடக்கா பணம்? அல்லது மாத்திலெ காச்சுத் தொங்காதோ?—நான் ஒன்னெக் கல்யாணம் பண்ரபோது இந்த ஆயிரத்திலே ஓரஞ்சு ரூவாயாவது தந்தாளா நேக்கு? நானுன்னா எண்ணிக்குடுக்க வேண்டி வந்துது ஒங்க மாமனாருக்கு நூறு ரூபாய்.—

அன்ன:— ஆமாம், சொல்லமாட்டேளா நீங்களும்!—என்னெக் கல்யாணம் பண்ரபோது தலைக்கி மேலெயல்லவா சிந்தி வழிஞ்சுது சொத்து ஒங்குளுக்கு? வாய் வீசறு, வாய்! வீடில்லை, வாசலில்லை. சட்டியில்லைச் சம்பளமில்லை, நெலமில்லைப் பொர யிடமில்லை, தாப்



பப்பில்லு தவுர வேறை யென்ன யிருந்துது ஒங்குளுக்கு?—பாளைத்தாறுகூட நான் வந்ததுக்கப்றந்தான்!—போருமே!—(முகத்தைச் சுளித்து) சக்காமும் சவாணையுந்தாங் கொண்டு வரலை நான். கொழந்தை சங்குவை மாட்டுங் கொட்டில்லெ வெக்கோலை விரிச்சுப் போட்டு அழவிட்டுட்டு சாணுந் தட்டி, பால் வித்து, தைர் வித்து, அப்பளாமிட்டு, தண்ணீம் மோந்து இடுப்பு முறிய வேலெ சேது சொத்துச் சேத்துத் தரலியா ஒங்குளுக்கு நான்? வேலெதாஞ் சேதேனே, நல்ல பொடவை ரவிக்கையேத் தந்தாருங் கோன்னுட்டு எப்பவேங் கேட்டேனா?

சுப்புசா:— இப்பொ நான் ஒன்னைக் குத்தஞ் சொல்லலியேடி, நீ இப்படிக் கோச்சுக்கறதுக்கு. சும்மா வேடிக்கைக்கிச் சொன்னா கோபப்படறையே நீயும்.—இந்தா இப்பிடிவா!—(அவள் கையைப் பிடிக்கிறார்.)

அன்ன:— விடுங்கோ கையை! ஆரேம் பாத்தா சிரிக்கப் போறா.— இப்பொ மூர்த்தத்துக் கழைக்க வந்திடுவாளே, இப்படிப் பேசிக்குண்டு நின்னாக்கா? பருப்புத் தேங்காய் வெளையாடை சாமான் எல்லாத்தியும் எடுத்து வெக்கட்டும் வெளிலே.—

ரங்க:— எல்லாத்தியும் அப்பவே எடுத்து வெச்சாச்சு. அந்த அறையிலிருக்கெல்லாம்.

சுப்புசா:— அடி பொண்ணே, நெசமாச் சொல்றேம் பாத்துக்கொ நான்—ஒன்னெப்போல ஒருத்தடீ பதிவிருதை இந்த அம்பத்தாறு தேசத்திலேங்கூடக் கெடைக்காதுங்கறது நிச்சயந் தான். ஆனா ரூபாயும் பணமுமாவது லேசிலெ கெடைக்காதா சவம்? (பணப் பையைக் கையிலெடுத்துப் பார்த்துக்கொண்டு) இந்தாத்துக்குள்ளே இம்புட்டு ரூபாயை ஒன்னிச்சு நாங் கண்ணாலெ காணுவேன் இன்னு எப்பொவாவது நெனச்சிருந்தேனா? இதை வெச்சு என்ன வெல்லாஞ் சேயலா மின்னமேல்! பக்கத்தாத்து சேஷி காசிக்கிப் போறால்லவோ அவாத்தெ வாங்கி நம்பாத்தொட சேத்துடலாம். சங்கரன், ரங்கநாதன் ரண்டு பேருக்கும் ஆளுக்கொராம் வேண்டாமோ?—ஆனா சங்கரா அந்தப் பொண்ணுக்கு நகை யென்னமேன் வேணு மின்னு அது அழுதுதோ?

சங்கரன்:— இல்லை. அவள் அதை விரும்பவே யில்லை.

அன்ன:— என்னத்துக்கு வேணு மந்தச் சொமை? தன்னழகில்லாட்டான்னா பொன்னழகு வேணும்.—ராசாப்போலெ ஆம்படையாங் கடச்சதே போராதோ?—செறுப்பம்—படிச்சவன்—முப்பது ரூபாய் சம்பளம் வாங்கறாப்—தங்கத் கம்பின்னு சொல் இ.... அதுபோல கொணம்—காதறகள் கூதறகளைப் போலெ

வெத்தலைக்கும் பொடிக்கும், பொகேலைக்கும், சுருட்டுக்கும், தேவிடியாளுக்குமாக் குடுத்துச் செலவழிக்கறவனா நீ?—ஜன்மாந் தரத்திலே என்ன புண்ணியஞ் சேதிருந்தாளோ அவள் னோக்கு வாக்கப்பட?

சுப்புசா:— சங்கரனுக்கும் பணத்திலே அம்புட்டொன்னும் கருத்துப் போராதுதான்! அவுனும் அந்தப் பொண்ணோட அழகிலே மயங்கித்தானிருக்கான் கொஞ்சம்.

சங்கரன்:— ஆம், அழகான மனைவி வேண்டுமென்று யார்தான் விரும்ப மாட்டார்களண்ணா? செல்வம் சின்னாட்களுக்குள் செலவழிந்துபோம், ஆனால் மனைவி உயிருள்ளளவு மிருப்பாளன்றோ?

சுப்புசா:— பாத்தியா, சொன்னேனே! அவம் மொகத்திலேயே தெரிஞ்சுடுத்தே அது! (சிரிக்கிறார்.)

(மறுமடியும் ஆரவாரமும் பாட்டும் கேட்கின்றது)

ரங்க:— அப்பா! இன்னமும் அந்தச் சத்தம் கேக்கறது. பந்து வெளையாட்டுப் பந்தையமோ என்னவோ?

சங்கரன்:— இப்பொழுது பத்து மணி நேரத்திலா பந்து விளையாட்டு? ஏதோ பஜனை கோஷ்டிபோ லிருக்கிறது.—ரங்கா, ஓடிச் சென்று யாதென்று பார்த்து வாயேன்.—

ரங்க:— (போகும் பொழுது) சின்னண்ணா! தங்கத்தோடப்பா அவாத்துக் கிளியையுந் தந்தனுப்பலியோ?

சங்கரன்:— இன்று மாலையில் நீதான்போ யெடுத்துக்கொண்டு வரவேண்டுமாமதை.—இப்படி நிற்காதேடா! சீக்கிரம் சென்று பார்த்து வா! (ரங்கன் போகிறான்.)

சுப்புசா:— இன்னமேல் ரங்கனுக்கும் கல்யாணத்துக்கு வழி தேட வேண்டியதுதான். ஆனா லேசா ஒன்னும் நல்ல எடங் கெடச்சுடாது. சங்கரனைப் போல ஒரு பரிக்ஷையாவது குடுத்துக் கச்சேரிலே சம்பளமாருக்கானா அவன்?

அன்ன:— இல்லே, இப்பிடி யிருக்கறபோது நெனச்சுக்கு வேன்—முழுப் பட்டினி கெடந்த நாளெல்லாந்தாம் போயாச்சே—பெரீவா சேத புண்ணியத்திலே அரெவயறுக் கஞ்சிக்காவது அன்ன மிட்டாரே ஆண்டவன்—பெரிய வக்கீல் தானுவய்யரும் சம்மந்தியா வந்தாச்சே—தங்கத்தோட மாமாவும் ஒரு பெரிய முனுஸீப்பாருக்காரே—நம்பாத்து ரெங்கனையும் ஏன் வக்கீலுக்குப் படிக்கச் சொல்லப்படாது?



சுப்புசா.— வரட்டுமடீ, வரட்டும்!—எப்பொப் பார்த்தாலும் அளப்புக்கு மேலே அளப்புத்தாம் போலிருக்கே ஒம் மனசுக்குள்ளே!—அவுனும் ஒரு பரீக்ஷை ஜயிக்கட்டும்—இப்பவே கோட்டை கெட்டிப்புடாதே!—

அன்ன:— கோட்டையா யிது? பெரிய வெள்ளைக்காரத் தொரைமார் பள்ளிக்கொடத்துக் கனுப்பனுமுன்னுப் புட்டுன்னா சொன்னேன்—அல்லசல் பிச்சக்காரச் சவங்களெப்போலே எட்டு ரூவாச்கும் பத்து ரூவாக்கும் சம்பளத்துக்கு விடப்படுமோ நம்பாத்து ரங்கனை? வக்கீலுன்னா மகிமை யில்லியோ? தேங்காக்குத் தேங்காய், சாகறிகளுக்குக் காகறிகள், புளிக்குப் புளி யெல்லாஞ் சும்மா வந்து குமிஞ்சிடுமே.—நல்ல யோகமிருந்தா திவன்தி உத்தி யோகங்கூடக் காத்துக் கடக்குமே வாசல்லே வந்து!

(வெளியில் மறுபடியும் ஆரவாரம் கேட்கின்றது.)

சங்கரன்:— அவர்கள் மறுபடியும் கோஷிக்கின்றனர். அந்த பஜனை கோஷ்டியார் (கதவருகிற் சென்று புருவத்திற் கைவைத்துப் பார்க்கிறான்.)

அன்ன:— என்ன தெரியறதுடா?

சங்கரன்:— யாரோ ஒரு வயதான சுமங்கலி வருவதை யன்றி வேறொன்றும் தெரியவில்லை.

அன்ன:— ஆரவள்? நம்பாத்துக்குத்தானா வரா? செத்துக்கு மிந்தி ரங்கன் பாத்துச் சொன்னவளோ என்னவோ?

சங்கரன்:— நமது சுற்றத்தார் யாருமல்ல வென்பது நிச்சயம். வெய்யிலுக்காக முந்தானையால் தலையை மூடிக்கொண் டிருக்கிறாள்.

அன்ன:— நம்பாத்தெ கல்லியாணமாச்சேன்னுப்புட்டு, ஆரோ வாதனைக்காறி அவ பங்கெ வாங்க வரா போலிருக்கு.

சுப்புசா:— எதுக்கும் நான் பணத்தை யெடுத்து உள்ளெ வெச்சுடறேன். வறவா போறவா பாக்கற எடத்திலே இப்பிடி வெளீலே செடக்கணுமா அது? (பணப் பையை எடுத்து பெட்டிக்குள் வைத்துப் பூட்டுகிறார்.)

சங்கரன்:— இதோ வாசலில் வந்துவிட்டாளவள்.—கல்யாண முகூர்த்தத்திற்குப் புறப்படும் சமயத்திலா இந்தச் சனியன் வர வேண்டும்? எனக்குப் பிடிக்கவில்லை.

அன்ன:— ஏழையனை யொன்னுஞ் சொல்லாதேயப்பா, சங்கரா, வந்துவிட்டுப் போட்டும் பாவம்!—கையிலே காசில்லாமக் கஷ்டப்படற ஏழை—ஒரு நேரச் சாப்பாடாவது சாப்புட்டுட்டுப் போட்டும்! (உத்தேசம் ஐம்பது வயதுள்ள ஓர் ஸ்திரீ உள்ளே பிரவேசிக்கிறாள், தன் முக்காட்டை விலக்க அவள் முகமும் பிரகாசிக்கின்றன; கண்களும் தென்படுகின்றன. அவள் தலை மயிர் அவிந்து தோள் மீது தொங்குகின்றன. அவள் கண்களைப் பார்த்ததும் சங்கரன் சற்று பவ்யமாக அகலே சென்று நிற்கிறான்.)

ஸ்திரீ:— ஈசன் உங்களை அநுக்ரகிக்கட்டும்!—அப்பா!—என்ன குளுமையாயும் சுகமாயு மிருக்கின்றது இங்கு!

சுப்புசா:— எல்லாம் அந்த பெரியவா ளனுக்கிரந்தானம்மா.

அன்ன:— அதோ அந்த நாக்காலி மேலே ஒக்காந்துக்குண்டு இந்த விசிறியாலே விசிக்கிங்கோம்மா. (விசிறியைக் கொடுக்கிறாள்)

ஸ்திரீ:— (உட்கார்ந்து) என்ன வெயில் வெளியில்!

சுப்புசா:— ரொம்ப தூரம் நடந்து வரேளோ, அம்மா?

ஸ்திரீ:— ஆம், நான் வெகு தூரம்—அளவற்ற தூரம்—நடந்து வருகிறேன். என்னைப்போல் நடந்திருக்கிறவர்கள் அதிகம் பேர்களில்லை. ஆனால் என்னை ஆதரியாமல் உபேக்ஷை செய்கிறவர்கள் பலரிருக்கின்றனர். அந்த அடுத்த தெருவில் ஒருவனுக்குத் திடகாத்திரமுள்ள இரண்டு பிள்ளைகளிருக்கின்றனர். எனக்குத் துணை புரிந்திடுவரென் றெண்ணி அங்கு சென்றேன். ஆனால் தங்கள் நெல் குவியலைக் கவனித்தார்களே யன்றி அவர்கள் என்னைக் கவனிக்கவே யில்லை.

சுப்புசா:— ஆருக்கானாலும் இருக்கிறதொன்று இல்லாமல் போனா ரொம்பக் கஷ்டந்தான்.

ஸ்திரீ:— உங்களைப் பற்றியவரையிலும் அது உண்மையே. ஆனால் யான் இவ்விதம் பன்னூறாகத் தேச சஞ்சாரம் செய்து பழகிவிட்டேன்.

அன்ன:— இப்புட்டு நாளா அலஞ்சு திரிஞ்சு வரேளே, எப்பிடி கால் வலிக்காதிருக்கோ?

ஸ்திரீ:— சில சமயங்களில் என் கால்கள் தளர்ந்து கைகளும் அயர்ந்து போவதுண்டு. ஆனால் என்னிதயம் மாத்திரம் ஒரு பொழுதுமே அயர்ந்து நிம்மதியானது கிடையாது. என் மௌனத்தைப் பார்த்து ஜனங்கள் என்னை வயோதிகை யென்றும் ஊக்கமற்றவளென்றும் சாந்தை என்றும் எண்ணுகிறார்கள். ஆகையால்



என் மனம் சஞ்சலமடைந்து நட்பினர்களிடம் துயரத்தை முறையிடும் பொழுதுங்கூட என்னைக் கவனிக்கிறார்களில்லை.

அன்ன:— ஒங்களெ ஆரிப்பிடிச் சுத்தித் திரியப்பிடிச் சேதுட்டாளோ?

ஸ்திரீ:— என் வீட்டிற்குள்ளேறிப் புகுந்த அளவிற்கு மிஞ்சிய அந்நியர்கள்தான்.—

அன்ன:— பாவம்! மாலெக்ஷ்மி யாட்டமா இருக்கற ஒங்களெப் பாத்தா என்னெப்போலெ ரொம்பக் கஷ்டப்பட்டவளாட்டமா இருக்கு நேக்கு.

ஸ்திரீ:— ஆம், மிகுந்த கஷ்டப்படத்தான் செய்கிறேன்.

அன்ன:— இப்பிடிக் கஷ்டப்படுத்தற காரியமென்னவோ?

ஸ்திரீ:— என்னிடமிருந் தபகரிக்கப்பட்ட என் பூமிகள் விஷயந்தான்.

சுப்புசா:— என்ன? ரொம்ப பூமியெ அபகரிச்சுண்டுட்டாளோ ஒங்கள்ட்டிருந்து?

ஸ்திரீ:— நீர்வளம் நிலவளம் பொருந்திய என் ஐம்பத்தாறு பச்சை நிலங்களையும்.

சுப்புசா:— ஐயோ! அம்புட்டு நிலத்தையுமா? (தன் மனைவியிடம்) பாற தீவரம் பக்கத்திலெ ஒரு பொண்ணைப் பொறந்தவளுடைய வஸ்துக்களை யெல்லாம் ஏமாத்திப் பிடுங்கிக்குண்டு அலைய விட்டுட்டா சொன்னேளே, அவதானோ இவள்?

அன்ன:— ச்சீ! அவளல்ல இவள். நேக்குத் தெரியுமே யவளை. வாதானத்துக்கு வருவளே நம்பாத்துக்கு நித்தம். கறப்பா பொத்தை யாண்ணா இருப்பளவள்—இது அவளல்ல.

(மறுபடியும் தூரத்தில் ஆகோஷம் கேட்கின்றது.)

"நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!

அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!"

சுப்புசா:— (ஸ்திரீயினிடம்) கீழத் தெரு வழியாத்தானே வந்தேள் நீங்கள்? அங்கை யென்ன சத்தம் "ஓ" இன்னு மழுந்தரமா ருக்கு? பாட்டுங் கூத்துங் கேக்கறதே.—

ஸ்திரீ:- ஆம். என் நண்பர்கள் என்னைக் காண வருகிறார்கள். அவர்கள் செய்யும் பஜனையும் ஆவேச ஒலியு மாகுமது.

[மறுபடியும் பாட்டுக் கேட்கின்றது]

"மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!"

சுப்புசா:— அவாள் எதுக்காகப் பாடறாள் அப்பிடி?

ஸ்திரீ:— எதற்காக?—

(ஆனந்த பைரவி—ஆதி)

ப. பாஞ்சாலப் படுகொலை தனை நினைந்தால்
பதைக்கின்றதே மனம் துடிக்கின்றதே — (பாஞ்சா)

சங்கரன்:— (மனமிளகி ஆச்சரியத்துடன் அவளருகிற் சென்று) எதைப்பற்றிப் பாடுகிறீர்களம்மணீ?

ஸ்திரீ:— (துக்கத்துடன்) என் ஐம்பத்தாறு நிலங்களில் வட மேற்கு எல்லைப்புற நிலத்தில் வைத்து அடிபட்டு மடிந்த வீர சிகாமணிகளை நினைத்துத்தான் பாடுகிறேன்.

(கண்ணீருடன்)

அஞ்சா நெஞ்சம் படைத்த பஞ்சமா பாதகரும்
அஞ்சும்படி நெஞ்சில் ஈரமில்லாப்பாவி யவன் செய்த—(பாஞ்சா)

சங்கரன்:— யாது குற்றம் செய்தனரவர்கள்?

ஸ்திரீ:— என்மீதவர் கொண்டிருந்த அன்பே குற்றமாம். இதே குற்றத்திற்காக இன்னு மனேகருயிர் துறந்திருக்கின்றனர்.

சுப்புசா:— (மெல்லிய குரலில் மனைவியிடம்) அவள் பட்ட கஷ்ட மெல்லாஞ் சேர்ந்து அவள் புத்தியெக்கூடக் கலைச்சுடுத்துப்போ யிருக்கே.—இல்லாட்டா இப்பிடி அர்த்தமில்லாமல் பேசுவளோ?

சங்கரன்:— அம்மணீ? அவர்களிறந்து அதிக காலமாயிற்றோ?

ஸ்திரீ:— ஆகவில்லை. அதிக நாளாகவில்லை. ஆனாலவர்களைப் போல் வேறு பல பேர்கள் பன்னூட்களுக்கு முன்தொட்டே என் பொருட்டுயிர் துறந்திருக்கின்றனர்.

சங்கரன்:— அவர்களெல்லாம் உமது பந்துக்களோ?



ஸ்திரீ:— அப்பா, இப்படி அருகில் வா. உனக்கவர் வரலாற்றைத் தெரிவிக்கின்றேன். (அவனை ஒரு முறை ஆபாதகேசம் பார்வையிட்டு) மேற்குத் திசையிலிருந்து ஒரு வீரர் திலகமும், வடக்குத் திசையினின்றொரு சிம்ஹ ராஜனும், கிழக்குத் திசையினின்றும் யதீந்திரனென்றொரு கர்மயோக தாசனும், தெற்குத் திசையினின்றும் ஓர் கவி குஞ்சர பாரதியும் என்பொருட்டுயிர் நீத்தவர்களே.—ஆயிரக் கணக்கான பேர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு முதலே என்பொருட்டுயிர் துறந்திருக்கின்றனர். இனிமேலும்—நாளைக்கும்—இன்னும் அனேகர் மடியப்போகின்றனர்.

சங்கரன்.— நாளைக்கா?—(எழுந்து) எங்கு வைத்து, அம்மணீ, எங்கு வைத்து?

ஸ்திரீ:— நீ உட்கார், அப்பா, உட்கார், சொல்லுகிறேன்.

அன்ன:— அடேயப்பா, அவ சொல்லரதெல்லாஞ் சரியாப்படறதோடா நோக்கு? இந்த லோகத்துப் பொண்ணாப் பொறந்தவாளாட்டமா தோணலியேப்பா நேக்கு இவளைப் பாத்தா?

சுப்புசா:— அவள் பசியும் பட்ட கஷ்டமுங் கொண்டு அவ பேசறது அவளுக்கே புரியாதொன்னு சந்தேகமாயிருக்கு நேக்கு.

அன்ன:— பாவம்! எரக்கமாருக்கு நேக்கு! என்னமோங் குடுங்கோ இருந்தா.

சுப்புசா:— உள்ளேயிருந்து கொஞ்சம் இட்லியும் காப்பியும் எடுத்துக் குடேண்டீ! பாத்துக்குண்டு நிக்கரையே.—

அன்ன:— அது போருமா? வழிச் செலவுக்குக்கூட ஏதேங் குடுங்கோ. ரண்டு சக்கரமோ இல்லாட்ட ஒத்தப் பணமோவானாலும் எடுத்து ஒரு துட்டிலெ வெத்திலெ பாக்கேன் ஒரு மஞ்ச முட்டானேன் வெச்சுக் குடுங்கோ. இப்பொத்தானே தர்மஞ் சேயமுடியும் நம்மாலெ—அப்றமானா எப்பிடி யெப்பிடியோ?

சுப்புசா:— அடியே, நம்பளுட்டெ அளவுக்கு மிஞ்சின பணமிருந்துதானக் குடுக்க மடிப்பேனேடி? இப்பவே இப்பிடிக் குடுத்துச் செலவாக்கிக்குண்டிருந்தா இந்த ஆயிரமல்ல—பதினாயிரம் ரூபாயானாலும்—அர நொடிலெ போயுடுமே!—

அன்ன:— நன்னாத்தான் கசடினையள்! வெக்கமில்லையே ஒங்களுக்கும்! ஒறு பணத்தை யெடுத்துக் குடுத்து வாழ்த்தச் சொல்லுங்கோன்னா, எச்சுத்தனம் பிடிக்கறேளே? மூர்த்தத்துக்குப் பறப்படறபோது மாலக்ஷ்மியாட்டமா வாசப்படி யேறி வந்திருக்கா.—ஏழையளுக்கில்லாத சொத்து எத்தற நாளைக்கி?—குடுங்கோ எடுத்து! தர்மங் [illegible]ம் போரும் நமக்கு!

**சுப்பசா:—** (அரை மனதுடன் பெட்டியைத் திறந்து பணத்தை எடுக்கிறார்.)

**அன்ன:—** கொஞ்சங் காப்பி பலகார மென்னமேஞ் சேதுட்டுப் பேசுங்கோம்மா!

**ஸ்திரீ:—** நான் உணவையோ பானீயத்தையோ விரும்பவில்லை.

**சுப்புசா:—** ஆனா இதையாவது வாங்கிப்பேளோ? (பணத்தை நீட்டுகிறார்.)

**ஸ்திரீ:—** இதுவும் வேண்டா மெனக்கு. பொன் வெள்ளியிலும் விருப்பமில்லை.

**சுப்புசா:—** அப்பிடியானா என்னதான் வேணுமிங்கறையள் நீங்கள்?

**ஸ்திரீ:—** எனக்குதவிட விரும்புவோன் தன்னையே தத்தம் செய்ய வேண்டும்—அவனுடைய உடல் பொருள் ஆவி யனைத்தையும் அளித்திட வேண்டுமெனக்கு.—

**சங்கரன்:—** அம்மணீ: தமக்குத் துணை புரிந்திடத் தமது நாயகரில்லையோ?

**ஸ்திரீ:—** அப்பா, என்னை அடைந்திட விரும்பி முன் வந்த காதலர்களில் ஒருவருடனேனும் யான் இன்புற்று வாழ்ந்திடக்கொடுத்து வைக்கவே யில்லை. (கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்றாள் )

**சங்கரன்:—** ஆயின் இந் நாள் வரையிலும் ஓர் கன்னிகையாகவா சஞ்சரிக்கின்றீர்கள்?

**ஸ்திரீ:—** ஆம். என் சிந்தைகளும் ஆசைகளுமே எனக்குத் துணை.

**சங்கரன்:—** அம்மணீ, இவ் வயதிலும் தங்களுக்காசையுமுண்டோ?

**ஸ்திரீ:—** ஆம், உண்டு. என்னழகிய பூமிகளை மீண்டும் அடைந்திடும் ஆசை—என் வீட்டினின்றும் அக்கிரமிகளாகிய அன்னியர்களை அகற்றிடும் ஆசை.

**சங்கரன்:—** அவைகளை எவ்வாறடையப் போகின்றீர்களோ?

**ஸ்திரீ.—** எனக்குத் துணை புரிந்திட இன்னும் அநேக நட்பினர் தோன்றுவர். இப்பொழுதுமவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டுதானிருக்கின்றனர். நான் அதைப்பற்றி அச்சப்படவில்லை. இற்றைக்கவர்கள் தோல்வியுற்றாலும் நாளை வெற்றி யடைவர் என்பது திண்ணம்!—(வெளியில் ஆகோஷம் கேட்கின்றது-உடனே எழுந்து) இனி



நான் வருகிறேன். என்து நண்பர்களைச் சேரப்போக வேண்டுமெனக்கு. அதோ என்னை யழைப்போரைச் சற்காரம் செய்யச் செல்ல வேண்டும். நானே சென்று அவர்களை எதிர்கொண் டழைக்கவும் வேண்டும்.

**சங்கரன்:—** அம்மணீ, நானு மிதோ உம்முடன் வருகின்றேன். (எழுந்திருக்கிறான்.)

**அன்ன:—** இதேதுடாப்பா, சங்கரா, நீ யெங்க போப்போறையடா யிப்போ? அவா மூர்த்தத்துக்கழைக்க வாலாச்சு—மாடிமேலெயெல்லாரும் காத்துக்குண்டிருக்கா—இவ கூடப் பறப்படறேங்கறாய் நீ?—அம்மா, எம் புள்ளைக்கு இன்னிக்கிக் கல்யாணமாக்கு மின்னிட்டுத் தெரியாதோ ஒங்குளுக்கு?

**ஸ்திரீ:—** அப்பா, கல்யாணத்திற்குச் செல்பவனுதவி யெனக்காவசியமில்லை.

**சுப்புசா:—** (மனைவியிடம்) இதாரிவளொருத்தீ—தொந்தரவு பண்ணிச்குண்டிருக்கா இஞ்செ வந்து? ஊரும் பேருந் தெரியாதா?

**அன்ன:—** அம்மா, நீங்களாரு? ஒங்க பேரென்ன?

**ஸ்திரீ:—** சிலர் என்னை மாதா என்பார்கள்—சிலர் குமரீ என்பார்கள்—இன்னும் சிலர் கன்யாதேவி யென்பார்கள்—ஆனால் உண்மையில் யான் டாரதி ஆவேன்.

**அன்ன:—** பாறதியா ஒங்க பேர்?

**சுப்புசா:—** இல்லைபிடி! பாரதி—அந்தப் பாரதீங்கற பேரையும் நானெங்கையோ கேட்டிருக்கேனே ஒருதரம். (யோசனை செய்து பார்த்து)—அது எப்போ இன்னுட்டுத் தெரியலியே!—ஆ! இல்லே! இப்பொ ஞாபகம் வந்துடுத்து!—அந்தப் பேரை ஒரு பாட்டுலெ கேட்டிருக்கேன் நான்—ஏதோ ஒரு பாட்டுலெ ஆரோ பாடி!—

**கன்யாம்:—** இருக்கலாம். என்மீதில் ஆயிரக்கணக்கான பாடல்களுண்டு.

**சங்கரன்:—** அம்மணீ, தங்களுக்காக என்னால் யாது செய்யக் கூடுமெனத் தெரிவிப்பீர்களா?

**சுப்புசா:—** ஒன்னும் தெரிவிக்க வேண்டாம்! இப்பிடி வாடா யிஞ்சே!

**சங்கரன்:—** பேசாதேயுமண்ணா! அவர் பேசுவதைக் கவனியும்!

**கன்யாம்:—** எனக்குதவுவோர் கடுமையான விருதங்களையும் தவங்களையும் அனுஷ்டிக்க வேண்டுமப்பா. கொடுந் துயரங்களையு மனுபவிக்கச் சித்தமாயிருக்க வேண்டும். இற்றைக்கிருக்கும் செந்தாமரைக் கன்னங்கள் நாளை அல்லி மலரைப்போல் வெளிறிப் போய்விடும்.—இன்று மலைகளிலும் காடுகளிலும் சுயேச்சையாகத் திரிகின்றவர் நாளைத் தேசாந்திர வீதிகளிற் றிரிந்து பிச்சை யெடுக்க நேரிடும்.—பற்பல நல்ல உபாயங்கள் அழிந்துபோம்.—செல்வம் திரட்டிய பலர் அதனை யனுபவிக்க மாட்டார்கள்.—தன் குழந்தைகளுக்கு நாமகரணம் செய்யக்கூடப் பிதாக்கள் உயிருடனிரார்.—இவ்விதம் சிவந்த கன்னமுடையவர்களெல்லாம் என் பொருட்டு வெளிறிய கன்னத்தவராய் மாறிடினும் அவர்கள் யாவரும் கன்னி பாரதிக்காகவே மடிகின்றோமென்ற பூரண சந்தோஷத்துடன் தான் பிராணனை யகற்றிடுவர்.—நான் வருகிறேன்!—(போகிறாள்.)

(வெளியே யிருந்து பாட்டுக் கேட்கின்றது)

“நொந்தே போயினும் வெந்தே மாயினும்
நந்தே சத்தர் உவந்தே சொல்வது வந்தே—மாதரம்!”

**சங்கரன்:—** (அவள் போன விடத்தையே நோக்கி அசைவற்று நிற்கிறான்.)

**அன்ன:—** இதேதுடீ அநியாயம்!—பாரேன் அவளை!—அவம் முழிக்கற முழியும் பார்க்கற பார்வையும்—பேயோ கீயோ பிடிச்ச வனாட்டமான்னா நிக்கறா னிந்தப்புள்ளை!—ஏதேம்மாயமிட்டுமயக்கிப் புட்டாளோ அந்தச் சண்டாளி வந்து?—சங்கரா! அப்பா, சங்கரா!—என்னெப் பாருடாப்பா!—சங்கரா! அவா அழைக்கப் பறப்பட்டாச்சுடா மூர்த்தத்துக்கு—நீயிப்பிடி முழிச்சுண்டிருக்கியே! வாசல்லெ வாத்திய கோஷங் கேக்கறதுடா! வந்தாச்சவா மூர்த்தத்துக் கழைக்க—இப்பிடி வந்து இந்தப் பவன் மாலையெப் போட்டுக்கோ கழுத்திலெ! (அவனருகில் சென்று அவன் கையைப் பிடித்திழுக்கிறாள்.)

**சங்கரன்:—** எந்தக் கல்யாணத்தைப் பற்றிப் பேசுகிறாய் அம்மா? ஏது ஆகோஷம்?

**அன்ன:—** இதேதுடீ அதிசியம்! ஏது இப்பிடிக் கேக்கறாயுடாப்பா?—ஒம் புத்தியேம் மக்கடிச்சுப் புட்டாளா அந்த மாயக்காறி?—ஒங் கல்யாணந்தாண்டா—அதுக் கழைக்கவறா தாலி கெட்ட!

**சங்கரன்:—** ஓஹோ! சரிதான்!—(புறப்படுகிறான்.)

(இதற்குள் வாசலில் வாத்திய கோஷம் வந்து நிற்கிறது. திடீரென்று ஓர் ஜய கோஷமும், ஆரவாரமும், பஜனைக் கோஷ்டியும் கேட்கின்றது.)



**சங்கரன்:—** திடுக்கிட்டவனைப் போல் திரும்பி வெளியே பார்க்கிறான்.)

**சுப்புசா:—** சரிதான் இன்னமும் வந்துடுத்தா அந்த நாசமாப் போற பஜனை யிஞ்சேன்?

(இதற்குள் தாம்பூலம், பன்னீர், சந்தனம், பூ மாலைகள் முதலியவைகளைக் கொண்டு பெண் வீட்டாரும் ஒற்றக் கட்டிலை எடுத்துக் கொண்டு புரோகிதர்களும் பிரவேசிக்கின்றனர். அனேக நண்பர்களுடனும் பந்துக்களுடனும் ரங்கநாதனும் மற்றோர் புறமிருந்து வருகிறான்.)

**புரோகிதர்:—** ஊம்—ஊம்!—நேரமாயுட்டுது—தேசாலமாயுட்டுது! லக்கம் வந்துட்டுது!—வாருங்கோ! பொறப்படுங்கோ!—அப்பா, சங்கரா! இப்பிடி வந்து ஒக்காந்துக்கோ, வா.—அந்த ஒத்தக் கட்டில் மேலெ!—தீக்ஷதரே! ச்ரௌதியளே! வாத்தியாரே!—நாராயணா! கிருஷ்ணா!—வெங்கிடி! எல்லாரும் கிட்ட வாருங்கோ தூக்கறதுக்கு!

**ரங்கன்:—** (ஓடிச் சென்று சங்கரனிடம்) அண்ணா, ஒரு பெரிய கூட்டம் வந்திருக்கு வாசல்லெ. தேசியத் தொண்டர் படை சேக்கறாளாம்.—எல்லாரும் போயந்தப் படேலெ சேரப்போறாளாம்!—

**அன்ன:—** போடா! படையுங் கிடையும்!—தாலி கெட்டப் போறவன் கிட்டெதான் ஊர்ப் பேச்சுப் பேசுவாளோ?—சங்கரனொரு படையிலேஞ் சேரமாட்டான்!—

**சங்கரன்:—** (பிரமை கொண்டவனைப் போல் நிற்கின்றான்).

**அன்ன:—** (தன் புருஷனிடம்) நீங்கதாஞ் சொல்லுங்கோ அவனுட்டே! சும்மா நிக்கறேளே யிப்பிடி—அவன் கண்ணும் முழியும் நன்னாருக்கலியே நேக்கு.

**சுப்புசா:—** சங்கரா!—அப்பா, சங்கரா!—சங்கரா!—பலமில்லையுடீ! நாம்பள் சொல்ரதை ஒன்னையுமே காது குடுத்துக் கேக்கலியே அவன்!—

**அன்ன:—** (அழுதுகொண்டு) என்ன மாயமுடீ யிது?—அப்பா, தோழப்புள்ளையளா! நீங்களாவது அவங்கிட்டெப் பேசிப் பாருங்கோ - சத்துக்கு மிந்தி ஏதோ ஒரு மாயக்காறப் பேய் வந்து மதியெ மயக்கிட்டுப் போயுடுத்துடா! குட்டிச் செவர் போல நாங்களும் பக்கத்திலெ நின்னோமுடா!

ஒரு தோழன்:— Sankara!—what is it that you are contemplating? Is this the time for joining the National Volunteers? You can do so even after the marriage.—Come, be seated here! (அவன் கையை இழுத்து ஒற்றங் கட்டிலின் பக்கத்திற் கழைத்துக்கொண்டு வருகின்றனர்.)

புரோகிதர்:— (புஷ்ப ஹாரத்தைக் கையிலெடுத்து) இந்தா, இந்த ஹாரத்தைக் கழுத்திலே போட்டுக்கோ!—சரி—எல்லாரும் கிட்டக்கே வாருங்கோ!—ஓம்—ச்ரௌதியளே! பஞ்சாதியை ஆரம்பியுங்கோ!—(வேத பாராயணம் செய்ய ஆரம்பிக்கிறார்.)—அந்த மேளகாரனையும் சேவிக்கச் சொல்லலாமே யின்னமே!—

(இது சமயம் திடீரென்று வெளியே யிருந்து கன்யாம்பாளின் பாட்டுக் கேட்கின்றது.)

"எப்பதம் வாய்ந்திடு மேனும்—நம்முள்
யாவர்க் கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்—

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்— (வந்)

சங்கரன்:— நில்லுங்கள் சற்று!—(என்று எழுந்து அந்தக் கீதத்தைக் கவனித்துக் கேட்கிறான்.—புரோகிதர்களும் மந்திரத்தை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்து விழிக்கிறார்கள்—அப் பாட்டு நின்றதும் சங்கரன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே செல்கின்றான்.)

தோழர்கள்:— What!—Sankara!—where—where are you going?—(அவனைப் பின் தொடர்கிறார்கள்.)

சுப்புசா:— அடே ரங்கா! நீ யிஞ்செ வறபோது ஒரு வயசான சுமங்கிலி போறதெப் பாத்தா யில்லியோடா?

ரங்கன்:— இல்லியே அப்பா! ஒரு செருப்பக்காரியையுன்னு பாத்தேன். பெரிய மஹாராணியாட்டமா நடந்து போறாளே அவள்!—

அன்ன:— அப்பா, சங்கரா!—(மூர்ச்சையாகிறாள். சுப்பு சாஸ்திரிகள் தாங்கிக் கொள்ளுகிறார்.)

(நாடகம் முற்றிற்று.)

---



# பாண்டித்துரைத் தேவர்.

## ஸ்ரீமாந் நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்.

உலகில் ஆதிதொட்டு அந்தம்வரை உயர்திணை என்று சிறப்பித்துக் கூறப்படும் மக்கட் பகுதியில் பிறந்திறந் துழலும் ஆன்மாக்கள், வரிசை வரிசையாகப் பிறப்பதும் பிறந்து தன்னலத்தையே நன்னலமாகக் கருதி இரவு பகலாக உழைப்பதும் உழைத்து என்னலத்திலும் முன்னுற முடியாமல் இறுதியில் மாக்கள் போன்று குவியல் குவியலாக மடிந்து மண்ணுவதுமே சாதாரணமா யிருக்கிறது. இதனைக் கைதேர்ந்த சித்திரக்காரனொருவன் ஓர் அழகிய பெரிய உருவினைக் கையக மொத்த ஒரு சிறிய திரைச் சீலையில் அடக்கி யாவரும் வியப்புறச் சித்தரித்துக் காட்டுவதே போன்று "முடி சார்ந்த மன்னரும் மற்று முள்ளோரு முடிவிலொரு பிடி சாம்பலாய் வெந்து மண்ணுவதுங் கண்டு" என்று இரண்டே வரிக்குள் அடக்கிக் கூறி விளக்கிக் காட்டிய ஒரு பெரியார் வாக்கிலிருந்தும் கண்கூடான அனுபவத்தி லிருந்தும் உணரலாம். இத்தகைய பிறப்பென்னும் சுழல் காற்றில் ஆன்மாக்கள் இலவம் பஞ்சே என்னப் படும் பாட்டினிற் கிடையில், இடை யிடையே சிப்பியில் ஆணி முத்து வாய்த்தாங்கு சிற்சில பெரியார்கள் தோன்றித் தன்னலத்தை வென்னலமா வெறுத்தும் பிற நலத்தையே அற நலமாகக் குறித்தும் பொதுவாக எல்லா மக்களுக்கும் நன்மையையே செயபவேண்டுமெனக் கருதி இடையறா ஊக்கத்துடன் முன்னின்று முயன்று அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு நல்லனவற்றை யெல்லாம் தேடிப் புரிந்து 'தேச ஊழியர்கள்; பொதுநல ஸ்தாபகர்கள்; மன்னுயிரைத் தன்னுயிரென ஆதரிக்கும் மஹான்கள்' ஆகி தமது பொய்யுடம்பு பொன்றினும் புகழுடம்பு பொன்றாது நிலை

198529

நாட்டி இம்மை மறுமை இரண்டிலும் என்றென்றும் நின்று நிலவுகின்றனர். இத்தகைய பெரியார்களில்—காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களும் ஒருவரே யாவர்.

இவர் இராமநாதபுரம் சமஸ்தான கௌரவ சேதுபதிகளின் பரம்பரையைச் சார்ந்த பிரபல ஜமீன்தாரும் தனித் தமிழ்ப் புலவருமாகிய ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்கள் மூன்றாவது புதல்வராகக் கி. பி. 1864-ம் வருஷம் எப்ரல் மீ 13 உயில் பிறந்தார். இவர் தந்தையார் தெள்ளிய தமிழில் உள்ளன்பு மிக்காராதலின் தமது பிள்ளையாராகிய இவருக்கு இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்கு முன் மதுரையில் கடைச் சங்கத்தைப் பரிபாலித்துக் கவியரங்கேறிப் புகழ் பூண்டு விளங்கிய உக்கிர பாண்டியன் என்னும் பாண்டிய மன்னனது திரு நாமத்தையே இட்டு வழங்கினர். பின்னர் இவர் செல்வப் பெயராக இவர்க்குப் பாண்டித்துரை என்ற திருநாமம் ஏற்பட்டது. இவர் தந்தையார் நியமித்தபடி சேது சமஸ்தான வித்வானாக அப்போது இருந்துவந்த ஸ்ரீ முத்துச்சாமி ஐயரவர்களிடம் இவர் கல்வி பயின்று வந்தார். "விளையும் பயிர் முளையில் தெரியும்" என்றவாறு இவரது குழந்தைப் பருவத்திலேயே இவர் தாய் மொழியாகிய நந்தமிழ் மொழி கற்பதில் மிக்க ஆர்வமுடையவராகத் தோன்றினார். சற்றேறக்குறைய இவர் தமது பதினாறாம் வயதிற்குள் சிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு முதலிய சங்க நூல்களிலும், கம்ப ராமாயணம், கந்த புராணம், பெரிய புராணம், வில்லி பாரதம், திருவிளையாடற் புராணம் முதலிய இதிகாச புராண நூல்களிலும் நாலடி, திருக்குறள், பழமொழி முதலிய நீதி நூல்களிலும் தொல்காப்பியம், வீரசோழியம், யாப்பருங்கலக் காரிகை முதலிய இலக்கண நூல்களிலும் நல்ல பாண்டித்யமுற்று விளங்கினார். இவர் பயின்று வரும்போது சிறுப்ப வயதிலேயே இலக்கணத்தில் மிக நுட்ப உணர்ச்சி பெற்றவராக இருந்து வந்தனர்.

இவர் பதினாறாட்டைப் பிராயத்திலேயே கல்வி கேள்விகளிற் சிறந்த சேதுபதி சமஸ்தான வித்துவான் ஸ்ரீ முத்துச்



சாமி ஐயரவர்களின் அரும்பெறன் மாணாக்கராகவும் அரிதின் முயன்று கற்ற நூற்பொருள்களை எல்லாம் எவரும் எளிதில் உணரத்தக்கவாறு எடுத்துரைக்கும் சொல்வன்மை மிக்காராகவும் இல்லை என்னும் சொல்லைக் கேளாமுன்னரே குறிப்பறிந்து உள்ளது மறாதுதவும் பொருள் வன்மை மிக்காராகவும் செய்யுளியற்றல் உரையியற்றல் முதலியவற்றில் சிறந்தாராகவும் கம்ப ராமாயண முதலிய காவியங்களில் கவி நயம் கண்டு கேட்பார் மனங்களித்துச் 'சித்திரப் பாவையினத்தக வடங்கிச் செவி வாயாக நெஞ்சு களனாகக்' கேட்டவை கொள்ளுமாறு பிரசங்கிக்கும் ஆற்றல் உடையவராகத் துலங்கினர். பொதுவாக வள்ளல்கள் என்று கூறப்படுபவர்கள் எழுவர்களே; அவர்கள் பொருட்கொடை ஒன்றில் மாத்திரம் சிறந்தவர்களா யிருந்தனரென்று சரித்திரத்தினால் அறிகின்றோம். இவரை 'அறியாமை நீங்க வருவார்க்கு அறிவையும் ஆரிடர் நீங்க வருவார்க்குப் பொருளையும் அள்ளிக் கொடுத்த வள்ளல்' என்றே கூறலாம். இவையுமன்றி இவர் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் துவதாத்துவைத தத்துவ ஆராய்ச்சி நூல்களிலும் மிக்க தேர்ச்சி பெற்றுக் கற்றவர்க்கேயன்றிக் கல்லாதவர்க்கும் களிப்பை உண்டாக்கவல்ல சொல்லாற்றல் உள்ளவராகவும் துலங்கினார்.

உலகந் தோன்றிய காலந்தொட்டு இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்புவரையும் அதாவது கடைச் சங்க காலத்து இறுதிவரையும் தொன்றுதொட்ட தமிழ் மக்களுடைய வழக்க ஒழுக்க நியமங்களும் தனித் தமிழ் மொழியிலேயே மலிந்து கிடந்த பல நூல்களும் அப்பொழுது நேர்ந்த சில மாறுதல்களினால் சிறிது சிறிதாகத தாழ் நிலை அடைந்து தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் முறையாக ஆதரிப்பில்லாமல் மூராணை நிலையில் வந்துவிட்ட தன்மையை இவர் உணர்ந்து முன்னரே போல் தமிழும் தமிழ் மக்களும் அவரது ஒழுக்க வழக்கமும் உயர்நிலை அடைய எந்த முறையில் நாம் தேச நன்மைக்குத் தொண்டாற்றுவது என்ற சிந்தனை அப்பொழுது இவர் மனதிற் புகுந்து கருக்கொள்ளத் தொடங்கிற்று. பின்னரது நாளேற நாளேற உருப்

பெற்று வளர்ந்து பலனளிக்கும் வண்ணமாய்ப் பரவத் தொடங்கிற்று. பொது நன்மைக்காகப் பாடுபட முன்வந்துள்ள பெரியோர்கள் அவர்கள் ஏழைகளாயிருந்தாலும் எவ்வித இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றுளெல்லாம் கிடந்துருண்டு பிரண்டு அஞ்சாமை சலியாமை ஊக்கம் இடையறா முயற்சி முதலியவைகளில் ஒரு சிறிதும் குன்றாமல் உயிரையும் பெரிதெனக் கருதாமல் எடுத்த காரியத்தை முடித்து ஜெயக்கொடியே நாட்டியுள்ளார்கள் என்று பல பெரியோர்கள் சரித்திரங்களை நாம் படித்திருக்கிறோமல்லவா? அங்ஙனமே இவர் தாம் கொண்ட கருத்திற் குறியாகத் தொண்டாற்றத் தொடங்கினார். ஆனால் இவருக்கு நிறைந்த கல்வியும் சிறந்த செல்வமும் அச் செல்வமே அன்ன செல்வாக்கும் வற்றாத பாக்கியமாய் வளர்ந்திருந்த படியால் தாமே முன் நின்று ஏராளமான திரவியங்களைச் செலவிட்டு முன்பு தமிழ்ச் சங்கம் இருந்து வந்த மதுரையில் நாமும் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவிக்க வேண்டுமென்று துணிந்து ஒரு பெருங் கட்டிடத்தைக் கட்டிவித்து அதில் 1901௵ மே௴ 24உ 4-வது தமிழ்ச் சங்கம் என ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதன் அக்கிராசனாதிபதியா யமர்ந்து அதனைச் செம்மை பெற நடத்தி வந்தார். இச் சங்கம் என்றென்றும் நிலைத்து நிற்பதற் கேற்றவாறு தாமும் தமது நண்பர்களைக் கொண்டும் மூலதனம் சேமித்து எவ்வித காரணத்தைக் கொண்டும் இம் மூலதனம் விரயமாகாதபடி அதற்கான ஏற்பாடும் செய்வித்தார். ஆதிகாலத்தில் பாண்டிய அரசர்களினால் எவ்வாறு சங்கம் நிறுவித் தமிழ் வளர்க்கப் பெற்று வந்ததோ அவ்வாறே இவரும் இச் சங்கத்தை ஸ்தாபித்து அதில் பல பாண்டித்யமுற்ற பெரும் புலவர்களை நியமித்துத் தமிழ்ச் சங்க அச்சுயந்திரசாலை, தமிழ்ச் சங்கப் புத்தகாலயசாலை (பாண்டியன் புத்தகசாலை), தமிழ்ச் சங்கப் பத்திராலயசாலை, செந்தமிழ்க் கலாசாலை என நான்கு அங்கங்களாகப் பிரித்து அவற்றுள் பழந்தமிழ் நூல்களை நவீன ஆராய்ச்சியுடன் சுத்தப் பிரதியாக அச்சிட்டு வெளிப்படுத்தியும், பழந்தமிழ் நூல்களைப் பொருட் செலவின்றி எவரும் படித்து வருமாறு செய்வித்தும் பண்டைக்காலத் தமிழ் மக்களது ஒழுக்க வழக்கங்கள் நூல்கள் நாகரீக முதலியனவற்றுள் சிறிதுசிறிதாக



மாதந்தோறும் பத்திரிகை வாயிலாய் வெளிவருமாறு செய்வித்தும் மாணவர்களுக்கு அன்னமளிக்கப் பெற்றுப் பாடம் கற்பித்தும் வருமாறு பல திட்டங்களை நியமித்தார்.

ஆங்கிலத்தில் எப். ஏ., பி. ஏ., எம். ஏ. என்று பிரிவுகள் ஏற்பட்டிருப்பது போலவே தமிழிலும் இச் சங்கத்தில் பிரவேசம், பால பண்டிதம், பண்டிதம் என்று மூன்று பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இப் பரீக்ஷைகளில் தேறுவார்க்கே அவரவர்கள் படிப்புக்குத் தக்கவாறு கலாசாலைகளில் தமிழாசிரியர் ஸ்தானம் கிடைக்கப் பெற்று வருகின்றன. மேலும் இவர் இராமநாதபுரத்தில் ஓர் ஆங்கிலக் கலாசாலை ஏற்படுத்தித் தமது பொருட் செலவில் அதை நடத்தி வந்தார். அது இப்போது இராமநாதபுரம் இராஜா அவர்களால் உயர்தரக் கலாசாலையாக நடைபெற்று வருகிறது. இவையன்றிப் பல கல்விச் சங்கங்களுக்கும் கலாசாலைகளுக்கும் பொருளதவி புரிந்து வந்ததுடன் பாஷாபிமானத்தில் இவர் ஈடுபட்டு உழைத்துவந்தது போலவே தேசாபிமானத்திலும் ஈடுபட்டு சமத்துவம், சகோதரத்வம், தியாக சிந்தை முதலியன வளர்ந்தேறி வருமாறு செய்து வந்தார். ஆங்கிலத்திலும் இவர் போதிய பயிற்சி பெற்றிருந்த படியால் கம்பர் வாக்கையும் சேக்ஸ்பியர் போக்கையும் பல இடங்களில் அததன் தாரதன்மியங்களை எடுத்து நிறுத்துக் காட்டியே அவைகள் தோறும் பிரசங்கித்து வருவது வழக்கம். இவர் பிரசங்கத்தினுடைய சாராம்சங்களையும் ஜனங்களை வசீகரப் படுத்துகிற சொல்லாற்றலையும் பற்றி உவமை கூற முடியாது. தற்போது சேதுபதி சமஸ்தான வித்வானாக இருக்கிற திருமிகு மு. இராகவையங்காரவர்கள் அவைக்களத்தில் பிரசங்கம் புரியக் கேட்பவர்களில் பலருக்கு இவர் ஞாபகம் வந்துவிடுவது முண்டு. இவருடைய பொருளுதவியினாலேயே சங்ககாலத்துப் பழந்தமிழ் நூல்களில் பலவற்றை நாம் அச்சுப் புத்தகங்களாகப் பார்த்து வருகிறோம். இவரும் சில நூல்கள் இயற்றி அவைகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. என்றாலும் பல நூற்றாண்டுகளாக வெளிவராமல் மறைந்து கிடந்த பல பழந்தமிழ் ஏட்டுப் பிரதிகளை ஆராய்வதிலும், அவற்றை வெளிப்படுத்துவதிலுமே இவர் காலங்கள் முழுதும் சென்றன.

# புத்தபிரானது ஓர் சம்பாஷணை.

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

## முன்னுரை

இந்தியாவில் இன்று சாத்வீகப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு அனுசரணையாக என்ன எழுதலாமென்று எண்ணியவுடன், எமது மனம் சுமார் 2,000 வருஷங்களுக்கு முன்னிருந்த சாக்கிய ஸிம்ஹரிடம் பாய்ந்து செல்கின்றது. அவரது மேலான சம்பாஷணை ஒன்றை இங்கே வாசகர்களுக்குத் தருகின்றோம்.

---

இவ்வாறு இவர்தம் வாழ்நாள் முழுவதையுமே தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் தியாகம் புரிந்து இவரது எண்ணம் எண்ணியாங்கு நிறைவேறிவிட்ட அதே வருடம் அதாவது தமிழ்ச் சங்கத்தை ஸ்தாபிதம் பண்ணிய 1901௵ டிசம்பர்௴ 11௳ இவர் மண்ணுலகை நீத்து விண்ணுலகு புக்க நிகழ்ச்சி "வினைப் போகமே பொருதேகங் கண்டாய் வினைதானொழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்ற பெரியார் மெய் மொழியை மெய் மொழியாகவே திருஷ்டாந்தப் படுத்திப் பொய்யுடம்பைப் போக்கிப் புகழுடம்பை இவ்வுலகில் நிலையாக்கி அழியாத பேரின்பப் பெருவாழ்வு பெற்றாரென்று எவரும் இறும்பூது கொள்ளுதற் கிடனாயிருக்கிறது.

இந்த மஹானாலேயே தமிழ் மக்களாகிய நாம் இம்மட்டாவது தமிழ்ச் சட்டை போர்த்திக் கொண்டு புதிது புதிதாகத் தோன்றி யழியப் படுகிற பலபாடைகளென்ற வாடைகள் நம்மீது தாக்காமல் நம்மையே ஒரு சிறிது நாம் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது தமிழர்களாகிய நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது.

---



தனது ராஜ போகங்களையும் அரசுரிமைகளையும் தனது உயிரினும் இனிய மனையாளையும் அருமைக் குழந்தையையும் துறந்து, பலவித வழிகளில் பிரவேசித்துக் கடைசியில் ஆத்மஞானம் அடைந்தபொழுது, கௌதமர், தான் கண்டறிந்தவைகளை மற்றவர்களுக்குப் போதிக்க ஆரம்பித்தார். அப்பொழுது அவருடைய மைத்துனர் ஆனந்தா என்பவர் அவருக்குச் சீஷராகிய பிறகு, ஆனந்தாவை மத போதகராகப் பயிற்சி செய்தார். கொஞ்ச காலம் அவரது அடிகளிலிருந்து நல்லுபதேசம் பெற்றபிறகு, ஸ்வர்னபுராந்தா என்ற கிராமத்திற்கு மத போதகராகப் போவதற்கு ஆனந்தா சித்தார்த்தரிடம் அனுமதி கேட்டபொழுது, குருவுக்கும் மாணவருக்கும் பின் வருமாறு சம்பாஷணை ஏற்பட்டது:—

புத்தர்:— என்னரிய சீஷா, அருமை ஆனந்தா! ஸ்வர்னபுராந்தா கிராம ஜனங்களுக்கு நீ உபதேசியாகப் போக விரும்புகிறாய். அவர்கள் மிகவும் கெட்ட குரூர ஜனங்கள் என்பதை நீ அறிவாயா?

ஆனந்தா:— அவர்கள் மிகவும் கெட்ட குரூர ஜனங்களாயிருந்த போதிலும், அவர்களை நான் நல்லவர்களென்றே நினைப்பேன்.

பு:— அவர்கள் உன்னைத் திட்டி அவமானப் படுத்துவார்கள். அப்பொழுது நீ என்ன செய்வாய்?

ஆ:— இன்னும் அவர்களை நல்ல ஜனங்களென்றே எண்ணுவேன்; ஏனென்றால் அவர்கள் என்னை அடித்துக் கஷ்டப்படுத்தவில்லையே.

பு:— அவர்கள் உன்னைக் கைகளால் அடித்தால் நீ அப்பொழுது என்ன நினைப்பாய்?

ஆ:— அவர்கள் என்னைக் கம்புகளால் அடித்துக் கஷ்டப்படுத்தவில்லையாகையால், அவர்கள் இன்னும் நல்ல மனிதர்களென்றே எண்ணுவேன்.

பு:— அவர்கள் உன்னைக் கம்புகள் கொண்டு அடித்தபொழுது, நீ அவர்களைப்பற்றி என்ன நினைப்பாய்?

ஆ:— அந்த ஜனங்கள் என்னைக் கத்திகொண்டு குத்தவில்லையானதால், அவர்களை மிக நல்லவர்களென்றே இன்னும் நான் கருதுவேன்.

பு:— அவர்கள் உன்னைப் பட்டயக் கத்திகொண்டு வெட்டினால், அப்பொழுது நீ என்ன நினைப்பாய்?

ஆ:— மரணத்தை உண்டாக்கக் கூடிய ஆயுதத்தால் எனது உடம்பிற்குக் கெடுதி செய்யாததால், அவர்களை இனியும் நல்லவர்களென்றே சொல்லுவேன்.

பு:— மரணத்தை உண்டாக்கக் கூடிய ஆயுதங்களால் உனக்குத் தீங்கு செய்தால், அப்பொழுது அவர்களைப் பற்றி என்ன நினைப்பாய்?

ஆ:— அவர்கள் என்னைக் கொல்லவில்லை யாகையால், மிக மிக நல்லவர்களென்றே எண்ணுவேன்.

பு:— அவர்கள் உன்னைக் கொன்றாலோ?

ஆ:— இனியும் அவர்களை மகா நல்ல ஜனங்களாகவே மதிப்பேன், ஏனெனில் இந்த உலகத் துன்பங்களி லிருந்தும் துயரங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றினார்கள்.

பு:— இப்பொழுது நீ மதபோதகராவதற்குச் சரியானபடி தகுதியாயிருக்கிறாய் உனது சாத்வீகத்தை யறிந்து மெச்சுகிறேன். உன்னை இதோ ஆசீர்வதிக்கிறேன். உனது முயற்சிகளில் வெற்றி உண்டாவதாக! நீ சந்தோஷமாகச் சென்று வரலாம்.

குறிப்பு:—

அஹிம்ஸைப் போர் இந்தியாவில் நடைபெற்று வரும் இக்காலத்தில், தேசீயத்தில் அதிகமாக ஈடுபட்டுப் பெரிதும் உழைத்துக் கொண்டிருக்கும் இச்சா சேவகர்கள் மேற்கண்ட கௌதம புத்தரது அமிர்த வாக்குகளைக் கவனிக்க வேண்டுகிறோம். கிருஷ்ணன் அவதரித்தார்; ஹம்ஸன் என்னும் அரக்கனை அழித்தார். ராமர் பிறந்தார்; ராவணனை அதம் செய்தார். கௌதம புத்தர் தோன்றினார்; ஜாதி பேதமென்னும் பிசாசைக் கொன்று ஜீவகாருண்யத்தை வளர்த்தார் அவர் சாத்வீகத்தைக் கைக்கொண்டு, ஜீவகாருண்ய மதத்தைப் பிரச்சாரம் செய்து ஸ்தாபித்ததா லல்லவோ புத்த மதமே இன்று உலகில் மகா பெரிய மதமா யிருக்கிறது. சுதந்திரமற்ற ஆஸ்தியற்ற ஆயுதங்களற்ற நாம், பல வகைத் திமிர்கொண்ட அரசாங்கத்தாருடன் சாத்வீகமாய்ப் போராடுகிறோம். பீரங்கிகள், விஷக் காற்றுகள், மரண ஒளி (Death-Ray) முதலியவை கொண்ட சர்க்காருடன் இவைகள் ஒன்று மற்ற அடிமைகளாகிய நாம் சாத்வீகத்தையே ஆயுதமாகக்கொண்டு போராடி விடுதலையடைய வேண்டியதிருப்பதால், அஹிம்ஸா தர்மத்தில் சற்றும் வழுவாதிருப்பது நமது முதற் கடமையாகும் சாத்வீகமே நமது பரத கண்டத்தை விடுவிக்கப் போகிறது.

ஆசிரியர், "பாரதி."



# வாலிபர் இயக்கம்.

ஸ்ரீமான். சி. போ. செல்லையா அவர்கள்.

வருங்கால உலகின் வாழ்க்கைச்சுமை எவருடைய தலையில்? எதிர்கால வாழ்க்கைப் பொறுப்பை ஏற்று நடத்துபவர் யார்? நாட்டின் செல்வங்களாகிய இளம் வாலிப மணிகளே. ஒவ்வொரு தேச சரித்திரத்தையும் அவ்வத் தேசத்தின் நவீன சீர்திருத்தப் புதுமைப் போக்கு, உரிமைப் போரின் உன்னத எழுச்சி, சமூக சீர்திருத்தத் திட்ட அமைப்புகள், கல்வி வளர்ச்சிக் கேற்ற பள்ளிச் சீர்திருத்தங்கள் இன்னும் இவைபோன்ற பல புது அமைப்புகள் எவருடைய உழைப்பால்—யாருடைய ஊக்கத்தால் நிர்மாணிக்கப் பெற்று உயரிய நிலைமையை அடைந்திருக்கின்றன வென்று உற்று நோக்கி ஆராய்ந்தால், அவ்வத் தேசத்தின் வாலிப வீரர்களால்—இளஞ் சிங்கங்களால் என்றே அவ்வத் தேச சரித்திரங்கள் விடையிறுக்கின்றன. ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தனது சுய முயற்சியால் ஒரு போர் வீரனாகி ஐரோப்பாக் கண்டத்தையே கிடு கிடு வென்று நடுங்கும்படி செய்து, பிரெஞ்ச் ராஜ்யத்தின் ஏகச் சக்ராதிபதியாய் விளங்கி உலக சரித்திரத்தில் ஒப்புயர்வற்ற போர்வீரனாய் ஒளிரும் சக்கிரவர்த்தி நெப்போலியன் ஓர் வாலிபன் என்பதை யறியாதார் யார்? உலக முழுவதையும் ஜெயித்து வெற்றிக் கொடி நாட்டிய அலெக்ஸாண்டரும், அவரது சேனா வீரர்களும் வாலிபர்களே. இப்பொழுது உலகத்திலுள்ள பாதி ஜனங்களின் ஹிருதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கக்கூடிய பெருமை வாய்ந்த ஆசியாவின் ஜோதி (Light of Asia)—அன்பின் பொக்கிஷம்—ஆத்மத்யாகி பகவான் புத்தர் தமது இராஜ போகங்களையும், உயிரினு மினிய மனைவியையும், ஒப்பில்லாத் தமதரும் புத்ர ரத்னத்தையுந் துறந்து "எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் இனம்" என்னும் போதத்தை உலகிற் கெடுத்துப் புகட்டிய அவரது ஒப்பில்லாப் பருவம் அழகொளிரும் இளமைப் பருவமே. ஒழுக்கத்திற் சிறந்தவனும் அன்பே உருவா யமைந்தவனுமான அசோகனும், மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவனும் போர்க்களத்தில் எதிரிகளுடன் யுத்தம் செய்துகொண் டிருக்கும்போதே

தனதருமைச் சுதேச ரோஜா மலர்களின் சௌந்தர்யத்தைக் குறித்துக் குறித்துக் கவிதைகள் புனைந்தவனுமாகிய பெரும் யௌவனர்களே. பழங்கால மஹரிஷிகள், சுத்த வீரர்கள், தேசத் தொண்டர்கள் தங்களைப்பற்றி உலகிற் கொன்று மறிவிக்காமலே உயிர்விட்டிருக்கின்றனர். ஆனால், அவர்களுடைய உபதேசங்கள் வரலாறுகள் முதலியவற்றை வருங்கால மக்கள் அறிந்து அனுபவிக்க வேண்டி, அக் கால வாலிபர்கள் அரும் பெரும் பிரயாசைப்பட்டு அறிவித்துச் சென்றமைக்கு, வாலிப உலகிற்கு யாம் எக் கைம்மாறு செலுத்த வல்லோம்! வாலிப உலகின் பெருமையே பெருமை.

"இந்தியாவின் வாலிபச் சிங்கம் ஸ்வாமி விவேகானந்தர் இல்லாவிட்டால், இராமகிருஷ்ண பரமஹம்சரை நாம் அறிய முடியுமா? பாஸ்வெல் இல்லாவிட்டால், ஜான்ஸனுடைய ஜீவிய சரித்திரம் மறக்கப்பட்டிருக்குமன்றோ? அப்போட் இல்லாவிட்டால், நெப்போலியனைப் பற்றி இப்பொழுது ஒன்றும் அறிந்திருக்க முடியாது" என்று "பாரதி" ஆசிரியர் ரா. நாராயணசுவாமி அவர்கள் எழுதுகின்றார். எந்தக் காலத்திலும், எந்தச் சரித்திரத்திலும், எந்த இயக்கத்திலும் வாலிபர்களே முன்னணியில் நின்று உழைத்துத் தங்கள் ஒப்பற்ற உயிரையுங்கூட மதியாமல் இரத்தத்தைச் சிந்தி வெற்றி பெற்றிருக்கிறார்கள். "ஒரு தேசமோ, நாடோ, சமூகமோ முன்னேற்றமடைய வேண்டுமானால், பள்ளி மாணவர்களிடம் போய் முறையிடுங்கள்; உங்கள் குறைகள் நீக்கப்படும்" என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார் கிரேக்க நாட்டுத் தத்துவ சாஸ்திரியாகிய சாக்கிரட்டீஸ் என்னும் பெரியார் "என் மனம் இளைஞர்களையே நாடி நிற்கிறது" என்று கூறிய பொன் மொழியைத் தமிழ் நாட்டு வாலிபமணிகள் தங்கள் உள்ளத்தில் பதித்துத் தேச சேவையி லீடுபட வேண்டுமாய் மிகவும் விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

## அயல் நாடுகளில் வாலிபர்கள்

அயல் நாடுகளில் வாலிபர்களால் செய்யப்பட்ட—செய்யப்படுகிற அபாரச் செயல்களைக் கவனிப்போமானால் நாமெல்லாம் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டியவர்கள்தான். அயர்லாந்து, ஜெர்மனி, எகிப்து, துருக்கி, ஜப்பான், ருஷ்யா முதலிய தேசங்கள் இப்போதிருக்கும் உன்னத நிலைமைக்குக் காரணம் அத் தேசங்களின் வாலிபர்களுடைய குன்றா முயற்சியாலும் குலையா ஊக்கத்தாலு மென்பது யாவரும் மறுக்கொணா விஷயமாகும். எகிப்தின் சுதந்திரத்திற்குக் காரணம் அந் நாட்டு யுவர்களின் அபார முயற்சியே.



எல்ஹஜார் தேசீயக் கலாசாலையில் கல்வி பயின்று வந்த மாணாக்கர்கள் எகிப்துக் காற்றிய தொண்டே, எகிப்தில் தேசீய உணர்ச்சியை வளர்த்து வெற்றியடையுமாறு செய்தது. அவ் வாலிபர்களின் விடா முயற்சியினாலேயே மில்னர் கமிஷன் பஹிஷ்காரம் செய்யப்பட்டது. சீன தேசத்து இளைஞர்களின் தீவிரமான முயற்சியோ வேகம் வேகம். சீன தேசம் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடலாகாதென்றும் சீன நாடு உரிமையடையும் வரை ஜப்பான் தேசத்துச் சாமான்கள் பஹிஷ்காரம் செய்யப்பட வேண்டுமென்றும், அந் நாட்டு யுவர்கள் தீர்மானம் செய்தார்கள். அவ் வாலிபர்கள் அந்தக் கடுமையான போரில் அடைந்த அல்லல்கள் பலப்பல. மாணவர்களெல்லோரும் அரசியலில் தலைப்படலாகாதென ஆசிரியர்களால் தடுக்கப்பட்டனர். தனவந்தர்களும் செல்வாக்குடையவர்களும் அவர்களுக்கு விரோதமாக விருந்தார்கள். வியாபாரிகளின் அநுதாபத்தை மட்டும் அவர்கள் பெற்றிருந்தார்கள். இளைஞர்களுள் சிலர் போலீஸாரால் துப்பாக்கிக் கிரையாகினர். சில யௌவனர்கள் சிறைக்கனுப்பப்பட்டனர். ஆ! எத்தகைய இன்னல்; எத்தகைக் கொடுமை!! இதை யெல்லாம் அவ் வாலிபர்கள் பொருட்படுத்தினார்களா? அவர்கள் இதை யெல்லாம் ஒரு லக்ஷியம் செய்யாமல் தங்கள் வெற்றியின் மேலேயே கண்ணா யிருந்தார்கள். அந் நாட்டு யுவர்களும், யுவதிகளும் மகாநாடு கூட்டித் தீர்மானம் செய்தார்கள். தீர்மானத்தின் மூலமாகக் கடைகளெல்லாம் மூடப்பட்டன. ஜப்பான் தேசத்துப் பொருள்கள் பஹிஷ்காரம் செய்யப்பட வேண்டு மென்று தீவிரப் பிரச்சாரம் புரிந்து வந்தார்கள். முடிவில் இவர்கள் அடைந்த பயன் யாது? அந் நாட்டு மந்திராலோசனை சபையார் விலகும்படி நேர்ந்தது. சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடவே யில்லை, வியாபாரிகள் ஜப்பான் தேசத்துப் பொருள்களை வாங்காதிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டனர். சன் யாட் சென் என்னும் பெரியாரைத் தலைமையாகக் கொண்டு ஒரு இளைஞர் இயக்கம் தோற்றுவித்து வாகைமாலை சூடினார்கள். சுமார் 50 ஆண்டுகட்கு முன்னால் அடிமைப்பட்டுக் கிடந்த ஜப்பான் இப்பொழுது உலக வல்லரசுகளில் ஒன்றாய்ப் பிரகாசிப்பதின் காரணமென்ன? அந் நாட்டு வாலிபர்களின் அதி தீவிர முயற்சியே, அந் நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம். அத் தேசத்து இளைஞர்களுள் ஒருவராகிய டோக்கோ என்னும் வாலிபர் ஐரோப்பா சென்று, அங்கே பூத பௌதீக தத்துவ சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றுப் பின்னர் தமதருமைத் தாய் நாட்டுக்குச் சென்று, ஜப்பானை உலகத்தின் மகுடமணியா யிலங்கும்படி செய்தார். ருஷ்யோ-ஜப்பான் யுத்தத்தில் ருஷ்யாவைத் தோல்வியுறச் செய்தவரும் அவ் யௌவனரே. அந்நாட்டு வாலிபர்கள் ஒன்றுகூடி, யுவர் சங்கங்கள் ஸ்தாபித்து அதன் மூலமாய் நாட்டுக் கரிய தொண்டாற்றினதா லல்லவோ இன்று ஜப்

பாலேக் கீழ்நாட்டின் இங்கிலாந்து என்று உலகமே வாயார வாழ்த்திப் புகழ்கின்றது.

ருஷ்யாவில் சார் சக்கிரவர்த்தி காலத்தில் 100-க்கு 20 பேர்களே, கல்வி கற்றவர்களாகவும் பெரும்பாலோர் கல்வியின்றி அறியாமையென்னும் அந்தகாரத்தில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்த [illegible], சோவியத் (Soviet) அரசாங்கம் ஏற்பட்டு, அதன் மூல[illegible]ளெல்லாம் கிளர்ச்சி செய்து, வாலிபர் சங்கங்கள் நி[illegible]யைப் பரப்ப அரும் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்[illegible], இன்று ருஷ்யாவில் 100-க்கு 80 பேர்கள் கல்விகற்[illegible] அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறார்கள். [illegible] கண்டு திடுக்கிடும்படி அவ்வளவு விரைவாக ருஷியா [illegible] கொண்டு போகிறது. ஜெர்மனியிலுள்ள பழைய [illegible] ஆட்சி முறைகளையும் பழைய வழக்கமென்னும் பாழும் [illegible]டி எறிந்து வெற்றிமாலை சூடினவர்கள் யௌவனர்[illegible] வாலிபர்கள் கார்ல் பிஷ்சர் (Karl Pischer) என்ற [illegible] தலைவராகக் கொண்டு "எதேச்சா ஜெர்மனிய வாலிபர்" ([illegible]an Youth) இயக்கம் ஒன்று ஆரம்பித்துச் [illegible] கொடு[illegible]த் தகர்த்தெறிந்தார்கள். ஜெர்மனியின் விடுதலைக்கு உழைத்து வெற்றிபெற்ற வாலிபர்களில் எங்கல் ஹேகல், வாஸ்ஸலி முதலியவர்கள் முக்கியமானவர்கள். துருக்கியிலுள்ள வாலிபர்கள், "இளந் துருக்கியர்" (Young Turk) என்ற இயக்கத்தை ஆரம்பித்து முஸ்தபா கமால் பாஷாவைத் தலைவராகக்கொண்டு நடத்தினதால், இன்று துருக்கி சீர்திருத்த நாடுகளிலொன்றாய் ஜ்வலிக்கின்றது. அயர்லாந்தின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்று உழைத்த டெவாலரா என்னும் பெரியாரும், ஆயுள் முழுவதும் சிறைவாசம் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டு ஒவ்வொரு நிமிஷமும் சாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த டார்காஸ் கிரேவும் இளம் ஐரிஷ்காரரின் உதவி கொண்டே வெற்றி பெற்றார்கள்.

அமெரிக்காக் குடியரசின் அக்கிராசனாதிபதிகளாய் விளங்கிய லிங்கன், கார்பீல்டு, வாஷிங்டன் முதலியவர்கள் யௌவனர்களே. அயல் நாடுகளில் பல வயோதிகர்கள்கூட இளைஞர்களைப் போன்று வாலிப உணர்ச்சியைப் பெற்றிருக்கின்றனர். அமெரிக்காக் கோடீஸ்வரப் பிரபுவும், மோட்டார் உலகத்தையே சிருஷ்டித்து உலக முழுவதும் பரவச் செய்தவருமான ஹென்ரி போர்டு என்பவரும், உலகத்தையே ஒரே நொடியில் பஸ்மீகரப் படுத்திப்போட வேண்டுமென்று ஆயத்தம் செய்து வைத்துக்கொண்டிருந்த ஜெர்மனியின் மாஜி கெய்



ஸரும் வயதில் வயோதிகர்களாயினும் இன்னும் இளஞ் சிங்கங்கள் போல் ஓடியாடிக் குதித்து உலகமே பிரமிக்கும்படியாய் அதியற்புத வேலைகளைச் செய்து வருகின்றனர். அன்னிய நாடுகளில் வயோதிக உலகங்கூட, வாலிப உலகமாக மாறிவருகிறது. நமதருமைத் தாய் நாட்டிலோ வாலிபர்களெல்லாம் வயோதிகர்கள் போன்று, தளர்ந்த நடையும் உடைந்த மார்பும் விழுந்த கண்ணும் வளைந்த முதுகையுமுடையவர்களாய்த் தனது வீரத்தையெல்லாம் எங்கேயோ ஒளித்துப் போட்டுக் கண்ணை மூடி யோக நித்திரையி லிருப்பதைப் போன்றிருக்கின்றார்கள்.

அன்பார்ந்த வாலிப சகோதரர்களே! இவ்வாறிருப்பது உங்களுக்கழகா? நம் கண் முன்பாக இன்று பிரகாசித்து ஜ்வலித்துக் கொண்டிருக்கும் இதர நாடுகளின் முற்போக்கை உங்கள் இரு கண்களாலும், பரந்த நோக்கமும் உயர்ந்த எண்ணமுங்கொண்டு சிறிது உற்று நோக்கிப் பாருங்கள்; உண்மை விளங்காமல் போகாது. அயல் நாட்டு வாலிபர்களினுடைய வேலை என்ன? பிறர் நலங்குறித்த தொண்டு—உழைப்பு—வேலை. நாமோ எவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன வென்று சுய நலச் சோம்பேறிகளைப்போல் திண்ணை தூங்கிச் சோம்பேறி ஞானம் பேசி, அருமை வாழ் நாட்களை, வீணாட்களாக்குகின்றோம். ஒவ்வொரு நாடும், முன்னேற்றப் பந்தயத்தில் போட்டி போட்டுக்கொண்டு வெகு வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. நாமும் நமது ஏழை இந்தியாவைச் செல்வ இந்தியாவாகவும் அடிமைத் தாய் நாட்டை உரிமைத் தாய் நாடாகவும் பழைய வழக்கத்தால் நசுக்குண்டு பரிதவிக்கும் பாரத உலகைச் சீர்திருத்தப் பாரத உலகாகவும் செய்ய முயற்சிக்க வேண்டாமா? பாரத வாலிப வீரர்களே! எழுங்கள், எழுங்கள், வேலை செய்யுங்கள்!

## கிராமச் சீர்திருத்தம்.

இளஞ் சகோதரர்களே! யுவ ரத்னங்களே!! ஜெர்மானியர்களைப் போன்றும், ஆங்கிலேயர்களைப் போன்றும் வெடிகுண்டுகளைத் தாங்கிக் கொண்டு போர் முனையில் நின்று யுத்தம் செய்யுமாறு உங்களை இப்பொழுது அறைகூவி அழைக்கவில்லை. சீனர்களைப்போல் ஒத்துழையாமைப் போர் துவக்கவேண்டுமென்று உங்களை விரும்பி அழைக்கவில்லை ஆனால், உங்கள் இரத்தக் கலப்புள்ள சகோதரர்கட்காக—அரை வயிறு கால்வயிறு பட்டினியாகக் கிடந்து அலமறும் அன்னை பாரதியின் அருமை மக்களுக்காக—கல்வி யென்னுஞ் செம்பொருளின்றிக் கண்ணிழந்த குருடர்கள்போல் கஷ்டப்படும் கல்வியில்லா மக்களுக்காக, அவர்கள் முன்னேற்றங்கருதி வேலை செய்யவே உங்களை மிகவும் விரும்பி அழைக்கின்றேன். ஏழை மக்கள் முன்னேற்றத்திற்காக

உங்கள் வாழ்நாட்களை அர்ப்பணம் செய்யப் பின் வாங்காதீர்கள். உங்கள் ஜீவிய நாட்கள் பூராவும், பிறர் நலம் நாடி உழைத்த நாட்களாகவே யிருக்கட்டும். ஒருவனுடைய ஜீவிய நாட்களில் பிறர் நலம் நாடி உழைத்த நாட்களே சிறந்த நாட்கள்! இப்பொழுது நம் நாடு, பெரும்பாலும் கிராமங்களாலேயே ஆக்கப்பட்டிருப்பதால் கிராமச் சீர்திருத்தம் செய்யவேண்டியது, வாலிபர்களுடைய முக்கிய முதற் கடமையாகும். ஆதலால் வாலிபர்களெல்லோரும் கிராம முன்னேற்றமே தேச முன்னேற்றமெனக் கருதி கிராமசேவைபுரிய வீராவேசங் கொண்டு எழல்வேண்டும். ஏழைச் சகோதரர்கள், பாமரமக்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே வசிக்கின்றார்கள். அவர்கட்குப் போதிய கல்விப் பயிற்சி கிடையாது. அவர்களை வறுமை ஒருபுறம் வாட்டுகின்றது; கல்வியில்லாக் குறை இன்னொரு பக்கம் தகிக்கின்றது. அவர்களுடைய நிலைமையோ பரிதாபம்! பரிதாபம்!! இவ்வித இழிவான நிலைமையி லிருந்துகொண்டு, அவர்களால் உலகப் பொதுக்காரியங்களை எவ்வாறு அறியக் கூடும்? தாங்கள் கல்வி கற்றிருந்தால் தங்கள் இளஞ் சிறுவர்களையும் சிறுமிகளையும் கல்வி கற்கப் பள்ளிக்கனுப்புவார்கள். தாங்களே கல்வி இன்னதென் றறியாமலிருக்கும் பொழுது அவர்கள் குழந்தைகட்கு அவர்களால் எவ்வாறு கல்வி புகட்ட முடியும்? பஞ்சத்தால் பரிதவிக்கும் பாரதமக்கள் தங்களுடைய வாழ்க்கை நடத்துவதற்கே பெருங் கஷ்டமாயிருக்க, தங்கள் குழந்தைகளின் கல்விச் செலவிற்கு அவர்கள் எங்கே பணம் வைத்திருக்கிறார்கள்? ஆதலால், வாலிபர்களே! கிராமந்தோறுஞ் சென்று நம்மால் அடிமைப்பட்டு அநேக நூற்றாண்டுகளாக அடியில் கிடக்கும் தீண்டப்படாத சகோதரர்கட்கும், ஏழை மாணவர் மாணவிகட்கும் உங்கள் பிரச்சாரமாகிய நவீன புத்தகங்களைக்கொண்டு அவர்கள் செவிகளின் வழியாய்க் கிரகிக்குமாறு, கேள்வி ஞானத்தை அவர்களுக்கு ஊட்டுங்கள். கல்வி கற்று முன்னேற்றமடைவதைவிடக் கேள்வியின் பயனாய் நூறு மடங்கு நன்மை பெறலாம். "ஏழை மாணவன் கல்வியினிடத்திற்கு வர முடியாமற் போனால், கல்வி அவனிடத்திற்குச் செல்லவேண்டும்" என்ற விவேகானந்தரின் உதாரணமொழிப்படி, நாமே ஏழை மாணவர்களின் இல்லங்கள்தோறும் தெருக்கள் தோறுஞ் சென்று பிரச்சாரம் புரிய தீவிரமான பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்.

பண்டை நாளில், நம் நாட்டில் பல அரிய பெரிய மேதாவிகள் வாலிபர்களைக்கொண்டு கிராமங்கள் தோறுஞ் சுற்றித் தீவிரமான பிரச்சாரம் புரிந்ததின் பயனாகவே, தங்கள் காரியங்களைச் சாதித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆதலால், யுவர்களே! நீங்களும் கிராமந்தோறுஞ் சென்று காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்த முறையில் சொற்பொழிவு நிகழ்த்துங்கள். அறியாமையில் மூழ்கி அல்லலுறும் பாமர ஜனங்களைத் தட்டித் தட்டி எழுப்பப் பிரச்சாரமே தேவை.



"எனது இளைஞர்களே! கிராமங்கள் தோறும் செல்லுங்கள். அங்கே ஏழைகட்காக இரங்கிக், கருணையுடன் அவர்கட்குச் சன்மார்ச் சங்களைப்பற்றிப் போதியுங்கள். அவர்களுக்குச் செய்யுந் தொண்டால் அன்று அங்கு தங்கி, அடுத்த நாட்காலையில் மறு கிராமத்திற்குச் செல்லுங்கள்" என்று ஏசுநாதர் தமது சீடர்களுக்கிட்ட மகத்தான கட்டளையை மனத்தால் நினைத்துப் பாருங்கள். ஜீவகாருண்யமே ஒரு உருவாய்த் திரண்டு வந்ததோ வெனும்படி, ஜெக ஜோதியாய்ப் பிரகாசிக்கும் நமது சாக்கிய சிம்ஹனாரும் தமது சீடர்களிடம் கிராமங்கள்தோறுஞ் சென்று அங்கு பௌத்த சங்கங்களை ஏற்படுத்துங்களென்று கட்டளையிட்ட கண்ணியமான மொழிகளைக் கவனித்துப் பாருங்கள். மகம்மதிய மத ஸ்தாபகராகிய நபி நாயகம் அவர்களும் சீக்கிய மதத்தை ஸ்தாபித்த குருநானக் போன்ற பல அரிய மேதைகளும், கிராமச் சீர்திருத்தத்திலேயே கவனத்தைச் செலுத்தித் தங்கள் காரியங்களைச் சாதித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று "கிராமங்கள்" என்ற தமது கட்டுரையொன்றில் ஆசிரியர், நாராயணசுவாமி அவர்கள் கூறுகிறார். வாலிபர்கள் இப்பொழுது அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டியது கிராமச் சீர்திருத்தமே.

## வாலிபர் சங்கம்.

வாலிபர்களெல்லோருஞ் சேர்ந்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் யுவர் சங்கங்கள் ஸ்தாபித்தல் வேண்டும். சர்வ கலாசாலைப் பட்டங்கள் பெற்று வெளியேறும் மாணவர்கள், முதன் முதலில் கிராம சேவையிலேயே தலையிடவேண்டும். முக்கியமாகக் கல்லூரி மாணவர்கள் யுவர் சங்கத்தில் அங்கத்தினராயமையப் பெறுதல் வேண்டும். வாலிபர் சங்கத்தின் ஆதரவில் அந்தந்த கிராமத்தில் மாதமொரு முறையோ அல்லது இருமுறையோ வாலிபர்களால் பொதுக் கூட்டம் கூட்டி உபந்நியாசம் நடைபெற்று வருதல்வேண்டும். வாலிபர்கள் உள்ளத்தில் ஜாதீய உணர்ச்சி தலைகாட்டவே கூடாது, கூடாது. சாதி வேற்றுமை யென்னும் பேயை வெட்டி வீழ்த்த வேண்டியது வாலிபர்களுடைய முதற் கடமையாகும். இது காலை, நம் நாட்டை அரித்து வரும் சாதிக் கொடுமை, பாராமை, நெருங்காமை, தீண்டாமை. பால்ய விவாஹக் கொடுமை, விதவா விவாஹ மறுப்பு, இன்னும் பல அரிய விஷயங்களைக் குறித்து வாலிபர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதோடல்லாமல், செயலில் காட்ட அதி தீவிரமாக வெளிக்கிளம்பி வரல் வேண்டும். வாலிபர் சங்கத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பார்களைச் சேர்த்துக் கொள்ளக் கண்டிப்பாய் பின்வாங்கக் கூடாது, பின் வாங்கக் கூடாது, பின்வாங்கக் கூடாது என்று பலமாகவும் அழுத்தமாகவும்

வணக்கமாகவும் எச்சரிக்கின்றேன். ஆண்டுக் கொருமுறை யுவர் மகா நாடுகள் கூட்டி அதில் காலதேச வர்த்தமானத்திற்குத் தகுந்தபடி பல அரிய பெரிய தீர்மானங்கள் நிறைவேற்றி, அதைச் செயலுக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். காகிதத் தீர்மானம் ஒருக்காலும் நன்மை பயக்கவே பயக்காது.

## சமரசம்

ஒரே குலம்; ஒரே மதம்; ஒரே தெய்வம் என ஒற்றுமைப்பட்டு, ஏகேசுர உபாசனை நடத்திய நம்மிந்தியா நாட்டில்—அன்பிற்காக உயிரை ஈந்த சிபிச் சக்கிரவர்த்தி, ததீசி மஹரிஷி, திலீபச் சக்கிரவர்த்தி போன்ற அரும் பெருந் தியாகிகள் அவதரித்து அவனிக்கே அன்பின் மேன்மையை அறிவுறித்திய நமது ஜென்மதேசத்தில்—ஐயறிவுள்ள ஞமலி யென்றெண்ணுமல் அருகிருத்தி அந்தரமார்க்கம் சென்ற அன்பு வடிவினன் தர்மன் பிறந்த இந்நாவலந்தீவில்—சாதி யென்ற சொல்லே இல்லாமல் சகோதர நேயம் ததும்பி, சமத்துவம் ஜ்வலித்து, சமரசம் பொங்கிப் புரண்டோடிய நமது மாத்ரு பூமியில் இடைக்காலத்தில் எப்படியோ சாதி என்னும் நீசச் சனியன் குறுக்கிட்டு இன்று நாலாயிரம் சாதிகளாய்ப் பிரிந்து உருக்கொண்டு நாட்டை அரித்து வருகின்றன. மதம் மதம் என்று கூக்கிரலிட்டு மதம் பிடித்துத் திரியும் வைதீகர்கள் ஒரு புறம் நாட்டைக் கெடுத்து வருகிறார்கள். இன்று உண்மையில் நம் நாட்டில் தீண்டாமைக்காகப் பாடுபடுவோர்கள் எத்தனை பேர்? அவர்களுடைய பரிதாப நிலை கண்டு இரங்குவோர் எத்துணை பேர்? நமது நாட்டில் பிறந்த சகோதரர்களை அடித்துத் துரத்தி அவமானப்படுத்தித் தெருக்களில் நடக்க வொட்டாமலும், குளங்குட்டைகளில் குளிக்கவிடாமலும், ஆலயங்களில் போய் ஆண்டவனை வணங்கவிடாமலும் அடிமைப்படுத்தி யிருந்து கொண்டு அன்னியர்களிடம் உரிமைக்காகப் போரிடுவதில் பயன் கிடைத்துவிடுமோ? சாதி வேற்றுமை என்னும் சனியன் என்று ஒழிகின்றதோ—மத வேற்றுமை என்னும் பிசாசு என்று மாண்டு மடிகிறதோ—வைதீகக் கொடுமை என்று மண்ணோடு மண்ணுப் உக்கி மறைகிறதோ—தீண்டாமைக் கொடுமை நம் நாட்டை விட்டு என்று விரைவாக வெளிக் கிளம்புகிறதோ அன்றே நம் நாட்டுக்கு விமோசனம், விடுதலை, சுதந்திரம் கிட்டும் நாள் என்று கொஞ்சமும் அஞ்சாமல் கூறலாம். வாயளவில் சமரசப் பேச்சுப் பேசும் பிரசங்கிகளே, இப்பொழுது யாண்டும் நிறைந்திருக்கின்றார்கள். தீண்டாமைக் கொடுமையையும், மதப் பிரிவினையையும், சாதி வேற்றுமையையும் வீரவாள் கொண்டு வெட்டி யெறிவது யார்? வாலிபர்கள், வாலிபர்கள், வாலிபர்களே.



## வேண்டுகோள்.

பாரத யுவ சிம்ஹங்களே! தளர்ச்சிவேண்டாம், யாண்டுங் கிளர்ச்சி செய்யுங்கள். கோழைத்தனம், பயங்காளித்தனம், அடிமைத்தனம் ஆகிய இவற்றை அடியோடு அகற்றித் தள்ளுங்கள். வெற்றி வெற்றி என்ற வீரஞ்செறிந்த வார்த்தைகளே உங்கள் உள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பட்டும்! சக்தி நம்முடைய வசத்திலிருக்கிறது. பிறர் உதவியை எதிர் பாராதீர்கள். நீங்களே உங்களுடைய உதவிக்குப் பாத்திரமானவர்கள். வீண் பேச்சு வேண்டாம் வேண்டாம்; வேலை செய்யுங்கள். வேலையைப் பாரப்புங்கள். ஒற்றுமைப்படுங்கள். உறுதியாய் நில்லுங்கள். காரியத்தைச் சாதிப்பதில் கண்ணுயிருங்கள். வருங்கால இந்தியா, எவருடைய உதவியை நாடி நிற்கிறது? வாலிபச் சிம்ஹங்களுடைய உதவியை யல்லவா? உங்கள் உடலானது இமோத்கிரி பர்வதமாகவும், உள்ளமானது கன்னியா குமரியாகவும், உங்கள் உயிரானது இந்தியாவாகவும் மதித்து உழைத்து உழைத்து வெற்றி பெறுங்கள். சமீப நாளைக்கு முன்பு உண்ணு விரதமிருந்து உயிர் நீத்த, ஒப்பில்லாத் தியாகி—வங்க நாட்டுச் சிம்ஹம்—பாரத நாட்டு வாலிபமணி—யௌவன ரத்னம் யதீந்திர மணியின் ஆவேசம் உங்கள் இரத்த நாடிகளின் வழியாய் மின்சாரம் போன்று பாய்ந்து உங்கள் இருதயத்திலிருந்து ஆவேச உணர்ச்சி கிளப்பி பகீர் பகீரென்றுப் பற்றிப் பிடிக்கவில்லையா? ஞான இந்தியா—நவ இந்தியா—யௌவன இந்தியா—இளம் பாரதம் உரிமை யிழந்து, வறுமை வாய்ப்பட்டு வாடி வதங்கி அல்லலுறுகின்றது. இளைஞர்களே! யுவர்களே!! இந்தப் பொன்போன்ற சமயத்தைத் தவற விட்டு விடாதீர்கள். வேலை செய்யுங்கள். வாலிபர் சங்கம் நிறுவுங்கள்; வெற்றி பெறுவீர்கள். வாலிபர்களின் வெற்றிக்குறு துணையாய் வேண்டியது என்ன? வீரம், உதாரம், உழைப்பு, ஊக்கம், உறுதி, தியாகம், வேலை! வேலை!! வேலை!! 'பாரதி' ஆசிரியர் அவர்களின் வாக்கொன்றை இதனடியில் கூறி இதனை முடிக்கின்றேன்.

"இந்திய வாலிப வீரர்களே! ஜாதி பேதத்தால் இந்தியா பல வீனமடைந்து இன்று நைந்து அடிமையாய்க் கிடக்கிறது. ஜாதி பேதமற்ற இந்தியா—மத பேதமற்ற இந்தியா—சமத்துவ இந்தியா உங்கள் தியாகத்தின் மீது கட்டப் படட்டும்."

# சத்யாக்ரக வீரம்.

ஆசிரியர் பி. ஸ்ரீ. அவர்கள்

நம் முன்னோர், வாழ்க்கையின் பல துறைகளிலும் சிறந்து நாகரீக முற்று விளங்கின ரென்பது இந்திய சரித உண்மை. வாழ்க்கையை வளமுறச் செய்யும் பயிர்த் தொழில் கைத்தொழில் வியாபாரம் வைத்தியம் கணிதம் ரசாயனம் முதலிய உபயோகமான கலைகளிலும் நம்மவர் பண்டை நாளில் தலைசிறந் திருந்தன ரென்பது உலகறிந்த தொன்றே. அறிவின் பல்வேறு கிளைகளையும் கலைகளாக்கிப் பயின்ற இந்திய மக்கள், போர்க் கலையையும் ஓர் அரும் பெருங் கலையாகக் கையாண்டு வளர்த்து வந்தனர் என்பது கவனிக்கத் தக்கது.

* * *

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை"

என்பது பண்டைத் தமிழர் கொள்கை. யமனே எதிர்த்துச் சீற்ற மேற்கொண்டு வரினும் கூடிக் கருத்தொருமித்து எதிர் நிற்கும் ஆற்றலுடையதே சேனையென்று தமிழர் கருதுவா ராயினர். பின்னாளில் அன்னார் கூடி யெதிர்நிற்கும் ஆற்றலை யிழந்து ஒருவரோடொருவர் போர் புரியத் தொடங்கினர். அப்பொழுதுதான் தமிழகம் தன் சுத்த வீர சுதந்தரத்தினை யிழக்கலுற்றது.

* * *

ஒரு தமிழ் வீரன், தன் சேனையின் முன்னணியில் வீரம் விளைத்து நிற்கின்றான். அப்பொழுது பகைவர் யானை யொன்று போர் வெறிகொண்டு அவ் வீரன்மேற் சீறி வருகின்றது. அவ்வமயம் அவன் என்ன செய்கின்றான்? பாருங்கள்! அவன் கையிலுள்ள வேலாயுதம் ஒரு கணம் பளபள வென்று மின்னுகிறது. உடனே அவ் வேலைத் தன் மேல் வரும் யானை மீது சுழற்றி வீசுகின்றான். யானை நடுங்கித் தன் மீது பாய்ந்த வேலோடு தன் படையிலேயே தளப்பம் விளைவித்துக்கொண்டு ஓடுகிறது. அத் தருணம் நிராயுத



னாய் வெறுங் கையோடு நிற்கின்ற அவ் வீரன் மீது வேறொரு யானை சினந்து வருகிறது. அந்த யானைமீது எறிவதற்கு வேல் எங்கே என்று வீரன் தேடுகிறான். என்ன ஆச்சர்யம்! அவன் தன் மார்பின் மேல் பட்டு அழுந்தி நிற்கும் வேலை அப்பொழுதுதான் காண்கின்றான். உடனே அதைப் பிடுங்கி "யிதனை யிந்த யானை மீது எறிவேன்" என்று சிரிக்கின்றான்! என்ன சிரிப்பு!! இதுவன்றோ வீர நெருப்பு!!!

* * *

இக் காட்சியினை நம் தெய்வப் புலவர் அதி அற்புதமான சொற்செட்டோடு சித்தரிக்கின்றார்.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

இஃது எத்தகை வீரக் காட்சி! எத்தகைய சொற் சித்திரம்! போர்ச் சினமும் வீரச் சிரிப்பும் எத்தகைய தோழமை! மார்பிற் பட்டு உருவிய பகை வேலினை அறியாத போர் வெறியினை என் னென்பது! தன் மார்பிற் பாய்ந்து குளித்து நிற்கும் வேலை அறியாமல் வேல் தேடித் திரியும் வீரனது வீரந்தான் எத்தகையது! பின்னர் மார்பிலுள்ள வேலைப் பறித்துத் தேடிய பொருள் வருந்தாமற் கிடைத்ததே யென்று நகைக்கும் நகைப்பினை என்னென்போம்! முகத்தில் தவழ்ந்து வீர விழியில் மிதக்கும் இந் நகைப்பு, அந்தகாரமான போர் மேகத்தினைக் கிழித் தொளிரும் மின்னலே யன்றோ!

தான் விழுந்து மாளப் போகின்ற இந் நிலையிலும் வீரன் பின்னும் தளராத போர்க்காதல் கொண்டிருக்கிறான்! இத்தகைய மாட்சிகள் பல பண்டைத் தமிழகத்திற் காணப்பட்டன. பகைவரைக் கோபித்து நோக்கிய பயங்கரமான வீர விழி, அப் பகைவர் வேலினை யெறியும் போது கூசி யிமைக்கு மானால் அதுவே வீர ராயினோர்க்குப் புறங் காட்டி யோடும் குற்றத்துக்கு நிகராகுமென்று நம் தமிழ் முன்னோர் மதித்தனராம். இத்தகைய கொள்கை அன்னாரது வீரப் பயிற்சிக்கு ஓர் அற்புதச் சான்றாகு மன்றோ?

* * *

இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்று தமிழ்ப் பெரியாரான பக்த மணிகள் கருதினர். போர்க்களத்தே முகத்திலும் மார்பிலும் புண்படும்படி போர் செய்யாத நாட்களை யெல்லாம் எடுத்தெண்ணி போர் பெறாது வீணே கழிந்த நாட்களோடு சேர்த்து வைத்தார் அந்தோ! புகழின் கண்களாகிய புண்களைப் பூணாத நாளெல்லாம் பிறவா நாளே! என்று தமிழ்ப் பெரியாரான வீர மணிகள்

கருதினர். அருங்கலை வினோதராகவும் அமராபரணராகவும் ஒருங்கே விளங்கவேண்டு மென்பது வீரத் தமிழர் குறிக்கோள்.

* * *

இத்தகைய பண்டை மக்கள் மறப் போரினும் அறப் போரையே அதிக அளவிற் காதலித்தனர் என்று கருதுவது இழுக்காகாது. போர் புரியுங்கால் பகைவரிடத்துத் தாட்சண்ய மில்லாமற் செய்யும் வீரத்தை உயர்ந்த ஆண்மைத் தன்மை என்று கருதிய தமிழர், அப் பகைவர்க்கு அப் போர்க் களத்தில் ஏதாவது ஒரு குறைவு வந்தபோது அவர்க்கு உபகரிப்பதுதான் அதினும் பேராண்மை யாகு மென்று துணிந்தார்.

> "ஆளையாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
> பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
> நாளை வாவெனக் கூறினன் நாகிளங் கமுகில்
> வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்"

என்னும் இராமாயணச் செய்யுள் இக் கொள்கையினை யினிது விளக்கும்.

இலங்கையர்கோன் போர் களத்திற் படை யெல்லாம் இழந்து நிற்கின்றான். அப்பொழுது இராமன் தன் காதலியைப் பிரித்த வஞ்சகனாகிய அப் பகைவனிடத்தும் இரக்கம் வைத்து "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என அருளிக் கூறுகின்றான். இது 'பேராண்மை,' 'பெரும் வீரம்' என்று தமிழர் கருதினர். இப் பேராண்மையினும் மிக மிகச் சிறந்த பேராண்மை யொன்றுண்டு. அப் பெரும் பேராண்மை யித்தகைய தென்பதையும் நம்மவர் ஒருவாறு உணர்ந் திருந்தனர். இப் பெரும் பேராண்மையினை நம் கவிச் சக்கரவர்த்தி

> "நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேருற
> மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ
> இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
> துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே"

என்று செய்யுளில் அழகுபெற அமைத்துக் கூறுகின்றார்.

செவ்வானம்போல் செக்கச் சிவந்து தோன்றுகிறது பயங்கரமான பகைவரது போர்ப் பெருங்களம். அக் களத்திலே அதி பயங்கரமாக நெருப்பைக் கக்கி வரும் பெரும் படைக்கலமொன்று வீரனது மார்பிற்கு நேராக வருகின்றது. எனினும் வீரனது நெஞ்சு பட பட வென்று பறையடிக்கவில்லை. கை கால்கள் ஒரு சிறிதும் நடுங்கவில்லை.



மனோ தைரியம் அதிகரிக்கின்றது. வீரன் செயற்கரும் சாகசச் செயல்களைச் செய்துகொண்டே நிற்கின்றான். இத்தகைய வீரமும் ஓர் வீரம் அன்று எனக் கம்பன் துணிகின்றான். ஆனால் உண்மையான உத்தமமான ஈடும் எடுப்பும் இல்லாத வீரம் எது?

> "இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
> துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே"

என்பதுவே கவிச் சக்கரவர்த்தியின் விடை.

போர்ப் பறை முழங்காத சமாதான காலத்தில்— போர் வெறி பெறாத அமைதி நிலையில் மரணமே வரினும் பொருளெலாம் இழப்ப நேரினும் இவர் அறம் துறந்தாரில்லை! இவர் தருமத்தின் மணிக் கொடி தாங்கி நின்றார்! என்று சொல்லப்படுவதுதான் வீரம் என்பது. இதுவே சூரத்தனம். இதுவே வீரத்திரு. இது கம்பனது கதாநாயகனாகிய இராமனது தனிப் பெருங் குறிக்கோளாகக் காட்டப்படுகின்றது. இதனையே **சாத்வீக வீரம்** என்றும் **சத்யாக்ரக வீரம்** என்றும் நவீன நல்லறிஞர் கூறுவர்.

* * *

இம் மெய் வீரத்தின் முன் அரக்கரது போர் வீரம் பேடித்தனமாகவே இராமனது மனக் கண் முன் தோன்றுகிற தென்று கம்பர் காட்டுகிறார். தன் மேல்வந்து போர்செய்து வருத்தப்படுத்தும் போது அதனைப் பொறுத்துக் கொள்ளும் வலிமை சத்யாக்ரகிகளைப் போன்ற உண்மைப் போர் வீரர்களுக்கே உண்டென்பது உண்மையே. எனினும் பகைவர்மேற் சென்று வருத்தப்படுத்தும் தூராக்கிரமமும் போர் வீரர்பாற் காணப்படுகின்றது. ஆனால் சத்யாக்ரக வீரனோ

> "இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்"

என்னும் பெருங் கொள்கையோடு அஹிம்ஸா மூர்த்தியாய் விளங்குகிறான்.

* * *

போர் வீரனது வீரத்தினும் சத்யாக்ரக வீரமே சாலச் சிறந்ததாகும்.

> "எத்துணை அவர்விழி யெரியுறச் சிவக்கும்
> அத்துணை நம்விழி அலர்ச்சிபெற் றிலகும்"

என்றவாறு எவ்வளவு தூரம் பகைவரின் விழி, வெஞ்சினத்தால் ஜ்வலிக்கின்றதோ அவ்வளவு நமது விழி மகிழ்ச்சியில் மலர்ச்சி பெறு

தல் வேண்டும். சினத் தீயை மகிழ்ச்சியாலும் பகைத் தீயை அன்பினாலும் வென்று வலியழித்தல் வேண்டும். சதையைத் துண்டு துண்டாக வெட்டிய போதிலும் சித்ரவதையே செய்த போதிலும் சத்யாக்ரகி அருள் அறத்தினின்றும் அணுவளவும் பிறழாது தைரியமாகவும் சந்தோஷமாகவும் துன்பத்தை யேற்றுக் கொள்ளுகின்றான். அவன் வைதாரையும் வாழ்த்துவான். அடித்தாரையும் ஆசிகூறி மகிழ்வான். உதைத்தவருக்கும் கால் நோகுமே ஐயோ! என்றிரங்கிக் கருணை பொழிவான் மலை கலங்கினும் நிலை கலங்காத நெஞ்சமோடு அருள் நெறி பிடித் தொழுகுவான்.

*　　　*　　　*

......................................"நடு
வான கருமங்கள் செய்தலும்—உயிர்
யாவிற்கும் நல்லருள் பெய்தலும்—பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதினும்—தனது
உள்ளம் அருகில் நெகுதலும்"

உத்தம சத்யாக்ரக வீரனது உயர்ந்த குறிக்கோளாகும். இத்தகைய சத்யாக்ரக வீரர்களில் ஒருவரான கிறிஸ்து பெருமானை,

"பொல்லாத யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்து வாய்மதமாச்
சொல்லாத நிந்தைகளைச் சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம் நம் ஈசன் பொறுத்திருந்தார்" என்றும்,

"வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காத் தன்னுயிரை
எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன் .
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்வர் இருவரொடும் கல்வாரி நோக்கினர்"

என்றும் ஒரு செந்தமிழ்க் கவிஞன் வாயார மனமார வாழ்த்தியுள்ளான். அவ்வண்ணமே இந் நாளிற் கிறிஸ்துவாக விளங்கும் சத்யாக்ரக மூர்த்தியான காந்தி யடிகளை நாமும்

"இன்னாத பிறர்க்கெண்ணான் பாரதநாட்டிற் கிரங்கி யிதயம் நைவான்
ஒன்றொன் றெவருமிலான் உலகமெலாம் ஒருயிரென் றுணர்ந்த ஞானி"!

என்னும் புதுமைக் கவி மலர்கொண்டு போற்றிப் புகழ்வோமாக.



# ஆசிரியர் குறிப்புகள்.

## பத்திரிகைகளின் பாடு

இந்தியாவின் அபிவிருத்திக்கு அநேகம் பத்திரிகைகள் சுதேசப் பாஷைகளிலும் உண்டாக வேண்டுமென்று எத்தனையோ வருட காலங்களாக எத்தனையோ தேச பக்தர்கள் உருகத்துடன் பிரசங்கித்து வேலை செய்ததின் பயனாக, இன்று சில பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. அவைகள் நாட்டின் நன்மைகளை நாலுவழிகளில் நாடி உழைத்துக்கொண்டிருக்கின்றன. சுதேச முன்னேற்றத்தை விரும்பாத எந்தச் சுதேசப் பத்திரிகைகளும் இருக்காது அப்படித் தப்பித் தவறி தேசத் துரோகம் செய்யும் பத்திரிகைகள் இருக்குமானால், அவைகளை நஞ்சென்றே சொல்லல்வேண்டும்.

பத்திரிகைத் தொழில் புனிதமான தொழில்—பரோபகாரத் தொண்டு—தேச சேவை என்றே கூறலாம். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் முதலியவைகளைப் போதிக்கும் பத்திரிகைகளைப் பற்றி எவ்வாறு புகழ்வது? தேசீய, மத, சமூக, பாஷா, பொருளாதார முதலிய சீர் திருத்தங்களையும் விடுதலைகளையும் உபதேசித்து அவற்றிற்காகப் பாடுபடும் பத்திரிகைகளின் பெருமையே பெருமை.

சென்ற ஐரோப்பியப் பெரும் போரில் பிரிட்டன் தேசம் வெற்றியடைவதற்குப் பத்திரிகை அரசராய் விளங்கிய லார்டு நார்த் கிளிப் என்பவரும் முக்கியஸ்தர்களில் ஒருவர் என்பதை எவர் மறுக்க முடியும்? இந்த ஐரோப்பிய யுத்தத்தின் பொழுது, யுத்த அரங்கங்களையும் சைனியங்களையும் பார்வையிட்டு உண்மை விஷயங்களைத் தங்கள் பத்திரிகைகளின் மூலம் இந்தியருக்கு அறிவிக்குமாறு, இந்தியாவிலிருந்து சில இந்தியப் பத்திராதிபர்களை அரசாங்கத்தார் ஐரோப்பாவிற்கு அழைத்துச் சென்றதை இப்பொழுது ஞாபகப்படுத்துகிறோம். கல்கத்தா "மாடேன் ரெவியூ" பத்திராதிபர் பாபு ராமானந்த சாட்டர்ஜி அவர்களை ஸ்விட்ஜர்லாண்டு தேசத்திலிருக்கும் சர்வ தேச சங்கத்தார் அழைத்துத் தங்கள், சங்க நடை முறைகளைக் கவனிக்கும்

படி சமீப காலத்தில் செய்ததை வாசகர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறோம். பத்திரிகைகளின் அருமையையும் ஆற்றலையும் அந்தஸ்தையும் அறிந்ததாலல்லவா பத்திராதிபர்களுக்கு உலகமெங்கும் விசேஷ மரியாதை.

நமது அடிமை நாட்டில் வெகு கஷ்ட நஷ்டங்களிடையில் அநேகம் பத்திரிகைகள் உண்டாகி மாண்டு மறைந்து விட்டதென்றாலும், இப்பொழுது சில பத்திரிகைகளே இருந்து வேலை செய்து கொண்டு வருகின்றன. நமது நாட்டின் விஸ்தீரணத்திற்கும் ஜனப் பெருக்கத்திற்கும் இச் சில பத்திரிகைகளும் மாசிகைகளும் போதவே போதாது. இன்னும் எத்தனையோ உதிக்கவேண்டும்.

இது இவ்வாறிருக்க, நம் நாட்டில் இன்று தேசீய இயக்கம் காட்டுத்தீ மாதிரியாக எங்கும் பரவிக்கொண்டு வருகிறது. உண்மைப் பத்திரிகைகளெல்லாம் இதற்கு உதவியாகவே யிருக்கின்றன. ஜனங்களுக்கு என்ன வேண்டுமென்றும் அதற்குச் சர்க்கார் என்ன செய்ய வேண்டுமென்றும், அநேக உண்மைகளையும் குற்றங் குறைகளையும் சீர்திருத்தங்களையும் நல்ல பத்திரிகைகள் எப்பொழுதும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும். பத்திரிகைகள் எத்தனையோ அரசாங்கங்களையும் அமைச்சர்களையும் ஆட்டி வைக்கும் சக்தி வாய்ந்த ஆயுதம். பட்டாக் கத்திகளுக்கும் பீரங்கிகளுக்கும் அஞ்சா நெப்போலியன் சக்கிரவர்த்தி, பத்திரிகைகளைக் கண்டு அஞ்சி நடுங்கியதன் மர்மமென்ன? லார்டு ரிப்பன் எங்களப்பன் என்று இந்தியர்களால் புகழப் பெற்ற கவர்னர் ஜெனரலான லார்டு ரிப்பன் அவர்கள் பெரிதும் மதித்துத் தினந்தோறும் வாசித்து வந்த கல்கத்தா 'அமிர்த பஜார் பத்திரிகை'யின் பெருமை யென்ன? உண்மை என்ன? அதன் அரிய ஆசிரியர் பாபு ஷிஷிர் குமார் கோஷ் அவர்களின் கௌரவமென்ன! உயர்ந்த பத்திரிகாசிரியர்களான பாபு கிரிஸ்டோதாஸ் பால் அவர்களையும் பாபு கிரிஸ் சந்திர கோஷ் அவர்களையும் வங்காளம் என்றுமே மறக்காது "சுதேச மித்திரன்" ஸ்தாபகர் தேச பக்தர் ஸ்ரீமான். சுப்ரமண்ய அய்யரவர்களையும், "இந்தியா"வின் பத்திராதிபரான தேசீயக் கவி அரசு ஸ்ரீமான் சுப்ரமண்ய பாரதியாரவர்களையும் மேலான பத்திரிகாசிரியர் களென்று தமிழுலகம் நன்கறியும். லண்டன் 'டெயிலி மெயில்" பத்திரிகை நிருபரான திரு. ஸ்லோஹோம் அவர்கள் இந்தியாவுக்கு வந்து, இப்பொழுது ஜெயிலிலிருக்கும் மகாத்மாவைச் சந்தித்துப்பேசி இந்தியாவின் உண்மையைத் தமது பத்திரிகை மூலம் உலகத்திற்குத் தெரிவித்திருக்கும் விஷயத்தைக் கவனியுங்கள். காந்தி யடிகளைக் கண்டுபேசுவதில் எவ்வளவோ விதிகளை ஏற்படுத்தியிருக்கும் அரசாங்கத்தார், ஒரு பத்திரிகா நிருபரை அவரிடம் சென்று சங்கதிகளை அறிந்து அவர் விஷயங்களைப் பிரசுரிக்க அனுமதி கொடுத்ததைப் பாருங்கள். இப் பத்திரிகைக்கு



எவ்வளவு செல்வாக்கு! உண்மைப் பத்திரிகைகளுக்கு எவ்வளவோ சக்தி! அவைகள் எவ்வளவோ நன்மைகள் செய்யக் கூடும்! தேசாபிமானத்திற்கும் பாஷாபிமானத்திற்கும் இந்தியாவில் ஆதரவு அதிகமாயிருப்பின், இங்குக் கணக்கற்ற நல்ல நல்ல நவம் நவமான பத்திராதிபர்கள் தோன்றி யிருப்பார்கள். நாடும் சுதேச பாஷைகளும் அடிமைப்பட்டு விட்டதால், நாம் என்ன எதிர்பார்க்க முடியும்?

இந்தியாவில் தேசீயப் பத்திரிகைகளை அடக்கிவிட்டால், தேசீயம் அப்படியே அடங்கிவிடு மென்று தப்பான அபிப்பிராயம் கொண்டு இராஜப் பிரதிநிதி அவர்கள் அவசர அச்சுச் சட்டத்தை உண்டாக்கி யிருக்கிறார். இந்தக் கொடுமையான சட்டம் அநேக பத்திரிகைகளின் உயிரை வாங்கிவிட்டது; அநேக பத்திரிகைகளைக் குற்றுயிராய்ச் செய்துவிட்டது; அநேக ஆசிரியர்களையும்—அதிபர்களையும் சிறைக் கனுப்பிவிட்டது. சர்க்கார் கேட்ட ஜாமீன் தொகைகளைக் கட்டாமல் மறுத்துத் தங்கள் பத்திரிகைகளை நிறுத்திய ஆசிரியர்களின் தைரியத்தைப் போற்றுகிறோம். சில பத்திரிகைகள் ஜாமீன் கட்டித் தங்கள் பத்திரிகைகளை நடத்திக்கொண் டிருக்கின்றன. இப் புதிய அவசர அச்சுச் சட்டம் உண்டானவுடன் எல்லா சுதேச பத்திரிகைகள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரே படியாக வெளி வராது நின்றிருக்குமானால், இச் சட்டம் என்றோ தொலைந்து போயிருக்கும்; பத்திரிகைத் தொழிலுக்கும் நமது தேசத்திற்குமே ஒரு பெரிய கௌரவம் ஏற்பட்டிருக்கும்; சர்க்காருக்கும் ஒரு நல்ல படிப்பினையா யிருக்கும்.

இந்தியர்களுக்குப் பத்திரிகைக ளில்லாவிட்டால் முக்கிய வர்த்தமானங்களை அறிய முடியவே முடியாதென்றில்லை. ஒருவன் ஒரு அயலூரிலிருந்து வந்தால், "என்ன அங்கு விசேஷம்?" என்று அவனை முதலாவது விசாரித் தறிவதே இந்தியர்களின் வழக்கம். காந்தி யடிகளாரைப் பிடித்துச் சிறையில் பாதுகாப்பில் வைத்த விஷயம் எவ்வளவு விரைவில் இந்தியா முற்றிலும் பரவியது! பத்திரிகைகளுக்கு முந்தியே இவ் விஷயம் தெரிந்துவிட்டது. ஒரு விஷயம் இந்தியாவின் ஓரிடத்தில் நடை பெற்றால், அது அதி சீக்கிரம் நமது தேச மெங்கும் பரவிவிடும். தற்சமயம் தேசமிருக்கும் நெருக்கடியைக் கவனித்தேனும், ஜாமீன் கேட்கப்பெற்ற பத்திரிகைகளேனும் நின்றிருக்க வேண்டும். இக் காரியத்திலும் பத்திரிகைகள் தவறி விட்டன. பம்பாயில் கூடிய பத்திராதிபர்கள் மகாநாடும் இதில் தவறி விட்டது. பத்திரிகைகளை அடக்குவதால் தேசியம் நின்றுவிடாது. அடக்குமுறைகளால் அநேக மடங்கு அதிகரிக்குமே யன்றி குறைந்தோ நின்றோவிடாது. அறிவு, உணர்ச்சி, அபிமானம், அன்பு, உண்மை, வீரம், தீரம், பக்தி, சுதந்திரம் முதலியவைகளைத் தடுப்பதோ அடக்கு

வதோ அடாத செய்கையாகும். அப்படி அடக்கு முறைகளால் அவைகளை அடக்குவதோ அழிப்பதோ முடியவே முடியாது.

இந் நாட்டில் அஞ்சா நெஞ்சுடன் தொண்டு செய்யும் உண்மைப் பத்திரிகைகள் இப்பொழுது வாழ்ந்திருக்க முடியாது. இப்பொழுது தேச நிலை பரிதாபம்! பரிதாபம்!! இந்தியாவில் பத்திரிகைகளின் பாடும் பரிதாபந்தான்!

## அடக்கு முறைகள்

அடக்கு முறைகளால் அவதிப்படாது எந்த நாடும் சுதந்திரம் பெறவில்லை யென்பது தேச சரித்திரங்கள் கண்டறிந்த உண்மையாகும்.

"தேவி! நின் ஒளி பெறுத தேயமோர் தேயமாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக் கலைகள் வேதங்களுண்டோ?
பாவியரன்றோ நின்றன் பாலனம் படைத்திலாதார்"

என்ற பேரெண்ணத்துடன் தேசத்தின்மீது பக்திகொண்டு உழைக்கும் தேசாபிமானிக ளெல்லாம் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைபட்டிருக்கிறார்கள். அவர்கள் பஞ்சமா பாதகங்களில் எதையேனும் செய்தார்களா? அல்லது வேறெவ்வித அநியாயம் செய்தார்களா? இல்லையே. அப்படி யிருக்க, தேச பக்தர்களைக் கொடுந் துன்மார்க்கர்களைப் போன்று சிட்சிப்பதை எந்த உண்மையாளரும் ஆமோதிக்க மாட்டார்கள். அரிய அறிஞர்களும் சிறந்த கல்விமான்களும், பெரிய பிரபுக்களும், பேர்போன பெண்மணிகளும், குற்றங்களைச் செய்தறியா வாலிப ரத்னங்களும் இப்பொழுது தண்டனை அடைந்து கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள் இதனாலல்லவா பாரதியார்,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுங் காண்கிலையோ?"

"எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதும் காண்கிலையோ?"

என்று பாடியிருக்கிறார்.

அரசாங்கத்தார் மூலமாகத்தான் சிறைக்குப் பிரத்தியேகமான கௌரவம் இன்று உண்டாகிக்கொண் டிருக்கிறது. சிறைச்சாலை இப்பொழுது தேச பக்தர்களின் தவச்சாலையாக மாறிக்கொண்டு வருகிறது. உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி யடிகளாரையும் மற்றும் அரும் பெருந் தலைவர்களையும் தேசத் தொண்டர்களையும் சிறையில் போட்டு வருத்துவதால் இவ் விடுதலைக் கிளர்ச்சி



நின்றுவிடாது. அடக்கு முறையால் கிளர்ச்சியின் வேகம் அதிகரிக்குமே யன்றி குறையாது என்று அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கிறோம். முன்பு ஒத்துழையாமை வெகு வேகமாயிருந்த காலத்தில் சுமார் 25,000 இந்திய மக்களைச் சிறைக்கனுப்பியதால், இந்தக் கிளர்ச்சியை அரசாங்கம் அடக்கிவிட்டதா வென்று நாம் கேட்கிறோம். அடிமை நாட்டில் வாழுவதே சிறையில் வாழ்வதாகும் என்று இந்திய சகோதரர்களுக்கு சொல்லத் தேவை யில்லை.

## வெள்ளை ஒளி

சஸ்திரப் பிரயோகங்களுக்கும், உடம்பினுள் ளிருக்கும் சில வியாதிகளைக் கண்டறிவதற்கும் கொஞ்ச காலத்திற்கு முன் கண்டு பிடிக்கப்பட்ட எக்ஸ்-ரே (X-Ray) என்ற ஒளியானது வைத்தியர்களுக்கு மிகவும் உதவியா யிருந்துவருகிறது. அமெரிக்கா, சிகாகோ நகரத்தில் தற்போது வசித்துவரும் ஸ்காட்லாண்டு தேசத்தவரான திரு. டாக்டர் கேமரன் என்பார், வியாதிகளை நுட்பமாகக் கண்டறிவதற்குத் தமது ஆராய்ச்சியின் பயனாக ஒரு வகை வெள்ளை ஒளி (White Ray)யை இப்பொழுது கண்டுபிடித் திருக்கிறார். வியாதி ஆரம்பமாவதற்கு முன்னரேயே இன்ன வியாதிதான் உண்டாகப் போகிறதென்று இச் சக்தி வாய்ந்த ஒளியின் மூலம் கண்டறிய முடியுமென்று அவர் அறிவிக்கிறார். இது எக்ஸ்-ரே (X-Ray)யைக் காட்டிலும் மகா சக்தி வாய்ந்தது. இந்த ஒளியின் மூலம் வைத்திய உலகத்திற்கே ஒரு பெரும் நன்மை ஏற்படப்போகிறது; வைத்தியர்களின் அபாரச் சிரமம் பெரிதும் குறையப்போகின்றது. இந்த உயரிய புதுமையைக் கண்டறிந்து உலகத்திற்கு உதவும் ஆராய்ச்சி மிக்க டாக்டர் நெடுங் காலம் வாழ்வாராக!

## உப்புத் தீர்வை

இந்தியாவில் உப்புக்கு வரி விதித்திருக்கிற மாதிரியாக உலகமெங்கும் கிடையவே கிடையாது. ஜப்பானிலோ கைத் தொழில், விவசாயம், சுரங்கம் முதலியவைகளின் சம்பந்தமாகத் தேவையாயிருந்தால், சாதாரணமாய் விற்கும் விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கே உப்பை விற்கிறார்கள். மனிதர்களுக்கு மட்டுமல்ல; ஆடு, மாடு, நாய், குதிரை முதலிய வீட்டு மிருகங்களுக்கும் சில மரங்களுக்கும் உப்புத் தேவையா யிருக்கிறது. உப்பு வரி விதித்தால், மானிடர்களுக்கும் மிருகங்களுக்கும் மரஞ் செடிகளுக்கும் வரி விதித்ததாகவே கருதப்படும் இந்தியாவைக் காட்டிலும் இங்கிலாந்தில் ஏன் ஒவ்வொருவருக்கும் அதிகமான உப்புத் தேவையா யிருக்கிறதென்றால், சில புதிய கைத் தொழில்களில் உப்பு உபயோகப்படுகிறது. கடல் சோப்

புச் செய்தல், வெள்ளிமுலாம் பூசுதல், பனிக் கட்டி செய்தல், தோல் பதனிடுதல், வெளுப்பதற்கேற்ற எண்ணெகள் செய்தல், புகையிலைப் பாடம் செய்தல், பெரிய மர உத்திரங்கள், உருக்கு முதலியவைகளைக் காப்பாற்றி வைத்தல் முதலிய வேலைகளுக்கு உப்பு வேண்டியிருக்கிறது.

ஆகையால், இந்தியச் சர்க்கார் இது விஷயத்தில் பிரத்தியேகக் கவனம் செலுத்தி, இந்த அனாவசியமான வரியைத் தள்ளிவிட்டு இந்திய மக்களுக்குச் சகாயம் செய்வார்களாக. இதில் பிடிவாதமாயிருக்கும் பட்சத்தில், இனியும் எத்தனையோ வரி போராட்டங்கள் ஆரம்பிக்குமென்று எண்ணத்தான் வேண்டியிருக்கிறது.

## இந்தியப் பெண்களது விழிப்பு

நமது தேசத்தில் பெண்கள் எப்படியோ அடிமையாய்ப் போய்விட்டதால், சில வருட காலமாக ஆண்களிடம் பெண்களை உயர்த்துமாறு நாட்டின் நானா பக்கங்களிலிருந்தும் அறிஞர் கூறிக்கொண்டு வந்தார்கள். பெண்களுக்கு வேகமான முன்னேற்றம் ஏற்படவில்லை. பல தேசாபிமானிகளும் பல சீர்திருத்தக்காரர்களும் பெண்களிடையில் பிரச்சாரம் செய்து, அவர்களில் சிலருக்குச் சிந்தனா சக்தியை உண்டாக்கியதன் பயனாக இங்கு மாதர் இயக்கம் தோன்றியிருக்கிறது. நமது நாட்டிற்குப் பெண்கள் உயர்வு புதியதன்று

1917-ம் வருஷத்தில் சென்னையில் ஸ்ரீமதி. ஜீனராஜ தாசரால் ஏற்படுத்தப்பெற்ற பெண்களின் இந்தியச் சங்கமானது இன்று இந்தியாவின் பல பாகங்களிலும் பரவி, 72 கிளைகளைக்கொண்டு சுமார் 4.000 அங்கத்தினர்களுடன் கல்வி, சமூகம், அரசியல் முதலியவைகளில் வேலை செய்துகொண்டிருக்கிறது இச் சங்கம் படித்த பெண்களுக்கே உணர்ச்சியையும் விழிப்பையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. மகாத்மா காந்தியடிகளின் உபதேசங்களாலும் இந்தியப் பெண்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகியிருக்கிறது.

சுதேச இயக்கம் தோன்றிய காலத்திலும் ஒத்துழையாமைத் தீவிரமாக நிகழ்ந்த தருணத்திலும் இத்தனைப் பெண்கள் ஈடுபட்டு வேலை செய்யவில்லை. இதற்கு முன் எந்தப் புதிய இயக்கங்களிலும் மாதர்கள் இவ்வளவு அதிகமாய் ஈடுபட்டு வேலை செய்து துன்பங்கள் அனுபவித்தது கிடையவே கிடையாது. உப்புச் சட்ட மறுப்பு ஏற்பட்ட பின்னரே அநேகம் மாதரசிகள் தேசீயத்தில் பிரவேசித்து மூழ்கிக், தேசீய வெறிகொண்டு நிற்கிறார்கள். இவர்களிடம் இப்பொழுதுதான் பண்டை வீர மாதாக்களின் வீரம் பொங்கிப் புறப்பட ஆரம்பித்திருக்கிறது. உப்புக் காய்ச்சுதல் முதலியவை போன்ற சட்ட மறுப்பைச் செய்யப் பெண்கள் முன் வந்துவிட்டார்கள். மதுபானக் கடை விற்பனை, அயல் நாட்டுத் துணி விற்பனை முதலியவைகளை மறி



யல் செய்ய முன் வந்துவிட்டார்கள். பொதுக் கூட்டங்களில் பேச முன் வந்துவிட்டார்கள்; பொதுக் கூட்டங்களுக்கும் பொதுச் சங்கங்களுக்கும் தலைமை வகிக்க முன் வந்துவிட்டார்கள். தொண்டர் படையிற் சேர முன் வந்துவிட்டார்கள்; போலீஷ் தாக்குதல்களையும் லட்சியம் செய்யாது தேசத் தொண்டு செய்ய முன் வந்துவிட்டார்கள். அநேக இடங்களில் மாதர்கள் செய்யும் வேலைகளோ அதிகம் அதிகம், ஆனந்தம் ஆனந்தம். இப்பொழுது தமிழ் நாட்டுக் கமிட்டிக்குத் தலைமைப் பதவி வகிப்பது யார்? மதுரை டாக்டர் அருள்மணி பிச்சைமுத்து அம்மாள் அவர்களே. தேசியத்தில் தீவிரமாய்ப் பாடுபட்டதால், இந்தியாவின் கவியரசி சரோஜனி தேவியார், அவரது சகோதரர் மனைவி ஸ்ரீமதி. கமலா தேவியார், இன்னும் ஸ்ரீமதிகள் ருக்மணி அம்மாள், துர்க்கா தேவி, ஊர்மிளா தேவி முதலியவர்கள் இன்று சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

உலகமே மாறுதல் அடையும் காலம் வந்துவிட்டது. இனிமேல் மாதர்கள் மூலையில் கிடந்து நல்ல காற்றுக்கூடக் கிடையாது தவித்துக் கொண்டிருக்க முடியாது. காலச் சக்ர வேகத்தின் சக்தியோ அளவிடாத அபாரமானது. பழக்க வழக்க ஒழுக்கங்களும் சமூக விதிகளும் தேசச் சட்டங்களும் மனித வர்க்கத்தாருக்கு உபயோகமாயிருக்கும் பொருட்டு ஏற்பட்டவைகளேயன்றி, அவைகள் மனிதர்களை அடக்கவோ, அடிமையாக்கவோ, அழிக்கவோ ஏற்பட்டவைகளல்ல என்பதை ஒவ்வொருவரும் நன்கு அறிதல் வேண்டும். தேச விடுதலையில் பாடுபடுவதற்குப் பெண்களும் எவ்வளவு உபயோகமுள்ளவர்களாயிருக்கிறார்கள்!

தேசீய இயக்கமே, இந்தியப் பெண்ணுலகத்தின் மனப் போக்கை மாற்றி அவர்களை விழிக்கும்படி செய்திருக்கிறது. நமது சகோதரிகள் தங்கள் நிலையை நன்குணர்ந்து, விழிப்புடனும் தீவிரமாகவும் வேலை செய்வதால், அவர்கள் இழந்துபோன பண்டை அந்தஸ்தையும் சகல உரிமைகளையும் மறுபடியும் பெற்று உயர்ந்துவிடுவார்கள் என்று பெரிதும் நம்புகிறோம். பெண்ணுலகு வாழ்க வாழ்க!

## இங்கிலாந்தில் இரு பெரிய பத்திரிகைகள்.

அமெரிக்காவில் வெளிவரும் தினசரிப் பத்திரிகைகள் யாவற்றிலும், நியூ யார்க் (New York) நகரத்தில் மாலையில் வெளியிடப்படும் "ஈவினிங் ஜர்னல்" (Evening Journal) என்ற பத்திரிகையே அதிகமான பிரதிகளை வெளியிடுகின்றது. லண்டனில் 'டெயிலி மெயில்' (Daily Mail) என்ற தினசரிப் பத்திரிகை 20 லட்சம் பிரதிகளை வெளியிட்டு இதுவே உலகில் பெரிய பத்திரிகையாக விருந்து வந்தது.

ஒரு சாதாரணப் பத்திரிகையாயிருந்து, தொழிற் கட்சியின் ஆதரவைப்பெற்று வெளிவரும் "டெயிலி ஹெரால்டு" (Daily Herald) என்ற தினசரிப் பத்திரிகையானது 30 லட்சம் பிரதிகளை வெளியிட்டு, இன்று உலகில் இதுவே பெரிய பத்திரிகையாக விளங்குகிறது. இப்பொழுது பிரிட்டனில் தொழிற்கட்சி அரசாங்கம் நடைபெறுவதால், இக் கட்சியைச் சேர்ந்த இந்தப் பத்திரிகைக்கு அதிக செல்வாக்கிருக்கின்றது. சோவியத் ருசியா தேசத்திலும் "டெயிலி ஹெரால்டு" உலாவுகிறதாகத் தெரிகிறது. சிறையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் நமது மஹாத்மா காந்தி அவர்களிடம், இதன் விசேஷ நிருபராகிய ஜார்ஜ் ஸ்லோஹோம் அவர்கள் சிறைக்குள் சென்று கண்டு பேசி விஷயங்களை அறிந்து இப் பத்திரிகைக்குச் செய்திகளை அனுப்பினாரென்றால், இப் பத்திரிக்கையின் உண்மையான செல்வாக்கை வாசகர்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

நமது அடிமை நாட்டில் எத்தனையோ பெரிய பத்திரிகைகள் ஆதரவற்று அந்தஸ்துக் கெட்டு அடியில் கிடக்கின்றன. நாட்டாருக்கு அதிகமாகப் பத்திரிகாபிமானம் கிடையாது. பத்திரிகைகளை வளர்ப்பது தேசமக்களின் கடமையாகும். தேசாபிமானமும் பாஷாபிமானமும் பத்திரிகாபிமானமும் கொண்டு பத்திரிகையை நடத்தியவர்களில் எத்தனை பத்திரிகை ஆசிரியர்கள் ஆதரவின்றி நஷ்டமடைந்து கெட்டார்கள்; அவர்களைச் சார்ந்த எத்தனைக் குடும்பங்கள் கெட்டன! எத்தனைப் பிரசுரர்கள்— ஆசிரியர்கள் இன்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள்!! தேசாபி விருத்திக்காக உழைக்கும் பத்திராதிபர்களைக் கஷ்டப்பட விடுவது மகா கேவலம். தேசத்திற்கே அவமானம்.

தேசாபி விருத்திக்குழைக்கும் பத்திரிகைகளை நாட்டு மக்கள் அவஸியம் ஆதரிக்க வேண்டும். இங்கிலாந்தைப் பாருங்கள்; அமெரிக்காவை நோக்குங்கள்; ஜப்பானைக் கவனியுங்கள்!

## தேசீயக் கைதிகள்

இந்தியா தேசமே விழித் தெழுந்து சாத்வீகச் சத்யாக்ரகப் போர் செய்கிறதென்று சொல்லும்படியாக அவ்வளவு இந்திய மக்கள் தேச விடுதலைக்காக உழைத்துக்கொண் டிருக்கிறார்கள். இதனால் கற்றாரும் கல்லாதாரும் பணக்காரரும் ஏழைகளும் வாலிபரும் வயோதிகரும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் தண்டிக்கப்பட்டுச் சிறையிலிருக்கிறார்கள். சிறையில் கைதிகளின் அந்தஸ்து கல்வி, வாழும் முறை முதலியவைகளைக் கவனித்து ஏ., பி., ஸி. அதாவது 1, 2, 3 வகுப்புகளாக அவர்களைப் பிரிக்கவேண்டுமென்பது சர்க்காரின் புதிய சீர்திருத்த விதி. இப்படியெல்லாம் ஒழுங்குகளிருக்க, விசாரணை செய்து தீர்ப்புச் சொல்லும் அதிகாரிகள் இதில் ஒன்றையுமே கவனியாது அவர்களிஷ்டம்போல் அரசியல் கைதிகளை எந்த வகுப்பிலோ தள்ளிவிடுகிறார்கள். எந்த நாகரீக அரசாங்கமும் இச் செய்கையை ஒப்புக்கொள்ளாது.



அரசியல் கைதிகள் எவ்வாறு தண்டனையடைந்தார்களென்று யோசித்தால், தங்களைத் தாங்கிப் போஷிக்கும் தங்கள் தாய் நாட்டை அவர்கள் அதிகமாக நேசித்து அதன் விடுதலைக்கு அபாரமாக உழைத்ததே குற்றம் என்பது அரசாங்கத்தாரது அபிப்பிராயம். உண்மையாகச் சொல்லுமிடத்து, அவர்கள் அஹிம்ஸா தர்மத்தில் பெரிதும் நம்பிக்கை கொண்டவர்கள்; ஒழுங்கான சட்ட திட்டங்களுக்கும் சன்மார்க்க ஒழுக்கங்களுக்கும் அடங்கி நடக்கக் கூடியவர்கள்; தேச பக்தர்கள் என்றால் அரசாங்கத்தின் குற்றங் குறைகளைச் சீர்திருத்தம் செய்து ஒழுங்குபடுத்த உழைப்பவர்களே. அறிஞர்களும், பண்டிதர்களும், பணக்காரர்களும் அந்தஸ்து வாய்ந்தவர்களும் துன்பங்களை பட்டறியாச் சுகவாசிகளும், பலவித இன்பங்களையனுபவிக்கும் போகிகளும் தற்போது தேச பக்தியின் காரணமாக ஆயிரம் ஆயிரமாகச் சிறையிலிருக்கிறார்கள்.

நியாயாதிபதிகள் எங்கோ இரண்டு மூன்று பேர்களை முதல் வகுப்புக் கைதியாக அனுமதித்து, இன்னும் சிலரை 2-வது வகுப்பில் சேர்க்கிறார்கள். ஆனால் அதிகமான பேர்களை 3-வது வகுப்பிற்குத் தள்ளிவிடுகிறார்கள். தேசாபிமானிகளை—தேசத் தொண்டர்களை—சத்திய நெறியில் நின்று அஹிம்ஸாப் போர் புரிந்த உண்மை வீரர்களை—சாந்த சீலர்களை அயோக்கியக் குற்றவாளிகளைப் போன்று கீழான 3-வது வகுப்பில் சேர்ப்பது அழகுமன்று, அறமுமன்று. தேசீய ஊழியர்களாகிய இவர்களின் ஒப்பற்ற நடத்தையைக் கருதியேனும் அவரவர்களுக்கு ஏற்ற வகுப்புக்களில் பிரித்து வைப்பது நியாயமும் முறையுமாகும். இதைத் தவிர்த்து விசாரணை உத்தியோகஸ்தர்கள் உயர்ந்த வகுப்புகளில் சேர்த்திடினும், மேலதிகாரிகள் சில சமயங்களில் தாழ்ந்த வகுப்புக்களுக்குத் தள்ளிவிடுவதுமுண்டு. சில விடங்களில் சிற்சில சமயங்களில் சிற்சிலரிடம் சிறையதிகாரிகள் கடுமையாகவும் நடந்துகொள்கிறார்கள்.

சிறை சம்பந்தமான இத்தகைய குற்றங் குறைகளையகற்றுவதற்குத் தலைவர்களடங்கிய கூட்டத்தார் தூது சென்று சென்னை அரசாங்கத்தாரிடம் மனுவும் கொடுத்திருக்கிறார்கள். இதனை அரசாங்கம் நன்கு கவனிக்க வேண்டும். நியாயாதிபதிகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் அரசியல் கைதிகளனைவரையும் 2-வது வகுப்பிற்குக் குறைந்த

வகுப்பிற்கு அனுப்பாதிருக்க வேண்டுகிறோம். இதுவே நியாயமாகும். சிறை யதிகாரிகளும் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டுகிறோம். அரசாங்கம் தனது மனப்பான்மையை மாற்றித் தேசிய வாதிகளுடன் கண்ணியமாய் நடந்துகொண்டால், இந்த மாதிரியான குறைகள் உண்டாக இடமே யில்லை. சர்க்காரின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்குத் தக்கவாறு உத்தியோகஸ்தர்கள் நடக்கவேண்டி யிருப்பதால், இவ் வுத்தியோகஸ்தர்களின் மனதும் அடிமைப்பட்டு விடுகிறது. நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு அரசாங்கம் இனிமேலேனும் கௌரவமாயும் தாராளமாயும் நன்னோக்கத்துடனும் நடக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

## அநாமதேய அறிக்கைகள்

ஏதேனும் பிரசுரங்கள் அச்சிட்டால் அச்சுக்கூடத்தின் பெயரும் அயலியம் அச்சிடப்பட வேண்டுமென்பது அச்சுச் சட்டத்தின் விதி. பல மொட்டை அறிக்கைகள் இந்தியாவின் நாலு பக்கங்களிலும் பரவி வருகிறதாக அறிகிறோம். தமிழிலும் இம் மொட்டைகளை நாமே பார்க்க நேர்ந்தது. இவைகள் எவரால் எழுதப் பட்டதென்றும் எங்கு எவரால் அச்சிடப்பட்ட தென்றும் இவ் வறிக்கைகளில் காணப்படவில்லை. இவைகளை யார் வழங்குகிறார்களென்று கவனித்துப் பார்த்தால், அரசாங்க அதிகாரிகளே வினியோகிப்பதாகத் தெரியவருகின்றது. அவசர அவசரமாய் அவசர அச்சுச் சட்டத்தை உண்டாக்கியிருக்கும் அரசாங்கமே முதலில் தனது அச்சுச் சட்டத்தை மீறியிருக்கிறது. அதை அரசாங்கத்தினிடம் எவர் எப்படி கேட்கப் போகிறார்கள்? கேட்டாலும் அது என்ன சொல்லப் போகின்றது? மௌனமே சாதிக்கப் போகின்றது. பயிருக்குப் பாதுகாப்பாயிருக்கும் தோட்டத்தின் வேலியே தோட்டத்தி னுள்ளிருக்கும் பயிரை மேய்வதென்றால், இதைப்பற்றி என்ன சொல்வது! இப்படிச் செய்வது அரசாங்கத்திற்கே அவமானம்! சட்டம் என்பது யாவருக்கும் பொதுவானது. அரசாங்கம் தனக்கென்று தனியாக வேறொரு சட்டத்தை உண்டாக்கி யிருக்கிறதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. உலக வல்லரசுகளில் ஒன்றாய் இன்று விளங்கும் அரசாங்கம் இந்தச் சிறிய விஷயத்திலும் வெகு அற்பமாய் நடந்துகொள்ள இடம் கொடுப்பது கேலிக்கிடமான செய்கையேயாகும்.

“இந்தியாவின் கடன்,” “நிலவரி,” “உப்பு வரி,” “இந்தியர்கள் நாளுக்கு நாள் ஏழையாகிக்கொண்டு வருகிறார்களா?” “மது பானத்திலிருந்தும் லாகிரி வஸ்துக்களிலிருந்தும் கிடைக்கும் வருமானம்” என்ற தலையங்கங்கொண்ட மொட்டைப் பிரசுரங்களே இப்பக்கங்களில் காணப்படுகின்றன. இவைகளை எழுதி வெளியிட்டவரின்



பெயரைத் தெரிவிக்காத பேடித் தனத்தைப் பற்றி என்ன எழுதுவது? கையெழுத்தில்லா அநாமதேயக் கடிதங்களையும் பிரசுரங்களையும் எழுதி வெளியிடுபவர்கள் கோழை மக்களே. நாட்டில் இவ் வகையான பேர்வழிகளுக்குக் கண்ணியமும் கௌரவமும் கிடையாது. அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கும் எழுதும் எழுத்துக்களுக்கும் மரியாதையும் கிடையாது. நியாயமாக இருந்தால்தானே தைரியமாய்ப் பகிரங்கமாக வந்து வாதாடுவார்கள். பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் பக்தர்கள் செயல் இவ்விதமிருக்கிறது! மொட்டை விண்ணப்பங்கள், மொட்டைப் பிரசுரங்கள், மொட்டைக் கடிதங்கள் முதலியவைகளை எழுதுபவர்களுக்கெல்லாம் இப்பொழுது இந்திய அரசாங்கம் வழிகாட்டியாக விருக்கிறதென்றும், ஆதரவு காட்டுகிறதென்றும் நம்ப வேண்டி யிருக்கிறது. இனிமேல் இம் முறையை அனுசரிக்கும் பேடிகள் தைரியங் கொண்டே நடமாடுவர். ஆயினும் என்ன? உண்மைக்கும் நியாயத்திற்கும் எதிரான இவைகள் சீக்கிரம் ஒளியாதிருக்குமோ?

இந்த யோக்கியதை யற்ற, ஒழுங்கற்ற அறிக்கைகளுக்குச் சமாதானம் சொல்லுவது படித்த எவருக்கும் எவ்வளவோ எளிது. கிராமங்களுக்குச் சென்று பார்த்தால், இத் தேசத்தைப் பிடித்து வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் வறுமையை உடனே அறியலாம். இந்தியாவின் விவசாயிகளோ இன்று 950 கோடி ரூபாய் கடன் பட்டுப் போதியபடி கல்வியின்றி வாழ்ந்து எவ்வளவோ சிரமத்துடன் வரிகளைச் செலுத்திக்கொண் டிருக்கிறார்கள். குடியை குடிக்கச் செய்து குடிகளைக் கெடுத்து, அதன் மூலம் பல கோடி ரூபாய் அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதை எவர் அறியாதவர்? தேசத்தின் பெயரால் கடன் வாங்கி இந்தியாவைக் கடன்கார இந்தியாவாக்கி, அக் கடன் தொகைகளின் மூலம் அயல் நாடுகளிலிருந்து அநேக சாமான்களை இறக்குமதி செய்து, அன்னிய நாட்டாரைச் செழிக்கச் செய்யும் அரசாங்கத்தின் போக்கைப் பற்றி என்ன எவ்வளவு எழுதுவது! அரசாங்கத்தின் பொறுப்பற்ற அறிக்கைகளையும் பேடித்தனமாக விடுத்த இவ்வித மொட்டைக் கடிதங்களையும் மறுப்பதற்கு ஒன்றல்ல இரண்டல்ல; இருபதல்ல; ஆனால், நூற்றுக் கணக்கான விஷயங்களைக் கூறலாம். அவைகளை யெல்லாம் இங்கு எழுதுவதென்றால், பத்திரிகை இடமே கொடுக்காது.

அரசாங்கத்தினால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றிப் பரப்ப வேண்டுமானால், “பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகள்” என்ற தலைப்பில் எழுதிச் சர்க்காரின் பெயரால் வெளியிடுவதை அரசாங்கத்தின் தாசாதி தாசர்கள் படித்து மகிழ்வார்கள். மற்றையோர்கள் அவைகளைப் பொருட்படுத்தாது, உண்மைக்கு மட்டும் மரியாதை செலுத்துவார்கள்.

இம்மாதிரி பேடித்தனமாகவும் மறை முகமாகவும் தங்களது சட்ட வரம்புகளைக் கடந்து, சக்தியற்ற, சாரமற்ற அறிக்கைகளைச் சர்க்கார் ஆக்கவும், ஆதரிக்கவும் போவதில்லையென்று இனிமேலேனும் பிரசுரித்துத், தனது கௌரவத்தை இழக்காதிருக்குமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## தேச பக்தியற்றவரென்று ஏளனம் செய்யேல்

இப்பொழுது எத்தனையோ இந்தியச் சகோதரர்கள் தேச பக்தி கொண்டு ஆவேசமாய் தேசிய வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உடல், பொருள், ஆவி மூன்றையும் தாய் நாட்டின் பொருட்டு அநேகர் தத்தம் செய்திருக்கிறார்கள். அப் பெரு மக்களுடைய தியாகத்திற்கும் தொண்டிற்கும் தேசப் பற்றிற்கும் எமது பிரிய வணக்கம். தேச நிலையறிந்து தேசத்திற்காக எவ்வளவோ உழைக்க விரும்பியும் சரியான சந்தர்ப்பம் கிடைக்காமல் எத்தனையோ உத்தம சிகாமணிகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்னை பாரத தேவியின் பாதாரவிந்தங்களில் தங்களுடைய எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யத் தயாராக விருந்தும், தங்களைப் பிடித்துப் பிணைத்து அமுக்கி வைத்திருக்கும் சுற்றுப்புற விஷயங்களாலும் சிக்கலான குடும்பச் சங்கதிகளாலும் அவர்களது வாழ்க்கைச் சீர்படாக் காரணங்களாலும் தங்களின் மிகப் பரிதாப நிலையை எண்ணி எண்ணி உளங் குழைந்து தன்னந் தனிமையில் கண்ணீர் விட்டுத் துன்புற்று, உறக்கத்திலும் நாட்டின் நன்மைகளை நாடி நாடி நலிந்து நன்றாய்த் தூங்காத அநேகம் இளஞ் சிங்கேறுகள் துடி துடித்துக் கொண்டு இருப்பதை நாம் நன்கு அறிவோம். எல்லாச் சகோதரர்களையும் ஒன்று சேர்த்து ஒரு காரியத்தைத் தேசத்தின் பெயரால் செய்யக் கட்டளையிடுவது சரியல்ல. அநேகர் பேச்சாலும், சிலர் எழுத்தாலும், சிலர் பணத்தாலும், சிலர் செல்வாக்காலும், இன்னுஞ் சிலர் தேகத்தாலும், மற்றும் பலர் பல வகைகளாலும் தேசத் தொண்டு புரியக் கூடும். அவரவர்கள் செயலுக்குத் தக்கபடியும், பயிற்சிக்குத் தக்கபடியும், விருப்பத்திற்குத் தக்கபடியும் சேவை செய்வார்கள். எழுதுவதில் திறமையற்ற பேசுவதில் வல்ல ஒருவரை வியாசம் எழுதும்படி சொல்லல் சரியல்ல. இதற்காகக் குறை கூறுவதும் முறையல்ல.

கால பேதத்தாலும் பலவீனமான குடும்பக் கவலைகளாலும் பலபேர் வெளிக் கிளம்பி வேலை செய்யாமல், உள்ளூரிலேயே அடக்கமாகத் தேச சேவை செய்துகொண்டிருக்கிறார்கள். "உலகம் பல விதம், பல நிலை" என்பதை எண்ணுங்கள். ஆகையால் ஒருவரைப் பார்த்துத் திடீரெனத் தேச பக்தியற்றவரென்று கூறுவதும், அவரை



ஏளனமாய்ச் சொல்வதும் குறைவாசப் பேசுவதும் கேவலப் படுத்துவதும் ஒழுங்கல்ல. எல்லா இந்திய மக்களும் தேச விடுதலைக்காக ஏகோபித்துத் தங்களது சுகங்களை மறந்து உயிரை வெறுத்து உழைக்கக் கூடிய காலம் விரைவில் வருகிறது.

## வேலையாட்களைத் துன்புறுத்துதல்

எத்தனையோ பேர்கள் தங்களின் தற்கால கஷ்ட நிலைமையை உத்தேசித்தே ஒரு எஜமானனுக்குப் பலவிதப் பணி செய்கிறார்கள். எஜமானனுக்குத் துரோகம் செய்யும் வேலைக்காரர்களும் கீழ்ப்படியா மோசக்காரப் பணியாளர்களும் ஒழுங்கற்ற ஏவலாளர்களும் சிலர் இருக்கிறார்கள். சில முதலாளிகள் தங்கள் வீட்டு வேலைக்காரர்களை மிகவும் குரூரமாகத் துன்பப் படுத்துவதாக அடிக்கடி பத்திரிகைகளின் மூலம் அறிகிறோம். சூடு போடுவது, பொசுக்குவது, கட்டி வைத்து அடிப்பது, பலமாய் உதைப்பது, செருப்பால் அடிப்பது, சவுக்கால் வீசுவது, சாட்டையால் அடிப்பது, கையில் கிடைத்தவைகளைக் கொண்டு எறிதல்—அடித்தல் முதலியவை போன்ற தண்டனைகளைக் கடுமையாக எஜமான்கள், அண்டி அடுத்து வேலை செய்து பிழைக்க வந்த எளியவர்களின் மீது விதிப்பது பாவம் பாவம். இனிமேல் திருந்தக் கூடிய திக்கற்ற ஏழை இளம் வாலிபர்களில் அநேகர் இம்மாதிரியான இம்சைகளில் சிக்கித் துன்புறுவதை நினைத்து அவர்களுக்காகப் பரிதாபப் படுகிறோம். சிறிய விஷயங்களிலும் வேலைக்காரர்களைக் கொடுமையாக நடத்திக் கஷ்டப்படுத்தும் எஜமான்கள் தங்கள் பணியாளர்களைத் தரித்திர நாராயணர்களென்று கருதி, அன்பு செலுத்தி அவர்களிடம் ஆதரவுடன் வேலை வாங்குமாறு வேண்டப்படுகிறதுமன்றி, தம்மிடம் வேலைக்கு வந்ததற்காக அவர்களை மனித இனத்தினின்றும் பிரித்துவிடுவது கூடாதென்று வெகுவாய்க் கேட்டுக்கொள்கின்றோம்.

## தடியடி தண்டப் பிரயோகம்

ஐயோ! இத்தேசத்தில் இதுவும் இத்தருணத்தில் எமது சகோதரர்கள்—தேசத் தொண்டர்கள் அனுபவித்துக் கொண்டு வரும் இன்னல்களை எண்ணியவுடன் மனம் பதைக்கின்றது, வாடுகின்றது, வருந்துகின்றது, உடைகின்றது, உருகுகின்றது, அசைகின்றது, ஆடுகின்றது, அப்படியே ஸ்தம்பித்து நிற்கின்றது. நாட்டின் விடுதலைக்காக உழைக்கும் இவர்களுக்கா—சாத்விகர்களான இவர்களுக்கா இவ்வித கையடி—தடியடி—தண்டப்பிரயோகம்—உதை—மிதி—விளார் வீச்சு—சவுக்கு அடி—சிறைவாசம்? இச் சாத்விக உரிமைப்போரில் அடிபட்டவர்கள் எத்தனை பேர்? காயம்பட்டவர்கள் எத்தனை பேர்? எலும்பு

ஒடிந்தவர்கள் எத்தனை பேர்? கைகால் முறிந்தவர்கள் எத்தனைபேர்? மண்டை உடைந்தவர்கள் எத்தனை பேர்? கணக்கில்லை. சர்க்கார் சாத்விகிகளைத் தாக்கி யடித்துத் துன்பப்படுத்துவது தகாது. நியாயத்தை— உரிமைகளை— சுதந்திரத்தை அடக்குவதற்கு எழும்பிய அரசாங்கங்களும் அமைப்புகளும் வீழ்ந்து மடிந்து ஒழிந்து மறைந்து மறந்து போனவைகள் பலவாகும். உலக சரித்திரமே இதற்கு இன்று சாட்சியாய் விளங்குகிறது.

இதுவரையில் அடியே பட்டிராத, துன்பங்களையே அடைந்திராத அவ்வளவு செல்வமாய் வளர்க்கப் பெற்ற— வாலிபர்கள்— கல்விமான்கள்— செல்வவான்கள்— எத்தனையோ வழிகளில் விற்பனர்கள்— அரும் பெரும் தலைவர்கள்— வீரர்கள்— தீரர்கள்— பக்தர்கள்— ஞானிகள்— வீடுகளை விளங்கச் செய்யும் கற்றறிந்த அன்பார்ந்த கோமளங்கள்— மிகமிகச் சிறுவர்கள்— சின்னஞ்சிறுமிகள் ஆகிய எல்லோரையும் தடியால் தாக்குவதுவும் அடிப்பதுவும் காயப்படுத்துவதுவும் நியாயமா என்று நமது தர்ம அரசாங்கத்தைக் கேட்கிறோம். இதில் அவர்களே நியாயாதிபதியாக விருக்கட்டும்.

இச்சம்பவங்களையெல்லாம் நேரில் கண்ணாரக் கண்டவர்கள் கண்ணீர் விட்டு இதைப்பற்றி உருக்கத்துடன் சொல்வது கல் நெஞ்சையும் கரையச்செய்யும். “இவர்களை இம்மாதிரியாகத் துன்புறுத்த வேண்டாம். வேண்டுமானால் இவர்களை அப்படியே அழித்துவிடலாம். கடவுளுக்காகவேனும் இரங்குங்கள்” என்று தேசீயத்திலே ஈடுபடா ஒருவர் கூறியிருப்பது, உண்மை தேச பக்தர்களை அப்படியே நிலைகலங்கச்செய்கிறது. இவ்வாறு அடிகளால் துன்பப் பட்டவர்களை ஸர். பட்டாணி அவர்களும் ஐதராபாத் சமஸ்தானத்து மந்திரி அவர்களும் பார்வையிட்டு மிகவும் வருந்தி, அவர்களிருந்த வைத்திய சாலைக்கும் பொருளுதவி செய்து, துன்பமடைந்திருக்கும் அவர்களுக்குச் சௌக்யத்தைக் கொடுக்குமாறு ஈஸ்வரனைப் பிரார்த்தனை செய்து விட்டுச் சென்றார்களென்ற போதிலும், நமது அதிகாரிகளின் மனம் மட்டும் மாறவில்லை.

அறிவு, அன்பு, கருணை, சாந்தம் முதலிய நல்ல அரிய குணங்களைக் கடவுள் அளித்திருந்தும் இந்த அதிகாரவர்க்கத்தார் மட்டும் இதற்கு மாறாக நடந்து கொண்டார்களென்று வருந்தாமலிருக்க முடியவில்லை.

சர்க்காருடைய முரட்டு முதலைப் பிடிவாதத்தால்— அதி அடக்குமுறையால் பல துன்பங்களைச் செய்திடினும், சாத்விகத்திலிருந்து இதுவரைக்கும் சற்றேனும் விலகாது சகிக்கவொண்ணாதத் துன்பங்களையும் பொறுமையாய்த் தாங்கிநின்று உறுதியுடனும் வீரத்துடனுமிருக்கும் இத் தொண்டர்களை வாயார வாழ்த்துகிறோம்; மனதாறப் போற்றுகின்றோம். அதனாலன்றோ “தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே” என்றார் நம் அருந்தமிழ் ஔவை பிராட்டியார்.



எத்தனையோ தொண்டர்கள் எத்தனையோ வழிகளில் அதிகக் கொடுமையாக இம்சிக்கப்பட்டாலும், அவர்களில் எவரேனும் இதுவரையில் சாத்வீகத்தில் தவறியதுண்டா? என்று நாம் அரசாங்கத்தைக் கேட்கிறோம். இனியும் எத்தனையோ பெரிய துன்பங்கள் அவர்களுக்கு வரப்போகின்றன. ஒவ்வொருவரும், அஹிம்ஸையில் வெற்றிபெற்ற ஏசுநாதரை எண்ணுவார்கள் பிரகலாதனை நினைப்பார்கள்; நாவுக்கரசரை நம்புவார்கள். மலை கலங்கினும் நிலை கலங்கிடா சாத்வீகத்தையும், அன்பு, அருள், வீரம், தீரம் முதலிய அரும் பெருங் குணங்களையும் ஆண்டவர் மேலும் அவர்களுக்கு அளிப்பாராக!

## சைமன் கமிஷன் அறிக்கை

எதிர் பார்த்த ஏமாற்றத்தை மெய்ப்பித்துவிட்டது.

## இலங்கையில் இந்திய மக்கள்

நமது இந்தியச் சகோதரர்கள் இலங்கையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறதைப்பற்றிச் சென்ற ஆண்டில் “பாரதி”யில் அடிக்கடி எழுதிக்கொண்டிருந்தோம். இலங்கை, இந்தியர்களால் வளம் பெற்றது இலங்கை, பண்படுத்தப்படுவதற்கும் அதிக வருமானம் கொடுப்பதற்கும் காரணம் இப்பொழுதும் இந்தியருடைய உழைப்பே. விரிக்கில், இது ஒரு பெரிய நீண்ட கதையாகும். இந்தியர்களுக்கு இதற்கு முன் இலங்கையரைப் போலவே சமமான ஓட்டுப் பாத்தியம் இருந்தது. டொனமோர் கமிஷன் இலங்கைக்கு வந்து விசாரித்து ஒரு அறிக்கையை வெளியிட்டது. டொனமோர் கமிஷன் சிபார்சுகள் இலங்கையிலிருக்கும் இந்திய மக்களுக்குப் பெரும் பாதகமாகவே யிருந்தது. சிங்களவரும் இக் கமிஷன் சீர்திருத்தங்களை ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். இந்தியர்களின் வாக்குரிமைகளுக்குச் சில தடைகளை யேற்படுத்திச் சிங்களவர்களை டொனமோர் கமிஷன் சிபார்சுகளை ஒப்புக்கொள்ளுமாறு கவர்னர் செய்தார். முதலில் இந்தியர்களது ஓட்டுரிமைகளைக் குறைக்கச் சில சூட்சிகள் செய்த போதிலும், இந்தியாது பெருங் கிளர்ச்சியில் இலங்கையில் 5 வருடம் வசித்த இந்தியருக்கே ஓட்டுரிமை உண்டென்று டொனமோர் கமிஷன் சிபார்சு செய்தது.

(1) சாஸ்வதமாய்க் குடியேறியதாக உறுதி மொழி கொடுக்க வேண்டும். (2) இலங்கைச் சர்க்காரைத் தவிர்த்து இதர சர்க்கார் உதவியைப் பெறக்கூடாது. (3) இலங்கையில் ஓட்டுரிமை அடைவதை முன்னிட்டுத் தங்கள் தாய் நாட்டுச் சர்க்காரின் சகல பாதுகாப்புகளையும் இழந்துவிடுவது. இந்த மூன்று நிபந்தனைகளையும் ஒப்புக்

கொண்டு படிக்கத் தெரியா இந்தியர்களுக்கு ஓட் சுதந்திரம் உண்டு என்று கவர்னர் செய்த சிபார்சுகள் இங்கிலாந்தில் ஒப்புக்கொள்ளப் பட்டவுடன் இலங்கை இந்திய மக்களும் இந்தியர்களும் கிளர்ச்சி செய்தார்கள். இதனால் 2, 3 நிபந்தனைகள் நீக்கப்பட்டன. இன்னும் இதில் சிலச் சில சிக்கல்களிருப்பதால், இதை முற்றிலும் நாம் திருப்திகரமாய் ஒப்புக்கொள்வதற்கில்லை.

இலங்கையில் எவ்வகைப் புதிய சீர்திருத்தங்கள் வந்தபோதிலும் இலங்கையிலிருக்கும் இந்தியர்களுக்குச் சம ஓட்டுரிமை கொடுப்பதாக 1921-ம் வருஷம் சிலோன் கவர்ன்மெண்டு இந்தியச் சர்க்காருக்கு வாக்குறுதி கொடுத்ததை இப்பொழுது ஞாபகப்படுத்துகிறோம். 5 வருடம் இலங்கையில் வசித்ததாகச் சர்க்காரிடம் ஒரு ரூபாய் செலுத்திச் சர்டிபிக்கெட் வாங்க வேண்டும். கல்வியும் வருமானமும் உள்ளவர்கள் இந்த அத்தாட்சி வாங்கவேண்டியதில்லையென்று ஒரு விதி யிருப்பதால், ஐரோப்பியர்கள் இலகுவில் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறார்கள். இதனால் ஐரோப்பியர்களனைவருக்கும் ஓட் பாத்தியம் உண்டாகிவிடுகிறது ஆனால் இந்த விதியின் மூலம் 100-க்கு 1 இந்தியன் தப்பினால் தப்பலாம். இதனால் அநேக இந்தியருக்கு ஓட்டுரிமை இல்லாமற் போகிறது. சர்டிபிக்கெட் தொல்லை முதலியவைகளெல்லாம் போய், இலங்கையில் சம உரிமை இந்தியா பெற்றாலன்றி இந்தியர் அங்கு சமத்துவமாயும் சந்தோஷமாயும் வாழ முடியாது.

ஆகையால் இன்னும் இந்திய சகோதரர்கள் இங்கும் அங்கும் தீவிரக் கிளர்ச்சி செய்து சமத்துவத்தில் வெற்றி பெறல் வேண்டும். இலங்கையில் 8 இலட்சம் இந்திய மக்களிருக்கிறார்கள். அவர்களது க்ஷேமத்தைப் பாதுகாப்பது தாயகமாப் இந்தியாவின் பெருங் கடமையாகும். இலங்கை அரசாங்கம் இந்தியர்களின் மீது ஏன் இவ்வளவு துவேசம்! எவ்வளவு நன்றிகெட்டதனம்!! இலங்கை அரசாங்கம் ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் ஒரு கண்ணில் வெண்ணெயையும் தடவுவது ஏனோ? இந்தியர்மீது கொண்டிருக்கும் இலங்கைச் சர்க்காரின் வஞ்சகச் சூட்சிகளை அகற்றினாலன்றி, அங்கு இந்தியர்கள் க்ஷேமமாயும் நிம்மதியாயும் வாழ்ந்திருக்க முடியாது, முடியாது

## பண்டித மோதிலால் நேரு

இந்த 11-வது பாரம் அச்சுக்குப் போகும் இத்தருவாயில், இந்தியாவின் தற்போதிய தலைவராகிய பண்டிதஜியும் கைது செய்யப்பட்டாரென அறிந்து வருந்துகிறோம். இவரைக் கைது செய்தது இந்தியாவையே கைது செய்ததாகக் கருதுகிறோம்.

கியாட்லாக் இனமாக அனுப்பப்படும்.

## நீங்கள்

# இ ள மை ப் ப ரு வ த் தை அடையவேண்டுமா?

அநேக பிரபுக்களிடத்திலும், ராஜாக்களிடத்திலும், தங்க மெடல், மரகத மெடல் முதலிய பரிசுகள் பெற்று ஜொலித்து விளங்குவதோடு, ஹரித்துவாரம் மௌன சாதுக்கள் பரமாம்ச சங்கத்திலும், தன் குருநாதர் ஸ்ரீமத் மங்களபுரி பாவாஜி மடாதி பதி அவர்களாலும், "வைத்திய சித்தன்"—சற்குரு" என்னும் பட்டப் பெயர் பெற்றவர். வைத்திய சாஸ்திரத்தை குரு முகத்தில் 20 வருஷ காலமாய் அனுபவத்தில் கற்றுணர்ந்தவர்.

# அசல் தங்க பஸ்பம்

## தாது புஷ்டிக்கு நிகரற்றது.

அதிக வயதாலும், பலஹீனத்தாலும், பல துர் அப்பியாசத் தாலும் சேர்ந்து போனதும், இழந்து போனதுமான ஆண்மை யைக் கெட்டிபடுத்தி, சப்த சாதுக்களுக்கும் வலுக் கொடுத்து, இல் வாழ்க்கையில் அதிக இன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

| | |
|---|---|
| 50 நாள் பற்பத்தின் விலை | ரூ. 36—0—0 |
| 25 ,, ,, ,, | ரூ. 18—0—0 |
| 12 ,, ,, ,, | ரூ. 9—0—0 |

மேற்படி பற்பத்திற்கு அனுபானம் மஹா வில்வாதி லேகியம்.

| | |
|---|---|
| 50 நாள் லேகியம் 2 சேர் விலை | ரூ. 20—0—0 |
| 25 ,, ,, 1 ,, ,, | ரூ. 10—0—0 |
| 12 ,, ,, ½ ,, ,, | ரூ. 5—0—0 |

**ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,**

சதானந்த மெடிகல் ஹால், பழனி, *S. I. Ry.*

முழு விவரம் தெரிய கேட்லாக் இனும்.

அநேக பிரபுக்களிடத்திலும், ராஜாக்களிடத்திலும தங்க மெடல், மரகத மெடல் முதலிய பரிசுகள் பெற்று ஜொலித்து விளங்குவதோடு ஹரித்துவாரம் மேளா சாதுக்கள் பரமாம்ச சங்கத்திலும், தன் குருநாதர் ஸ்ரீமத் மங்களபுரி பாவாஜி மடாதிபதி அவர்களாலும் "வைத்திய சித்தன்" சற்குரு என்னும் பட்டப் பெயரும் பெற்றவர். வைத்திய சாஸ்திரத்தை குரு முகத்தில் 20 வருஷம் வரை கற்றுணர்ந்தவர்.

## நீங்கள் ஏன் வெள்ளை வெட்டையால் கஷ்டப்படவேண்டும்?

நமது அசல்

# வெள்ளி பற்பம்

சாப்பிடுங்கள்.

பரீட்சைக்கும், பலனுக்கும், உத்திரவாதமுடையது. நமது அசல் வெள்ளி பற்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை, நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல், ஈ எரும்புகள் மொய்த்தல், சிணுக்கிருமல், தும்மல் விழுதல், வெட்டை வாய்வு, இடுப்பில் வாய்வு தங்கி யிருத்தல், சரீரம் இளைத்து சதா காலமும் ஜுரம் போல் சூடு தாங்கி யிருத்தல், கால், கை, கண் முதலிய இடங்களில் எரிச்சல் உண்டாகி தலை மாற்றிச் சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும். சரீரத்திற்கு நல்ல பலத்தையும், தாது புஷ்டியையும், சுத்தமான ரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான வேறு மருந்து கிடைப்பது அருமை. ஒரு மண்டலம் 48 நாள் பற்பத்தின் விலை ரூ. 15-0-0

அரை மண்டலம் 24 நாள் விலை ரூ. 7-8-0

**ஸ்ரீமத் சற்குரு மகாதேவ சுவாமிகள்,**

சதானந்த வைத்தியசாலை, பழனி,

**S. I. Ry.**



# "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0. தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,

11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்:பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

தாது புஷ்டியில் அடக்க முடியாத யானை பலம்!
நூறு வயதுக் கிழவனுயினும் தாது புஷ்டியில் வாலிபன்
ஆவான். பந்தயம்போட்டுப் பரீக்ஷிக்கக்கூடியது.

# அசல் தங்க செந்தூரம்

## —சொர்ன காம கேசரி லேகியம்—

ஒரு முறை 48 நாள் சாப்பிட்டால் ஆயுள்வரை அடக்க முடியாத தாது புஷ்டியை உண்டு பண்ணிவிடும். உடைந்து தண்ணீர் போல் ஓடும் இந்திரியத்தை இறுக்கிக் கட்டி மணியாக்கி நாடி நாம்புகளை முறுக்கேற்றி இல்லற இன்பத்தில் இடைவிடா ஊக்கத்தைக் கொடுக்கிறது.

காசம், க்ஷயம், நீரழிவு, கிருணி, அதிசாரம், வயிற்றுப் போக்கு, மாதி, பித்த மயக்கம், மூளை பலஹீனம், பசியின்மை, வெள்ளை, வெட்டை, கடுப்பு, தந்தி மேகம் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் குணமாகும். புத்திர சந்தான விர்த்தியைக் கொடுத்து ஆயுளை வளர்க்கும்.

48 நாளைக்கு லேகியமும் செந்தூரமும் ரூ 40—0—0
24 நாளைக்கு ,, ,, ரூ 22—0—0

## சித்தாதி யெண்ணை.

குஷ்டம், குறை நோய், குழிப் புண், கால் ஆணி, கபால குஷ்டம், சர்ம குஷ்டம், விஷ குஷ்டம், மதமதப்பு, தடிப்பு, மூக்கடைப்பு மூக்கு பள்ளம், வெண் குஷ்டம், செம் மேகத் தடிப்பு, கரு மேகம், ஊரல், நீர் வடிதல், படர் தாமரை, சூலை முடக்கு, கிரந்தி, வெள்ளை, குன்மம், வயிற்று வலி, சூதக வலி எல்லாம் 24 நாளில் குணமாகும். 1 புட்டி ரூ 5—8—0

## வங்க வெள்ளி பஸ்பம்.

எந்த மருந்துக்கும் வசப்படாத எவ்வித வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், புண், நாபிரணம், நீர் சுறுக்கு, தந்தி மேகம், புலால் மேகம், ஈ எறும்பு மொய்த்தல், மஞ்சள் வெள்ளை, கிழ் ரத்தம் விழல், கை கால் அசரிக்கை, மயக்கம் எல்லால் ஒரு வாரத்தில் குணமாகும். இந்த வியாதிக்கு இதற்கு மேலான மருந்தே கிடையாது. 1 புட்டி ரூ 12-0-0 ½ புட்டி ரூ 6-8-0

விலாசம்:—

**கே. எஸ். பதி. வைத்தியசாலை,**
பழனி, *S. I. Ry.*

**Wake up!** **Insure you must!!**

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட், ஆஜ்மீர்.

இது மிக்க பழமையானதும், நம்பிக்கையுள்ளதும், அதிக் லாபம் தரக்கூடியதும், ஏராளமான பாலிசிகளேயுடைய ஸ்தாபனமும் ஆகும். வருஷம் 1-க்கு ரூ. 1000 மதிப்புள்ள பாலிசிக்கு லாபம் ரூ. 22—8—0 கொடுத்திருக்கும் முதன்மையான கம்பெனி இதுவே. இன்றே இன்ஷியூர் செய்யுங்கள்.

கம்பெனியின் விசேடங்கள்:—

ஐவேஜ் பூராவும் கவர்ன்மெண்டு உத்திரவாதம் பெற்றது. செலவோ குறைவு. லாபமோ அதிகம்.

சந்தாதார்களின் நன்மையைக் கருதி நடத்திவரும் கம்பெனி. இதில் ஒரு பாலிசி எடுத்தால் அது அழிவில்லாப் பொக்கிஷமாகும்.

கம்பெனியின் சட்ட திட்டங்கள் மிகவும் இலகுவானவை. அவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானல் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதுங்கள்.

சீப் ஏஜண்டு:-

**S.** வெங்கட்டராம அய்யர், B.A., L.T., புதுத் தெரு, மதுரை.

லோகல் ஏஜண்டுகள்:—

**M.** பரிமணம் பிள்ளை,
உத்தமபாளையம் P. O.

**R.** வெங்கட்டராமய்யர்,
சாளீஸ்வர ரைஸ் மில்ஸ்,
உத்தமபாளையம்.

# "பாரதி"

## ஓர் தேசிய மாஸிகை.

சந்தா விபரம்.

உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ... 2—8—0
அல்லது 4 ஷிலிங்

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எம் மாதத்திலிருந்து சந்தாதாரரானலும் வருட ஆரம்பமாகிய ஜனவரி மாதத்திலிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

விலாசம்:—

மானேஜர், "பாரதி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt.